# தெணியான்



## நினைவகலா நினைவலைகள்

# தெணியான்



06.01.1942 - 22.05.2022

சமர்ப்பணமாக....

“முற்போக்கு எழுத்தாளர்கள் கலைத்துவத்தில் அதிக அக்கறை கொள்வதில்லை; என்ற குற்றச்சாட்டு, முன்னர் முற்போக்கு எதிர்ப்பாளர் களாலும் அண்மைக் காலங்களில் முற்போக்கு இலக்கிய அனுசரணை யாளர்கள் என்று கருதப்பட்ட திறனாய்வாளர்கள் சிலராலுங்கூட முன்வைக்கப்பட்டுள்ளது. இதனை மறுதலித்து, கலைத்துவ நேர்த்தியில் கவனஞ்செலுத்தி, அக்கலைத்துவ நேர்த்திக்காகக் கணிப்புப்பெறும் சிறுகதை ஆசிரியராகவும் நாவலாசிரியராகவும் முகிழ்ந்து வருபவர் தெணியான்.”

– கலாநிதி த. கலாமணி,
காலம் இதழ் 33

“தெணியான் டானியலின் “ஆக்க நிழல்” என்று கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. கருத்தியல் நிலையில் இருவருக்குமிடையே ஒப்புமைகள் காணப்பட்டாலும் இருவரதும் எழுத்துநடைக் (style) கோலங்கள் வேறுபட்டவை. டானியலிடத்து அதி தீவிரமான புலக்காட்சி யும், தெணியானிடத்து முரண்பாடுகளின் வேர்களைத் தேடும் புலக்காட்சியும் மேலோங்கியுள்ளன.”

– பேராசிரியர் சபா ஜெயராஜா,
ஜீவநதி இதழ் 106

“யாழ்ப்பாணத்து வடமராட்சி மக்களின் வாழ்வியலை, இன்ப துன்பங்களை ஒளிவுமறைவின்றிச் சொல்பவை இவரது எழுத்துக்கள்.”

– பா. ரஞ்சித், திரைப்பட இயக்குனர்,
தமிழ்நாடு, “நீலம்” ஏப்ரல் 22 இதழ்

# முகப்புரை

2022 மே மாதம் 22 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் சுமார் ஐந்து முப்பது மணியிருக்கும். சுட்டெரிக்கும் வெயில் தணியத் தொடங்கியவேளை, இதயத்தைச் சுட்டெரிக்கும் செய்தி காதில் வந்து வீழ்ந்தது.

ஆசை மாமா .......

திடீரென வீசிய குளிர்காற்று திரள் திரளாகக் கருமுகில்களைக் காவிவர, வைகாசி வெயிலால் வரண்டு கிடந்த நிலமெங்கும் வாரியிறைத்தது கனமழை. இடியோடு மின்னல் முழங்க, கொட்டித் தீர்த்தபின் சட்டென ஓய்ந்துகொண்டது. என்றுமில்லாத அசாதாரண நிகழ்வு அது!

இயற்கை தன் சோகத்தைத் தரையிறக்கிக்கொண்டதோ, தாகத்தைத் தணித்துக்கொண்டதோ!

ஆசைமாமா போய்விட்டார்.... !

அன்புக்குரியவர்களின் திடீர் மரணம் என்பது அனெஸ்தீசியா இல்லாமல் அங்க அவயங்களை அறுத்துத் துண்டிப்பது போன்றது. வார்த்தையால் விபரிக்க முடியாத கொடிய வலி அது! தாங்கமுடியாத அதே மனவலியோடுதான் இன்றும் ஆசைமாமா தெணியானின் இந்த நினைவாஞ்சலி மலருக்கு முகப்புரை எழுத முற்படுகின்றேன்.

உன்னதமான மனிதரும் உயிரிழக்க வேண்டும்தான் ஆனால் வெறும் சாவினால் நல்ல மனிதரது நற்பெயரைச் சாகடிக்க முடியாது. ஆசைமாமா தெணியானது மறைவு, உலகின் நாலாதிக்கிலும் விளைவித்த அதிர்வும் அதிர்ச்சியும் அவரது நாமம் காலாதீத வரம்பெற்று நீண்டகாலம் வாழும் என்ற உண்மையை நிறுவ உகந்த சான்றுகளாகும்.

தெணியான் மீது கொண்டுள்ள அளவிறந்த மதிப்பு, மரியாதை என்பன காரணமாக - தொலைக்காட்சிகள், வானொலிகள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் அவரது மறைவுச் செய்திக்குக் கொடுத்த முக்கியத்துவமும் முன்னுரிமையும் உலகளாவிய ரீதியில் வலைத்தளங்களும் சமூக ஊடகங்களும் சுமந்துவந்த கட்டுரைகளும், செய்திகளும், அஞ்சலிகளும், இரங்கல்களும் மெய்சிலிர்க்க வைத்தன. அவை யாவும் அவருக்குச் சமூகத்திலும் எழுத்துலகிலும் கிட்டிய அங்கீகாரங்களின் அடையாளங்கள்!

இவற்றையெல்லாம் ஒட்டுமொத்தமாக உற்றுநோக்கும்போது, ஆசைமாமா, “எங்கள் வீட்டு முற்றத்து மல்லிகையாக வாழ்ந்து போனாரே” என இப்போது எண்ணி மனம் ஒருகணம் சஞ்சலப்படுகிறது!

ஆயினும் தெணியான் போன்ற சமூகப் பொதுமகனின் மறைவைச் சதாகாலமும் எண்ணியெண்ணி வருந்தியழுவதை விடுத்து, அவர் தமக்கும், தமது குடும்பத்துக்கும், தாம் வாழ்ந்த சமூகத்துக்கும், முழு மானுடத்துக்கும் வழங்கிய பயன்மிகு பங்களிப்புகளுக்கு - ஆகக் குறைந்தது - நன்றியாக இருத்தலே அவருக்கு நாம் செலுத்தும் மிகப்பெரும் அஞ்சலியாக இருக்கும் என்பதை மனதிருத்தி அமைதியடைகின்றோம்.

அந்த நன்றிக் கடனின் ஓர் அங்கமாக இன்று இந்த நினைவாஞ்சலி மலரைத் தயாரித்து வெளியிடுகின்றோம். தெணியானின் மறைவினை அறிந்து அவரது அன்பர்கள், அபிமானிகள், இரசிகர்கள், வாசகர்கள், மாணவர்கள், உறவினர்கள் என பலத்தரப்பட்டோரும் விடுத்திருந்த அஞ்சலிச் செய்திகளையும், இரங்கற் செய்திகளையும், அனுதாபச் செய்திகளையும் மிகுந்த நன்றியுடன் ஒன்றுசேர்த்து, ஒரு திரட்டாகத் தயாரித்திருக்கிறோம்.

எமது கண்களுக்கெட்டிய, கைகளில் அகப்பட்ட செய்திகள் மட்டுமே இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. செய்திகளின் பருமன், கூறியது கூறல், சொல், பொருள், பொருத்தப்பாடு போன்றவற்றைக் கருத்தில் கொண்டு, சிற்சில இடங்களில் செவ்விதாக்கம் செய்திருக்கின்றோம்.

“தெணியான் நினைவகலா நினைவலைகள்“ என்னும் மகுடத்துடனான இந்த நினைவாஞ்சலி மலர்த் தயாரிப்பில் பங்களித்த அனைவருக்கும் - குறிப்பாக மிகக் குறுகியகால இடைவெளிக்குள் இதனை அழகுற அச்சுப் பதிவுசெய்து உதவிய சகோதரர், ஜீவநதி ஆசிரியர் க. பரணீதரன் அவர்களுக்கும் - எமது குடும்பத்தின் சார்பில் எனது மனம் கனிந்த நன்றி!

**தேவகி ரமேஸ்வரன்,**
தெணியகம், பொலிகண்டி

வெளியீடு

# எனது தெணியான்

அமரர் தெணியான் என்னுடன் நெருக்கமான உறவைக் கொண்டிருந்தவர். நான் அவரது படைப்புக்கள் பலவற்றைப் படித்திருக்கிறேன். அவருடன் அவை பற்றி உரையாடி இருக்கிறேன். தான் எழுதத் தொடங்கியதன் நோக்கத்தை எங்கும் வெளிப்படையாக கூறிவருபவர். அந்த நோக்கத்தில் இருந்து சிறிதும் வழுவாது எழுதி வந்தவர். தனது படைப்புக்களில் வரும் பாத்திரங்கள் பற்றி, அந்தச் சூழல்களைப் பற்றியெல்லாம் என்னுடன் உரையாடியுள்ளார். புதுமைப்பித்தனின் மொழியிலே சொல்வதானால் “அவர் கண்டது, கேட்டது, காண விரும்பியது, காண விரும்பாதது” அவற்றைத்தான் இலக்கியமாகப் படைத்தார். அவரது இலக்கிய ஆக்கம் பற்றி பல்வேறு ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன. நான் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றியபோது தெணியானின் படைப்புக்கள் பற்றிய பல ஆய்வுகளை மாணவர்களைக் கொண்டு செய்வித்திருக்கிறேன்.

தெணியான் பல்பரிமாண ஆளுமை உடையவர். நாவல், சிறுகதை, கட்டுரை, விமர்சனம், மேடைப்பேச்சு முதலான பல துறைகளிலும் முத்திரை பதித்தவர். அவர் மிகச் சிறந்த தமிழ் ஆசிரியர். மாணவர்களுக்குச் சிறப்பாகக் கற்பித்துப் பெரும் புகழ் பெற்றவர். இவரது கற்பித்தற் திறமை பற்றி இவரிடம் பயின்ற மாணவர்கள் வாயூற ஊறக் குறிப்பிடுவார்கள்.

அவரது கம்பீரமான தோற்றம், செம்மையான சிறப்பான ஆடை அணியும் வழக்கம், நெஞ்சிற்பட்டதை, தான் சரியானதெனக் கண்டதை அஞ்சாது கூறும் ஆளுமை, மனம் விட்டுப்பழகும் மாண்பு, மதிக்க வேண்டியவர்களை மதித்துப் பழகுதல், நண்பர்களின் வெற்றியைக் கண்டு மகிழ்தல், பாராட்டுதல், இளைய தலைமுறையினரை ஊக்குவித்து உரமூட்டி வளர்த்தல் முதலான பல நற்பண்புகளை நான் அவரிடம் கண்டேன்.

அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறேன்.

பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா

* * *

# தெணியானும் சென்றார்

தெணியானை சில வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் போன போது பொலிகண்டியிலுள்ள அவரது வீடு சென்று பார்த்து வந்தேன். பின்னர் அவரது "குடிமைகள்" நாவலுக்கு கொடகே பரிசு கிடைத்தபோது 2014 இல் கொழும்பில் அவரைக்கண்டு பேசினேன். அதுவே அவரை நான் சந்திக்கும் இறுதிச் சந்திப்பு என நினைத்திருக்கவில்லை. கொடகே நிறுவனம் 2014 இல் சில சிங்கள தமிழ் இஸ்லாமிய மக்களிலிருந்து வயது முதிர்ந்த சில கலை இலக்கியவாதிகளைத் தெரிந்தெடுத்து, அவர்களின் வாழ்நாள் செயல்களுக் காகக் கௌரவித்தது. அக்கௌரவம் எனக்கும் தரப்பட்டது. அந்த விழாவில் சிறந்த நூல்களுக்கான விருதுகளும் வழங்கப்பட்டன. நூலாசிரியர்களைக் கௌரவித்து சின்னம் வழங்கும் பொறுப்புகள் ஏற்கனவே கௌரவிக்கப்பட்டு, மேடையிலமர்ந்திருந்த சிலரிடம் ஒப்படைக்கப்பட்டன.

அவ்விழாவில் தெணியான் தனது "குடிமைகள்" எனும் நாவலுக் கான பரிசு பெற வந்திருந்தார். அவர்க்கான சின்னம் வழங்க என்னையே அழைத்தனர். அது எனக்குக் கிடைத்த ஓர் அரிய சந்தர்ப்பம் ஆகும். வழங்கும் போது நான் அவரிடம் கூறினேன்.

"உங்களுக்கு இந்த விருதை வழங்கக் கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு நான் மிகவும் மகிழ்கிறேன்." பரிசுச் சின்னத்தை என்னிடமிருந்து பெற்ற அவர் பின்வருமாறு கூறினார். "உங்கள் கையால் இதனைப் பெறுவதற்காக நான் மிக மிக மகிழ்கிறேன்."

இருவருமே மகிழ்ந்த இனிய பொழுது அது! அதுவே எமது இறுதிச் சந்திப்பு.

அடக்கப்பட்ட மக்களின் துன்பதுயரங்களை வாழ்நாள் பூராவும் தன் நூல்களில் கொணர்ந்தமை மாத்திரமன்றி, போராட்டக் களத்திலும் நின்றவர் தெணியான்.

அடக்கப்படுவோர் அனைவர்க்காகவும் பேசும் தெளிவு அவரிட மிருந்தது. அவரது "பொற்சிறையில் வாழும் புனிதர்கள்" எனும் நூல் பாரம் பரியம் எனும் பழக்கத்தாலும் சமூக சம்பிரதாயங்கள் எனும் பொன் விலங்கா லும் வாழமுடியாது துயருறும் ஏழைப் பிராமணர்களைப் பற்றியது. அடக்கப்படு வோர் எங்கிருந்தாலும் அவர்கள் யாவரேயாயினும் அவர்கள் பக்கமே தெணியான் நின்றார். இதனைப் புரிந்தால் தான் தெணியானையும் புரிந்து கொள்ளலாம்.

தெணியானை முதன் முதலில் நான் 1975 களில் சந்திக்கிறேன். இற்றைக்கு 47 வருடங்களுக்கு முன்னர். சந்தித்த இடம் ஸ்ரான்லி ரோட் ஸ்ரார் கறாஜ். கராஜின் உரிமையாளர் நாவலாசிரியர் டானியல். டானியலே எனக்கு

தெணியானை அ றிமுகம் செய்து வைக்கிறார்.

பின்னர் நான் யாழ்பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இருந்த போது தெணியான் பேராசிரியர் சிவத்தம்பியைச் சந்திக்க நுண்கலைத்துறை அறைக்கு அடிக்கடி வருவார். நீண்ட நேரம் இருவரும் பேசுவர். தெணியான் மீது சிவத்தம்பி மிகுந்த மதிப்பும் அன்பும் கொண்டிருந்தமையை நான் நேரில் கண்டேன். "என் நண்பனடா, அயல் ஊரவனடா" என்று சிவத்தம்பி கூறுவார். தெணியான் பற்றி டானியல் என்னிடம் கூறியவை அதிகம்.

டானியலின் "பஞ்சமர்" நாவல், யாழ்ப்பாண வாழ்க்கைப் பரிச்சய மற்ற எமக்கு யாழ்ப்பாணப் பண்பாட்டின் இன்னொரு பக்கத்தைக் காட்டியது. அது பேசாப்பொருள்.

அவை பேசப்பட்டபோது தமிழ்ச்சமூகம் அதிர்ந்து போனது. அந் நாவலில் கூறப்படும் சம்பவங்கள், கதைகள் அனைத்தும் டானியலின் கற்பனை என சிலர் என்னிடம் கூறியும் உள்ளனர். ஆனால் அவை அத்தனையும் "நான் கண்டும் கேட்டுமுள்ள உண்மைகள்" என்பார் டானியல். நாவலில் கூறாத பல கதைகளை அவர் எம்மிடம் கூறியுள்ளார். "பஞ்சமர்" நாவல் சனாதனிகளினதும் பண்பாட்டுக் காவலர்களினதும் பலத்த கண்டனதிற் குள்ளானது. எதிர்வாதங்கள் பல புரிந்தனர், அது இலக்கியமே இல்லை எனவும் கூறினர், வக்கிரம் என்றனர்.

அவர்களின் கண்டனத்திற்கு டானியலின் பதில் பஞ்சமர் இரண்டாம் பாகம் எழுதியதுதான். மூன்றாம் பாகமும் எழுத அவர் எண்ணியிருந்தார். அவரது உடல் நிலை அதற்கு இடம் தரவில்லை. "மூன்றாம் பாகத்தை எழுதும் வல்லமையும் துணிவும் விடயஞானமும் உள்ளவர் தெணியானே" எனப் பகிரங்கமாக டானியல் கூறியுமுள்ளார்.

டானியலின் போர்க்குணங்கள் சமூக அங்கதம் எனும் குணாதி சயங்கள் தெணியானிலும் உண்டு. அவ்வகையில் டானியலின் வாரிசு தெணியான் என்பதில் தவறில்லை என்றே நினைக்கிறேன். "குடிமைகள்" எனும் தெணியானின் நாவல் அவர் டானியலின் வாரிசு என்பதற்கான நிரூபணம்.

சமூகப் பிரச்சனைகளினது ஆணிவேரை இனம் கண்டு எழுதி யோருள் தெணியானும் ஒருவரானார். தெணியான் என்னைவிட ஒரு வயது மூத்தவர். அவ்வகையில் அண்ணர். "பழுத்த ஓலைகள் விழுவது நியதி" என முன்னரும் எழுதியுள்ளேன். இப்போது இன்னொரு பழுத்த ஓலையும் விழுந்தது.

டானியலின் வாரிசு தெணியானானால், தெணியானின் வாரிசு யார் என்ற கேள்வியும் எழுகிறது.

"அமைதியான மனம் ஆரோக்கியமற்ற மனம். அமைதியற்றுக் கொதிக்கும் மனமே ஆரோக்கியமான மனம்" எனச் சொன்னவர் டால்ஸ்டாய்.

சமூகக் கொடுமைகள் கண்டதானால், அனுபவித்தமையினால் வரும்

மனக் கொதிநிலை அது.

ஆரோக்கியமான, மிகுந்த ஆரோக்கியமான மனம் கொண்ட நண்பர் தெணியான் அவர்களே –

காலம் உங்களுக்கிட்ட கடமை முடித்துச் செல்கிறீர்கள். சென்று வாருங்கள்.

உங்கள் உடலை எரிப்பார்களோ புதைப்பார்களோ அறியேன். புதைப்பின் –
அந்தப் புதைகுழி அமைதியின்மையினால் அதிரும்!
எரித்தால் –
அந்தத் தீச்சுவாலை அமைதியின்மையினால் அதிரும்!
அந்த அதிர்வில் தெணியான் தெரிவார்!

பேராசிரியர் சி. மௌனகுரு

* * *

# அறம் சார்ந்து அரசியல் சமூக நீதிக்காக உழைத்த அமரர் தெணியானுக்கு அஞ்சலி மரியாதை!

ஈழத்தின் இலக்கிய பேராளுமைகளில் ஒருவரான
தெணியான் அவர்களின் இழப்புச் செய்தியறிந்து துயரடைகின்றேன்.
சுதந்திரமான இலக்கியங்கள் படைக்கப்பட வேண்டும்,
நீதிக்காகக் குரல் எழுப்பும் மக்கள் மனங்களின்
குரலாக அவைகள் ஒலிக்க வேண்டும்....
அரசியல் சமூக பொருளாதார மாற்றங்களை உருவாக்க
இலக்கியங்கள் பங்காற்ற வேண்டும்...
இத்தகைய எமது இலட்சிய கனவுகளுக்கு ஏற்றவாறு
ஈழத்து இலக்கியத் தளத்தில் தனித்துவமாக நின்று செயலாற்றியவர்
அமரர் தெணியான் அவர்கள்....
போரியல் இலக்கியங்கள் பலவும்
மக்களின் அவலங்கள் குறித்து எதுவும் பேசாது
வெறுமனே வீரப்பிரதாபங்களை மட்டுமே
பேசி வந்த காலச்சூழல் ஒன்றில்....
போர்ச்சூழலிலும் அரசியல் சமூக நீதியை
தன் உயிர் மூச்சாகக் கொண்டு
மக்களின் சமூக அவலங்களை இலக்கியமாக்கியவர்
அமரர் தெணியான் அவர்கள்.

ஈழத்தின் முற்போக்கு இலக்கிய முன்னோடிகளில் ஒருவராக...
பொதுவுடைமைத் தத்துவத்தை உறுதியுடன் ஏற்றவர்களில் ஒருவராக...
இடதுசாரி முற்போக்குச் செயற்பாட்டுச் சக்திகளை ஆழ நேசித்தவராக...
அந்தவகையில், எமது அரசியல் செயற்பாடுகளுக்கு ஆதரவு அளித்தவராக..
இறுதி மூச்சு வரை உறுதியுடன் வாழ்ந்தவர்...
அவரது கனவுகள் வெல்லும் காலச்சூழல் கனியட்டும்.
அவரது படைப்பிலக்கியங்கள் எம்மிடை வாழ்வது போல்
நினைவுகளும் நீடித்து வாழட்டும்...
இழப்பின் துயரில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினர்...
உறவினர்கள், இலக்கிய நண்பர்கள், கல்விச் சமூகத்தினர்
சகலருக்கும் ஆறுதல் கூறுகின்றேன்.
அமரர் தெணியான் அவர்களுக்கு
ஆழ்மன அஞ்சலி மரியாதை....!

டக்ளஸ் தேவானந்தா
கடற்றொழில் அமைச்சர்.

* * *

# இறுதிவிடைபெற்றது, இலக்கிய உலகின் பேராளுமை

ஈழத்து இலக்கியப் பரப்பின் முதுபெரும் ஆளுமையான "தெணியான்" என்று அறியப்படும் ஓய்வுநிலை ஆசிரியர் திரு. கந்தையா நடேசன் அவர்கள் தனது 80ஆவது அகவையில் மறைந்த செய்தி கலை, இலக்கியப் பரப்பினரிடையேயும், அவரையும், அவரது படைப்புக்களையும் ஆழ நேசித்தவர்களிடையேயும் ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தியிருக்கிறது.

யாழ். வடமராட்சி, பொலிகண்டிப் பிரதேசத்தின் "தெணி" என்னும் சிற்றூரைப் பூர்வீகமாகவும், வாழ்விடமாகவும் கொண்டிருந்த இவர், 1964 இல் விவேகி என்னும் சிற்றிதழில் வெளியான "பிணைப்பு" சிறுகதை மூலம் தனது எழுத்துலகப் பிரவேசத்தை ஆரம்பிக்கும் போது, "தெணி" என்னும் தன் ஊரின் அடையாளத்தை "தெணியான்" என்னும் தனக்கான அடையாளமாக்கி யிருந்தார். ஆனால் ஓரிரு ஆண்டுகளிலேயே அந்த ஊரின் அடையாளமாக தானே மாறி, பின்வந்த நாட்களில் பரந்துவிரிந்த தமிழிலக்கியப் பரப்பின் ஓர் தனித்த அடையாளமாக, தவிர்க்க முடியாத ஆளுமையாக மாறிப்போயிருந்தார்.

அக்கால யாழ்ப்பாணச் சமூகத்தோடு பின்னிப் பிணைந்திருந்த சாதிய ஒடுக்குமுறைக்கும், வர்க்க முரண்பாடுகளுக்கும் எதிரான முற்போக்கு

எழுத்தாளர்களாக யாழ்ப்பாணத்திலிருந்தே முகிழ்ப்புப்பெற்ற கே. டானியல், பேராசிரியர் கா. சிவத்தம்பி, மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா உள்ளிட்ட முற்போக்கு எழுத்தாளர்கள் வரிசையில், ஈழத்து முற்போக்கு இலக்கியத்தின் செல்நெறி வெளிப்பாடுகளை மையப்படுத்தி யாழ்ப்பாணச் சமூகத்தின் வெவ்வேறுபட்ட உணர்திறன்களை, வாழ்வியல் போக்குகளை அடையாளம் காட்டுவனவாக அமைந்திருந்த இவரது படைப்புக்கள் பெரும்பாலும் சாதியத்தின் பிடிக்குள்ளான மனித வாழ்வின் அழுத்தங்களாலும், துடிப்புக்களாலும், போராட்டங்களாலும் கட்டமைக்கப்பட்டிருந்தமையே அவை அடித்தட்டு மக்களையும் சென்றடையக் காரணம்.

வெறுமனே ஒரு கலை இலக்கியப் படைப்பாளியாக அல்லாமல், மானிட விடுதலை நோக்கிய சமூக ஒன்றிணைவின் குரலாகவே அரை நூற்றாண்டுக்கும் மேலான தனது இலக்கியப் பணியை அவர் ஆற்றிச் சென்றிருக்கிறார். இலங்கை அரசின் மதிப்புறு உயர் விருதான சாகித்திய ரத்னா மற்றும் கலாபூஷணம் உள்ளிட்ட பல விருதுகளைத் தனதாக்கிக் கொண்ட தெணியான், 150இற்கும் மேற்பட்ட சிறுகதைகள், 30 இற்கும் அதிகமான கவிதைகள், 14 நாவல்கள் - குறுநாவல்கள், 5 வானொலி நாடகங்கள் என்பவற் றோடு, நூற்றுக்கணக்கான கட்டுரைகள் மற்றும் விமர்சனங்களைப் படைத் தளித்ததனூடு, ஈழத்துக் கலை இலக்கியப் பரப்பில் என்றென்றைக்கும் நீங்கா இடம் பிடித்துள்ளமை, ஒரு படைப்பாளியாக அவரது படைப்புக்களுக்குக் கிட்டி யிருக்கின்ற வெகுமதியும், அங்கீகாரமுமே!

இருந்தபோதும், ஈழ இலக்கிய வெளிக்கு அப்பால் தமிழக வாசகர் களையும் தனது படைப்புக்களால் கவர்ந்திழுத்த தெணியானுக்கும், அவரது படைப்புக்களுக்கும் இலங்கையில் சரியான அங்கீகாரம் வழங்கப்பட வில்லையோ என்ற ஆதங்கமும் எம் நெஞ்சை நெருடாமலில்லை. ஆனால், தனது முனைவர் பட்டப்படிப்புக்காக கலாநிதி அல்லைப்பிட்டி திருநாவுக்கரசு அவர்களால் ஈழத்து இக்கிய முன்னோடியான டானியலின் படைப்புக்கள் முழுமையாக ஆய்வுசெய்யப்பட்டதைப் போன்று, இனிவரும் காலங்களில் தெணியானின் படைப்புக்களும் ஆய்வுக்கு உட்படுத்தப்படுவதன் மூலம், அவரும் அவரது படைப்புக்களும் இப்போதிருப்பதைக் காட்டிலும் இன்னும் அதிகமாக ஆராதிக்கப்படும் என்ற ஆழ்மன நம்பிக்கையோடு, அன்னாரது ஆத்மா அமைதிபெறப் பிரார்த்திக்கும் அதேவேளை, இப்பேரிழப்பால் பரிதவித்து நிற்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும், இலக்கிய உறவுகளுக்கும் என் அனுதாபங்களைப் பகிர்ந்து கொள்கிறேன்.

சிவஞானம் சிறீதரன்

பாராளுமன்ற உறுப்பினர், கிளிநொச்சி

* * *

## ஆழ்ந்த அஞ்சலியும் வீரவணக்கமும்

அமரத்துவம் அடைந்த கந்தையா நடேசன் அவர்களின் பாரியார், பிள்ளைகள், உறவினர்கள் அனைவருக்கும் எனது வணக்கம். இராணுவப் படையைச் சேர்ந்தவன் என்ற வகையிலும், இலங்கைப் பிரஜை என்ற வகையிலும், அவர்களது குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இப்பெரியார் ஓர் ஆசிரியராக நீண்ட காலம் கடமையாற்றி, ஆற்றிய சேவைகளுக்காக நான் முதற்கண் எனது நன்றியையும் வணக்கத்தையும் செலுத்துகிறேன்.

அடுத்ததாக, நான் இங்கு பெருமையுடனும் மகிழ்ச்சியுடனும் கூறுவதற்கு விரும்பும் இன்னொரு விடயம் என்னவென்றால், ஆசிரியப் பணிக்கு அடுத்ததாக அவர் நாடளாவிய ரீதியில் இலக்கியப் பணியை ஆற்றிப் பல விருது களை வென்றுள்ளார். இலக்கியப் பணிக்கென அவர் இலங்கையின் அதியுயர் கௌரவமான சாகித்தியரத்னா பட்டத்தையும் சாகித்ய மண்டலப் பரிசையும், பல மாகாண, மாவட்ட விருதுகளையும் பெற்றதாகவும் நான் அறிகிறேன். ஆகையால் அமரர் அவர்கள் இந்தப் பிரதேசத்திற்கு மட்டுமேயானவர் அல்ல. அவரது படைப்புக்கள் இலங்கை பூராகவும் வாழும் மக்களுக்கும் பயன் மிக்கவையாகவும் பிரபல்யமானவையும் ஆக இருந்துவந்துள்ளன என்ற வகையில், நாடு முழுவதற்கும் பெருமை தேடித் தந்தவர்.

அமரருடைய இழப்பு இலங்கை பூராகவும் இலக்கியத்துறைக்கு ஏற்பட்ட பெரிய இழப்பு என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இலங்கை அரசாங்கம் சார்பாகவும் இராணுவப்படை சார்பாகவும் எனது ஆழ்ந்த அஞ்சலியையும் வீரவணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கேர்ணல் சிந்தக விக்கிரமசிங்க**

பருத்தித்துறை இராணுவமுகாம் பொறுப்பதிகாரி

(மரணச்சடங்கில் ஆற்றிய அஞ்சலியுரையின் மொழிபெயர்ப்புச் சுருக்கம்)

* * *

## சமூகச் சிற்பியாக விளங்கியவர்

ஈழத்தின் புகழ்பூத்த எழுத்தாளரான க.நடேசு என்ற இயற்பெயரை உடைய தெணியான் அவர்களின் மறைவுக்கு எனது ஆழ்ந்த இரங்கலை முதற்கண் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தெணியான் என்ற பெயரைக் கேட்டவுடனே அவரது கம்பீரமான

தோற்றமும் குரலுமே எனது ஞாபகத்திற்கு வந்து சேர்கின்றது. கரவெட்டி பிரதேச செயலராகப் பணியாற்றிய காலத்தில் அவரோடு மிக நெருங்கிப்பழகும் வாய்ப்புக்கிடைத்தது. கலாசாரப் பேரவையின் செயற்பாடுகளிலும் திருவுடையாள் மலர் வெளியீட்டிலும் அவரது பங்களிப்புக் கணிசமானது. எதையும் அஞ்சாது நேரே கதைக்கும் துணிவும் சரியானதைச் செய்யவேண்டும் என்ற தெளிவும் அவரிடம் முதன்மைபெற்றிருப்பதைக் கண்டிருக்கின்றேன்.

1973 ஆண்டு விடிவை நோக்கி என்ற நாவல் வெளியீட்டில் இருந்து ஐந்து தசாப்தகாலமாக தனது நூல்களாலும் எழுத்துகளாலும் சமூகத்தை ஊடுருவி வெளிப்படுத்திய ஒரு சாதனையாளரின் மறைவு எமது சமூகத்திற்கு நேர்ந்திருக்கும் பேரிழப்பு ஆகும். ஒடுக்கப்பட்டவர்களுக்கு எதிரான தனது குரலை யாருக்காகவும் குறைத்துவிடாமல் முற்போக்கு அணியின் எழுத்தாள ராகத் தன்னைப் பரிணமிக்கச் செய்தவர். பேராசிரியர் கா. சிவத்தம்பி முதலான பேராசிரியர்களின் நேசத்தினைப் பெற்றவர். கே. டானியல், டொமினிக்ஜீவா ஆகிய ஜாம்பவான்களோடு சமதையாகத் தன்னையும் விகசிக்க வைத்து தனக்கான இடத்தினை நிறுவியவர்.

கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் நான் பிரதேச செயலாளராகப் பணியாற்றிய காலத்திலேயே (2013) அரசின் உயர்விருதான சாகித்திய ரத்னா விருது இவருக்கு வழங்கப்பட்டிருந்தது. கரவெட்டிக்கு தேசிய ரீதியில் பெருமையினைத் தேடித்தந்த மூத்த எழுத்தாளர் இன்று எம்மத்தியில் இல்லை என்பது வேதனையைத் தருகின்றது. பதினான்கு நாவல்களையும், பல சிறுகதைத் தொகுதிகளையும், கட்டுரைத்தொகுதியினையும் வெளியிட்டு சமூகத்தினைப் பற்றிய தனது சிந்தனைகளை வெளிப்படுத்திக்கொண்டே இருந்தவர். மேடைகளில் கேட்டார் பிணிக்கும் தகையவாய் கேளாரும் வேட்ப மொழியும் ஒருவராக விளங்கினார். சொல்லாலும் எழுத்துகளாலும் சமூகச் சிற்பியாக விளங்கிய இவர், தார்மீகக் கோபத்தையும், சிந்தனைகளையும் இயல்பாகவே கொண்டிருந்தார் என்பதை அவரது எழுத்துகளில் காண முடிகின்றது.

என்னோடு உரையாடும் போதெல்லாம் அவரது பிரதேசம் பற்றிய கனவுகளையும், ஆவணமாக்கல் தொடர்பான ஆசைகளையும் கேட்டிருக் கின்றேன். அவர் நம் மத்தியில் இல்லை என்றாலும் அவரது எழுத்துகள் சமூகத்தை நோக்கிய உரையாடல்களை நிகழ்த்திக்கொண்டே இருக்கும் என்பது ஓர் ஆறுதலைத் தருகின்றது.

அவரது மறைவால் வாடியிருக்கும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. ச. சிவஸ்ரீ**

பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், தெல்லிப்பழை

* * *

# நாமம் நீடூழி வாழ்க!

சமூகத்தின் ஏற்றத்தாழ்வைச்
சாடியே... அவற்றை மாற்றத்
தமதெழுத்ததனை நேற்றும்
தந்தவர் கதைகள், நாவல்
தமையே போர்வாளாய்க்கொண்டு
சமராடி ஒளிர்ந்து இன்று
அமரராய் ஆன ஐயா
“தெணியானுக்கு” அஞ்சலிகள்!

நிமிர்நடை, நெடுத்த தோற்றம்,
நேர்கொண்டபார்வை, கொள்கைச்
சமரசம் செய்யாப் பேச்சு,
தளராது முயலும் வீச்சு,
எமனுக்கும், எவர்க்கும் அஞ்சாது
எண்ணத்தை எழுத்தாய் மாற்றிச்
சமைத்திடல், வாழ்வில் செய்த
சாதனை, வியக்கவைக்கும்!

அடங்கியே நலிவோர் துன்பம்
அகிலத்துக்குரைத்த காதை,
ஒடுக்கவேபட்டோர் ஏக்கம்
உலகுக்கு உணர்த்தும் நாவல்,
படைத்துமே... எழுத்தை “நான்கு
படையாக்கி“ ஜெயித்தவீரர்!
அடங்காத கலைஞர், யார்க்கும்
ஆகர்ஷம் ஆன அன்பர்!

எண்பத்து இரண்டு ஆண்டு
ஏற்றங்கள் கண்டு வாழ்ந்து,
தன் சுற்றம் குடும்பம் காத்து,
சமூகத்தின் குரலாய் ஆர்த்து,
இன்றைய தலைமுறைக்கும்
கலங்கரை என்று நேற்றும்
நின்ற... நம் “தெணியான்” ஐயன்
நாமம் நீடூழி வாழ்க!

த. ஜெயசீலன்

* * *

# தெணியான் சேர் மறைந்தார்!

தெணியான் அவர்கள் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் பெற்றுத்தந்த உறவு. அதற்கு முன்னதாக ஒரு வாசகனாக நின்று அவரை அறிவேன் அவரது படைப்புகள்மூலம். மூத்த தலைமுறையினரின் மறைவு தடுக்க முடியாது என்றாலும், எனக்கெல்லாம் அவர்களின் இழப்பு பேரிழப்பு தான்.

தெணியான் அவர்களிடம் இருந்த இரண்டு அம்சங்கள் மிக முக்கியமானவை.

ஒன்று - அவர் வாழ்ந்த சூழலான யாழ்ப்பாணத்தில் முற்போக்குச் சக்திகளுக்கு ஏற்பட்ட நெருக்கடிகளுக்கு மத்தியிலும் சொந்த மண்ணை விட்டு விலகாது போராடியவர். அவ்வப்போது முற்போக்கு இலக்கியத்திற்கு எதிரான, அவதூறுகள், கருத்துகள், பிரச்சனைகள் வந்தபொழுது, தனது பலமான கருத்துகளை முன்வைப்பதில் பின் நிற்கவில்லை, மௌனம் காக்கவில்லை.

இரண்டு - ஒடுக்கப்பட்ட மக்களுக்காகக் குரல் கொடுத்தவர். அதுவும் வெறும் கோஷம், பிரசாரம் என்பதற்கு மேலாகத் தன் படைப்புகள் மூலம் முற்று முழுவதுமாக அச்சமூகத்தற்காக எழுதியவர். அதுமட்டுமல்ல முற்போக்குச் சக்தி களுக்கு எதிரான பிற்போக்குச் சக்திகளை எதிராகப் போராடியவர். சாதித்திமிர் பிடித்த சக்திகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தவர். இவ்வளவுக்கும் யாழ்ப்பாணச் சூழலில் விட்டு விலகாது இன்றும் தன்னை தக்கவைத்துக் கொண்டவர்.

ஈழத்து தமிழ் இலக்கியத் தளத்தில் முற்போக்கு சிந்தனையுடனும். சாதிய அரசியலின் கொடூரத்தைபற்றி எழுதியவர்களான டானியல், டொமினிக் ஜீவா ஆகியோருடன் இணைத்துத் தவிர்க்க முடியாமல் பேசப்பட்டவர்.

என்மீது மாறாத அன்பு கொண்டவர். மல்லிகையில் எனது அட்டைப் படம் வந்தபொழுது, ஜீவா அவர்கள் என்னிடம் யாரைக்கொண்டு அட்டைப்படக் கட்டுரை எழுதுவது என்று உரையாடியபொழுது, எடுத்தவுடன் நான் தெணியான் அவர்களின் பேரைச் சொன்னேன். அந்தக் கட்டுரையில் முழுமையாக என்னை எடுத்துக்காட்டி இருந்தார்.ஜீவாமீது அவர் பெரும் அன்பையும் மதிப்பையும் கொண்டிருந்தார். அதை நான் நேரில் பார்த்தவன். ஜீவா யாழிலிருந்து மல்லிகை வெளியிட்ட கால கட்டத்தில் மல்லிகை நடத்த பெரும் உதவியாக இருந்தவர். இப்படி தெணியான் அவர்களைப் பற்றி நீண்டதாகப் பேசலாம்.

ஜீவா, நந்தினி சேவியர் ஆகியோரின் இழப்பைத் தொடர்ந்து, தெணியான் அவர்களின் மறைவு என்னைத் தனிமைப்படுத்தி இருக்கிறது.

அவரது மறைவுக்காக இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் சார்பாகவும், முற்போக்கு இயக்கத்தின் சார்பாகவும் எனது ஆழ்ந்த அஞ்சலியை முன்வைக்கிறேன்.

**மேமன் கவி**

* * *

# எழுத்தாளர் தெணியான் மறைந்தார்!

எழுத்தாளர் தெணியான் மறைந்தார். வர்க்க / வர்ண விடுதலைக்காக ஒலித்த போர்க்குரல் ஓய்ந்து விட்டது. ஈழத்து இலக்கிய குடும்பத்தின் மூத்த சகோதரன் தெணியான் விடைபெற்றார்! வடபுலத்தின் அடிநிலை மக்களின் விடுதலைக்காகவும் பொற்சிறையில் வாடும் புனிதர்களுக்காகவும் குரல் கொடுத்தவர்!

கந்தையா நடேசன் என்ற இயற்பெயர் கொண்டவரும், இலக்கிய ஊடகத்துறைகளில் தெணியான் என அழைக்கப்பட்டவருமான ஈழத்தின் மூத்த இலக்கிய ஆளுமை 22 -05- 2022ஆம் திகதி தமது 80 வயதில் வடமராட்சி, கரணவாய் வடக்கு இல்லத்தில் மறைந்தார்.

06-01-1942ஆம் திகதி வடமராட்சி, பொலிகண்டியில் கந்தையா - சின்னம்மா தம்பதியருக்குப் பிறந்த நடேசன், இலக்கிய உலகில் பிரவேசித்ததும் தெணியான் என்ற பெயரில் எழுதத்தொடங்கி, அதுவே நிலைத்துவிட்டது.

தான் கல்வி கற்ற கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியிலேயே நீண்டகாலம் ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர். மற்றும் ஒரு மூத்த எழுத்தாளர் கே. டானியலின் வாரிசு எனவும் அவர் வர்ணிக்கப்பட்டவர்.

நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகளும் பல நாவல்களும், விமர்சனக் கட்டுரைத் தொகுதிகளையும் தமிழ் இலக்கியத்திற்கு வரவாக்கியிருக்கும் தெணியானின் “பாதுகாப்பு” என்ற சிறுகதை யாழ்ப்பாணத்திலிருந்து வெளி யாகும் ஜீவநதியில் வெளிவந்தது. இச்சிறுகதை தற்போது இலங்கைப் பாடசாலைகளில் 11ஆம் ஆண்டு மாணவர்களுக்கான தமிழ்ப் பாடநூலிலும் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து முன்னர் வெளியான விவேகி இதழில் 1964 இல் தெணியானின் முதல் சிறுகதை “பிணைப்பு” வெளியாகியது. அதனைத் தொடர்ந்து, மல்லிகை, ஞானம், யாழ். முரசொலி, வீரகேசரி, தினக்குரல் உட்பட, பல இதழ்களில் அயராமல் எழுதியிருப்பவர். இவருடைய “கழுகுகள்” (நாவல்) “சொத்து“ (சிறுகதைத் தொகுதி) “குடிமைகள்” (நாவல்) என்பன தமிழ்நாட்டில் பிரபல பிரசுர நிறுவனங்களான நர்மதா பதிப்பகம், என்.சி.பி.எச். மற்றும் கறுப்புப் பிரதிகள் முதலானவற்றின் ஊடாக தமிழக வாசகர்களையும் சென்றடைந் துள்ளன.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் இயங்கிய காலத்தில் யாழ்ப்பாணக் கிளையின் செயலாளராகவும் இயங்கியிருக்கும் தெணியான், தமது படைப்புகளுக்காக இலங்கை தேசிய சாகித்திய விருது, வடகிழக்கு மகாண அமைச்சுப் பரிசு, யாழ். இலக்கிய வட்டத்தின் பரிசு, இலங்கை தேசிய கலை இலக்கியப்பேரவை - தமிழ்நாடு சுபமங்களா இதழ் ஆகியன இணைந்து

வழங்கிய பரிசு, மற்றும் தமிழ்நாடு கு. சின்னப்பபாரதி அறக்கட்டளை விருது, கொடகே விருது, கலாபூஷணம் விருது, இலங்கை அரசின் உயர் விருதான சாகித்திய ரத்னா விருதும் பெற்றிருப்பவர்.

இலங்கை வானொலிக்காக முன்னர் பல நாடகங்களும் எழுதி யிருக்கும் தெணியான், பேராசிரியர் கா. சிவத்தம்பி, மல்லிகை ஜீவா ஆகியோர் பற்றியும் விரிவான நூல்களை வரவாக்கியிருப்பவர். தான் கற்ற, ஆசிரியப் பணியாற்றிய தேவரையாளி இந்துக்கல்லூரியின் இரண்டு வெளியீடுகள் மற்றும், மல்லிகை ஜீவாவின் "ஈழத்திலிருந்து ஓர் இலக்கியக்குரல்" நூலினதும் தொகுப்பாசிரியருமாவார். கனடாவில் வதியும் தெணியானின் தம்பி எழுத்தாளர் க. நவம் நடத்திய "நான்காவது பரிமாணம்" இதழின் சார்பில் வெளியான "மரக் கொக்கு" நாவல் சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. 1964 முதல் அரை நூற்றாண்டுக்கும் மேலாக அயராமல் இலக்கியப் பிரதிகளை எழுதிவந்திருக்கும் தெணியானுக்கு கடந்த 2003 ஆம் ஆண்டில் நடந்த மணிவிழாக்காலத்தில், பல இலக்கிய ஆளுமைகள் இவர் பற்றி எழுதியிருக்கும் மணிவிழா சிறப்பு நூலை எழுத்தாளர் கொற்றை பி. கிருஷ்ணானந்தன் தொகுத்திருக்கிறார்.

தெணியானின் பல்துறை இலக்கிய ஆற்றல்களை மதிப்பீடு செய்யும் "தெணியானின் படைப்புகள் மீதான பார்வை", "தெணியானின் ஜீவநதிச் சிறுகதைகள்" ஆகியனவற்றையும் யாழ். ஜீவநதி கடந்த 2013 இல் இவரது பிறந்த தினத்திலேயே விழா எடுத்து வெளியிட்டமை குறிப்பிடத்தகுந்தது.

இலங்கையில் மல்லிகை, ஞானம், கனடா காலம் முதலான கலை, இலக்கிய இதழ்கள் தெணியானை அட்டைப்பட அதிதியாகவும் பாராட்டிக் கௌரவித்துள்ளன. பல பசுமையான நினைவுகளைத் தந்துவிட்டு விடை பெற்றுள்ள எமது இலக்கியச் சகோதரன் தெணியானுக்கு சிரம்தாழ்ந்த அஞ்சலி .

லெ. முருகபூபதி

மெல்போர்ன், அவுஸ்திரேலியா

நன்றி: பதிவுகள்.காம்

* * *

# ஈழத்து இலக்கிய உலகின் தூண் ஒன்று சரிந்தது...!

மூத்த எழுத்தாளர் தெணியான் இன்று ஞாயிற்றுக்கிழமை (22.05.2022) காலமானார்.

ஈழத்தின் மூத்த எழுத்தாளர்களில் ஒருவரும் ஓய்வுபெற்ற ஆசிரியரும், வடமராட்சியின் புகழ் பூத்த தேவரையாளி இந்துக் கல்லூரியின் முன்னாள் உப

அதிபரும், வல்வைக் கல்வி மன்றத்தின் முன்னாள் தமிழ் ஆசிரியருமான "தெணியான்" என்று அழைக்கப்படும் வடமராட்சி, பொலிகண்டி, தெணி என்ற இடத்தைச் சேர்ந்த எங்கள் அன்புக்கும் மதிப்புக்கும் உரிய திரு. கந்தையா நடேசன் அவர்கள் இன்று 22.05.2022 அன்று தனது 82 ஆவது வயதில் காலமானார் என்ற அந்தத் துன்பியல் செய்தி, ஈழத்து எழுத்தாளர்கள் மற்றும் கல்வித் துறைசார்ந்தவர்களிடையே மிகுந்த அதிர்ச்சியையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

தமிழ் இலக்கியத் துறையில் அவரது சாதனைகளைக் கௌரவிக்கும் வகையில் கலாசார அலுவல்கள் அமைச்சினால் கலாபூசணம், சாகித்ய இரத்தினா போன்ற பல்வேறு விருதுகளையும், அவரது நூல்கள் பலவற்றிற்குச் சிறந்த நூல்களுக்காக வழங்கப்படும் "சாகித்ய விருது" என்ற உயர் விருதுகளைப் பல தடவைகள் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத் தக்கது.

சமூகத்தில் நலிவடைந்து பல்வேறு துன்பங்களைத் தாங்கி வாழும் மக்களுக்காகவே இவரது பேனாமுனை திரும்பியிருந்தது. சாதிய ஒடுக்கு முறைகள் மற்றும் வர்க்க முரண்பாடுகளுக்குள்ளாகித் திசை தெரியாது தத்தளித்துக் கொண்டிருந்த ஒரு சமூகத்தின் குரலாக ஒலித்து, அவர்களுக்கான ஒரு நம்பிக்கை ஒளியாகத் திகழ்ந்த தெணியானின் எழுத்துக்கள் கூர் ஆயுதங்களாகப் பிற்போக்குவாதிகளைத் தாக்கியதால், அவரது எழுத்தைக் கண்டு அஞ்சியவர்கள், அவரின் முன்னால் வாயே திறக்க முடியாது இருந்ததைப் பார்த்திருக்கின்றோம். முற்போக்கு எழுத்தாளர்களின் வரிசையில் டானியல், தங்கவடிவேல் மாஸ்ரர், பேராசிரியர் கா. சிவத்தம்பி, டொமினிக் ஜீவா, நந்தினி சேவியர் போன்ற சமுகப் போராளிகளின் வரிசையில், இன்று அண்ணன் தெணியான் அவர்களும் எங்களை விட்டுப் பிரிந்துவிட்டார்.

ஈழத்தின் இளம் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதுடன், புதிதாக எழுத வருபவர்களுக்கும் வழிகாட்டி, அவர்களுக்கான பல சிறுகதைப் பயிற்சிப் பட்டறைகளை எங்களுடன் இணைந்து நடத்தி, அவர்களை இந்த மண்ணில் எழுத்தாளர்கள் ஆக்கிய பெருமைக்குரிய தெணியான், எப்பொழுதும் சிரித்த முகத்துடனும், பண்பாகவும், அன்பாகவும் பழகக்கூடிய ஒரு உன்னதமான மனிதராகவே வாழ்ந்தார்.

வடமராட்சியின் பொலிகண்டி கிராமத்தின் "தெணி" என்னும் பகுதியில் சந்ததி சந்ததியாகப் பல காலம் வாழ்ந்துவந்த இவரது குடும்பத்தவர்களை, பொலிகண்டிக் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் "தெணியார்" என அழைக்கும் வழக்கம் இருந்தமையால், நடேசன் மாஸ்ரர், "தெணியான்" என்ற புனை பெயரையே தனக்கும் சூட்டிக் கொண்டு, தனக்கும் தான் பிறந்த ஊருக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

அவர் இன்று எங்களை விட்டு மறைந்தாலும் சமுகத்தை நேசிக்கும் அவரது ஆழமான எழுத்துக்கள் என்றும் வாழ்ந்துகொண்டே இருக்கும்.

தெணியானின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது அன்புக்குரிய குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள், இலக்கியத்துறையைச் சேர்ந்த ஆர்வலர்கள், கல்வித்துறை சார்ந்தவர்கள் அனைவருக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இலக்கிய உலகில் சாதனைகள் படைத்த அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக் கின்றோம்.

வல்வை ந. அனந்தராஜ்

* * *

# ஈழத்து இலக்கிய உலகின் மூத்த எழுத்தாளர் தெணியான்

ஈழத்து இலக்கிய உலகின் மூத்த எழுத்தாளர் தெணியான் இன்று காலமானார்.

1942ல் யாழ் மாவட்டத்தின் வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள பொலி கண்டி கிராமத்தில் பிறந்தவர். தமிழ் ஆசிரியராக நீண்ட காலம் பணியாற்றி, பகுதித் தலைவர், கனிஷ்ட அதிபர், உபஅதிபர், தொலைக்கல்விப் போதனாசிரியர் போன்ற பதவிகளை வகித்து, 2002ம் ஆண்டு ஓய்வு பெற்றவர்.

1964ல் "விவேகி" சிற்றிதழில் வெளிவந்த "பிணைப்பு" என்ற சிறுகதை யுடன் இவரது எழுத்துலகப் பிரவேசம் ஆரம்பமானது. சுமார் 150 சிறுகதைகள், 14 நாவல்கள் - குறுநாவல்கள், 5 வானொலி நாடகங்கள், நூற்றுக்கு மேலான கட்டுரைகள், விமர்சனங்கள், செவ்விகள் என்பன இவரது படைப்பாக்கங்கள்.

இவரது வாழ்நாள் இலக்கியப் பணிக்காக இலங்கை அரசு "சாகித்ய ரத்னா" (2013), வடக்கு மாகாண "ஆளுனர் விருது" (2008), இலங்கை இந்து கலாசார அமைச்சு "கலாபூஷணம்" (2003) என்பவற்றை வழங்கி இவரைக் கௌரவித்துள்ளன.

இவரது "கழுகுகள்" நாவல் "தகவம்" பரிசையும்,"மரக்கொக்கு" நாவல் இலங்கை அரசினதும், வடகிழக்கு மாகாண சபையினதும் சாகித்திய விருதுகளையும், "காத்திருப்பு" நாவல் வடகிழக்கு மாகாண சபையின் பரிசையும், "கானலின் மான்" நாவல் இலங்கை அரசின் சாகித்திய விருதையும், "குடிமைகள்" நாவல் இலங்கை அரசின் சாகித்திய மற்றும் கொடகே விருதையும், "சிதைவுகள்" குறுநாவல் தேசிய கலை இலக்கியப்பேரவைப் பரிசையும், சுபமங்களா பரிசையும், சின்னப்பபாரதி அறக்கட்டளை விருதையும், "ஒடுக்கப் பட்டவர்கள்" சிறுகதைத் தொகுதி கொடகே விருதையும் பெற்றுள்ளன.

சிறந்த மேடைப் பேச்சாளரான இவர், இளவயதிலிருந்தே மார்க்சியக்

கோட்பாட்டில் ஈடுபாடு கொண்டிருந்தவர். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தளகர்த்தர்களுள் ஒருவர். சங்கத்தின் யாழ் கிளைச்செயலாளர். சிறுபான்மைத் தமிழர் மகாசபையில் இணைந்து சாதியத்துக்கு எதிரான போராட்டங்களில் பங்குகொண்ட ஒரு சமூக விடுதலைப் போராளி.

ஒடுக்கப்பட்ட அடிநிலை மக்கள் மீது பரிவு கொண்டு, அவர்களது விடுதலைக்காகத் தனது படைப்பாளுமையை அர்ப்பணித்தவர். ஏற்றத்தாழ் வற்ற ஒரு சமுதாயமே அவரது இலட்சியமாக இருந்தது.

என் போன்றவர்களுக்குச் சிறந்த வழிகாட்டியாகவும், ஆதர்சனமாகவும் விளங்கிய அவரது இழப்பு பேரிழப்பாகும்.

மு. அநாதரட்சகன்

* * *

## நினைவுகளோடு நிலைத்திருப்பார்!

ஆசிரியத்துவத்தாலும் எழுத்தாளத்துவத்தாலும் தான் வாழ்ந்த சமூகத்தின் அடையாளமாக நிலைத்துவிட்ட ஆளுமை எங்கள் மூத்த முன்னோடி எழுத்தாளர் தெணியான் அவர்கள். சமயத்தையும், மொழியையும் முதன்மைப்படுத்திய பண்டித மரபுக் குருவானவர்களின் வழித்தோன்றலாகப் பரிணமித்தபோதும், காலத்தின் மாற்றத்தை அனுசரித்து, கல்வியும் இலக்கியமும் சமூக விடுதலைக்கான ஆயுதங்களாக அமையவேண்டும் எனும் அடித்தளமான குறிக்கோளுடன் போதித்தும் பேசியும் எழுதியும் வந்தவர்.

“தேவரையாளிச் சமூகம் என்று பேராசிரியர் கா. சிவத்தம்பி அடையாளப்படுத்திய சமூகத்தின் “தலைச்சன்கள்“ இட்ட பாதையில், அந்தச் சமூகத்தையும் அதனோடு தொடர்புடைய புறச்சமூகங்களையும் இணைப்பதில் பாலமாக இருந்தவர். உரிமை மறுக்கப்பட்ட சமூகங்களின் நலிவுக்கான காரணங்களையும் அவை மாற்றமுறக் கடைப்பிடிக்கவேண்டிய உபாயங் களையும் ஆழமான சமூக வரலாற்றுத் தெளிவுடன் புனைவிலக்கியங்களாக வும், ஆய்வு நோக்கிலான கட்டுரைகளாகவும் தொடர்ச்சியாக எழுதிவந்தவர்.

ஒடுக்குமுறை எந்த வடிவத்தில் நிகழ்ந்தாலும், அதை ஒடுக்கப் பட்டோரின் அருகிருந்து கண்டு, வெளிப்படுத்தும் தன்மையினார். முள்முடி தரித்தவர்களையும் பொற்சிறையில் வாடியவர்களையும் அவரவர் வலியுணர்ந்து தரிசிக்கும் பக்குவம் அவரிடமிருந்தது.

காலத்தினால் அவர் நினைவுகளோடு நிலைத்திருப்பார்!

இராஜேஸ்கண்ணன்

* * *

# ஈழத்தில் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக ஓங்கி ஒலித்த குரல் தெணியான்!

எனது 3 வயது முதல் இன்று வரை (35 வருட காலம் ) தெணியான் சேருக்கு செல்லப்பிள்ளை, நான். கேட்கும் அனைவருக்கும் என்னுடைய பேரன் என்று தான் சொல்லுவார்…

“ஜீவநதி சஞ்சிகை ஆரம்பிக்க போகிறோம், அதற்குப் பிரதம ஆலோசகராக இருக்க வேண்டும்” என நான் கேட்கப் போனதோடு எங்கள் இலக்கிய உறவு ஆரம்பித்தது. குறைந்தது வாரத்துக்கு 2 தடவையாவது சந்தித்துப் பேசிக் கொள்வோம். 2007 ஜீவநதி ஆரம்பித்த காலம் முதல், 2019 வரையில் ஒரு கிழமைக்கு 2 தடவை, குறைந்து 2 மணித்தியாலமாவது இருவரும் பேசிக்கொள்வோம். ஆனால் குடும்பம் பெரிசாக, நேர நெருக்கடிகளால் வாரம் 2 தடவை சந்தித்த நாங்கள், மாதம் ஒரு தடவை சந்தித்துக் கொண்டோம். அதற்கு இடையில் –

அப்பு என்னடா செய்யிறாய்…

“வீட்டை ஒருக்கா வந்துட்டு போடா…”

“அடேய், எங்கயடா ஆளைக் காணம், கொம்மம்வாவும் கேட்டவா வந்துட்டு போடா…”

“அப்பன் என்ன செய்யிறாய்…”

“ஐயா என்னடா செய்யிறாய்…”

ஒரு மாதத்துக்கு ஒருதடவை பார்க்காவிட்டாலும் தொலைபேசியில் இருந்து அழைப்பு வரும்.

இனி இந்த அழைப்பு வராது…. எனது தொலைபேசியில் அந்தக் கம்பீரமான குரல் கேட்காது… உரிமையோடு என்னைப் பேசும் அந்தக் குரலை இனிக் கேட்க முடியாது… எனது இலக்கியப் பயணத்தில் வழிகாட்டியாய், முன்னுதாரணமாய் வாழ்ந்தவர் தெணியான் சேர்…

*“தெணியான் சேர் எனது 60இற்கு மேற்பட்ட கூட்டங்களுக்குத் தலைமை தாங்கியவர்.

*“தெணியான் இருக்கின்ற மேடைகளில் ஜீவநதி மீதோ, பரணி மீதோ யாரும் சொறிய முடியாது இருந்தது…

*“தெணியான் சேரை பல கூட்டங்களுக்கு மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்று இருக்கிறேன்… அங்கு எல்லாம், இது என்ரை பேரன், இவன் தான் இப்ப எல்லாம் என்று சொல்லுவார்.

*“தெணியான் சேரின் 50 வருடகால இலக்கிய வாழ்வைக் கௌரவித்து ஜீவநதி தெணியானின் படைப்புகள் மீதான பார்வைகள்” என்னும் நூலை வெளியீடு செய்தது.

*எங்கள் அவையின் பெரும் தலைவர்.
*கலாபூசணம், சாகித்தியரத்னா விருதுபெற்ற போது அவையில் கௌரவிப்பு
*தெணியானின் பவளவிழாவை முன்னிட்டு, மிகப் பிரமாண்டமாய் ஜீவநதியின் 106 ஆவது இதழ் “தெணியான் பவளவிழா சிறப்பிதழ்” வெளியானது. அத்துடன் தெணியானின் “வெந்து தணிந்தது” குறுநாவல் வெளியானது.
* தெணியானின் ஜீவநதி வெளியீடாக வெளியான நூல்கள் -

1. குடிமைகள் (நாவல்) - சாகித்திய விருது
2. பார்க்கப்படாத பக்கங்கள் (கட்டுரைகள்)
3. வெந்து தணிந்தது (குறு நாவல்)
4. தெணியானின் ஜீவநதி சிறுகதைகள் (இலக்கிய வட்டப் பரிசு பெற்றது)
5. தெணியானின் படைப்புகள் மீதான பார்வைகள்

* தவறிப்போனவன் கதை வெளியீட்டு விழா எமது கலையகத்தில் நடைபெற்றது.
*ஒடுக்கப்பட்ட மக்களுக்காக தெணியான் தனது படைப்புகள் வாயிலாக போராடினார்.
* சாதிய எதிர்ப்பு போராட்டங்களில் முன்னின்றார்.
* மாலிசந்தி பிள்ளையார் கோயில், பொலிகண்டி கந்தவனக் கோவில், வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலய பிரவேசம் போன்ற, கோயில் பிரவேசங்களில் முன்னின்றவர்.
* தனித்த குரலாக ஒடுக்கபட்ட மக்களுக்காக்க் குரல் கொடுத்தார்…
* தனது ஆரம்பம் முதல் இறுதி வரை, சாதியத்துக்கு எதிரான குரலை எந்தத் தயக்கமும் தளம்பலும் இன்றிக் கொடுத்தவர்..
* aavanaham.org இல் தெணியானின் குரல்வழி ஆவணப்படுத்தலை 4 மணித்தியாளம் செய்துள்ளேன்…
* தெணியான் இல்லாத வடமராட்சியின் கூட்டங்கள் சுவை இல்லாதவை…
* தெணியான் மேடைக்கு வரும் ஸ்டைல் தனித்துவமானது…
* தமிழில் தெணியானின் அறிவு வியக்கக்கூடியது…
* மிகவும் எளிமையாக எல்லோருடனும் பழகக்கூடியவர்…
* தான் வந்த பாதையை மறக்காதவர்.
* தனது அப்பா அம்மாவில், சகோதரர்களில், குறிப்பாகப் பெண் சகோதரர்களில் அதிக அன்பு உடையவர். கதைக்கும் நேரங்களில் எல்லாம் நவம் சேர் பற்றியும் கதைப்பார். அண்ணன் பற்றியும் கதைப்பார். அவரது பாசத்தைக் கண்டு வியந்திருக்கிறேன்.
* சேரின் உடை மிக நேர்த்தியாக இருக்கும். simpleஆக, neat ஆக இருக்கும். 6 அடி உயரமான மனிதர் சும்மா மேடைக்கு வந்தாலே மேடை அழகு பெறும்.
* சேரின் இலக்கிய முயற்சிகளுக்கு எந்த இடையூறும் வராதவாறு அம்மம்மா (மரகதம்) குடும்பத்தைப் பார்த்து கொண்டதையும் குறிப்பிட வேண்டும்.
* எழுத்தாளர்களோடு கோட்பாடுகள், இசங்களுக்கு அப்பால் மனித நேயத்துடன் பழகியவர்.

* எமது சமூகத்தின் ஆலமரம்.
* வடமராட்சி மண்ணின் இலக்கிய இமயம்.
* இலக்கியக்காரனுக்குக் கிடைக்க வேண்டிய அனைத்து விருதையும் பெற்றவர்.
* எமது சமூகத்தின் பெரும் சொத்து தெணியான் சேர் அவர்கள்.
* எழுத்தாளர்கள் மத்தியில் ஈழத்தில் தெணியான் என்ற பெயரை அறியாதவர் கிடையாது.
* எங்கடை பிரதேசத்துக்கு தெணியான் சேர் அவர்களால் என்றும் பெருமைதான் கிடைத்து.
* சாதிய ஒடுக்குமுறை சார்ந்த எத்தனை அனுபவங்களை என்னுடன் பகிர்ந்தார். அந்த விடயங்களைப் பார்த்து கொதித்தபோது எல்லாம் “கொஞ்சம் பொறுமையா இரு” என்பார்.

15 ஆண்டுகளாக எல்லோரையும்விட என்னுடன் இலக்கிய உலகில் மிக நெருக்கமாக இருந்துள்ள தெணியான் சேர்... இனி இல்லை. ஆனால் அவரது நூல்களும், செயல்பாடுகளும் அவரை அழிய விடாது. சேரிடம் இருந்து பெற்ற அனுபவங்கள் அளவிடப்பட முடியாதவை... எந்த இடத்திலும் என்னை விட்டுக்கொடுக்காதவர்....

என்ன சொல்லி நான் ஆறுதல் அடைவது...!

க. பரணீதரன்

* * *

# இறுதிச் செவ்வஞ்சலிகள்!

மூத்த முற்போக்கு எழுத்தாளர் தோழர் தெணியானின் மறைவிற்குச் செவ்வஞ்சலி!

இலங்கையின் மூத்த முற்போக்கு எழுத்தாளர் தோழர் தெணியான் தனது எண்பதாவது வயதில் அவரது சொந்தக் கிராமமான வடமராட்சி, பொலிகண்டியில் இன்று பிற்பகல் இயற்கை எய்தினார்.

தனது இளமைக் காலம் முதல், மாக்சிச நிலைப்பாட்டினைப் பற்றிக்கொண்ட அவர் தான் வாழ்ந்துவந்த தமிழர் சமூகத்தில் மிகக் கொடூரமாக நிலவி வந்த சாதிய, சமூக ஒடுக்கு முறையினை எதிர்ப்பதில் முன்நின்றவர். தனது இலக்கிய எழுத்தாற்றலைச் சிறுகதைகள், நாவல்கள் மூலம் சாதிய ஒடுக்கு எதிரான கூர்மை மிக்க ஆயுதமாகப் பயன்படுத்தி வந்தவர்.

ஈழத்து முற்போக்கு இலக்கியப் பரப்பில் தெணியானின் எழுத்துகள் வலிமை மிக்கவையாக இருந்து வந்தன. ஈழத் தமிழர் சமூக வாழ்வில் இன்றுவரை நீடித்து வரும் சாதிய தீண்டாமையை அம்பலப்படுத்துவதில் இறுதிக் காலம்வரை தனது எழுத்துப் பணியை உறுதியாக முன்னெடுத்து

வந்தவர்.

தெணியானின் சமூக ஒடுக்குமுறைக்கு எதிரான அவரது கனதியான எழுத்துக்கள் என்றும் அவரை மக்கள் மத்தியில் நினைவுறுத்திக் கொண்டே இருக்கும். அவருடனான நினைவுகள் என்றும் எங்கள் மத்தியில் பசுமையானவையாக இருந்து வரும்.

அவருக்கு எமது இறுதி செவ்வஞ்சலிகள்.

சி.க. செந்திவேல்

* * *

# சமூகப் பேரிழப்பு!

தேவரையாளி இந்துவின் கிரீடங்களில் மின்னிக் கொண்டிருந்த வைரங்களில் ஒன்று தனது இறுதி மூச்சை நிறுத்திக் கொண்டது

எமது பாடசாலையின் புகழ்பூத்த பழைய மாணவனும், ஆசிரியரும், பகுதித் தலைவரும், பிரதி அதிபராகவும் இருந்து ஓய்வு பெற்றுக் கொண்ட தெணியான் என்றழைக்கப்பட்ட கந்தையா நடேசு, நேற்றைய தினம் இவ்வுலக வாழ்வினின்றும் நிரந்தரமாக ஓய்வு பெற்றுக்கொண்டார்.

எமது கல்லூரியில் கல்வி கற்கும் காலத்தில் அல்வையூர் கவிஞர் செல்லையா அவர்களால் இனங்காணப்பட்ட நல் வைரமாகத் திகழ்ந்தவர் தெணியான். அவரது நுண்மையான புத்திக் கூர்மையும் பேச்சாற்றலும் நடிப்புத் திறனும் அவரை பாடசாலையின் நன்மாணாக்கர்களுள் ஒருவராக்கியது. இங்கு கற்கும் காலத்திலேயே அவரது இலக்கிய ஆற்றலும் வளர்ந்து கொண்டது. உயர் கல்விக்காக விக்னேஸவராக் கல்லூரிக்குச் சென்ற அவர், உயர் கல்வியின் பின், மலையகப் பகுதியில் ஆசிரிய நியமனத்தை பெற்றுக் கொண்டார். பதுளைப் பிரதேசத்தில் கல்வி கற்பித்துக் கொண்டிருந்த காலத்திலேயே அவரது எழுத்துப் பணிக்குரிய பிரசுர அங்கீகாரம் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

கிராமிய வாசனையும் நகர நாகரிக நடைமுறைகளும் நடைமுறைப் படுத்தப்பட்டுக் கொண்டிருந்த கல்லூரியின் பொற்கால அதிபராகிய எம்.எஸ். சீனித்தம்பியின் காலத்தில், தான் கல்வி கற்ற பாடசாலையிலேயே ஆசிரியராக வும் கடமையாற்றினார். எம்.எஸ்.எஸ். அவர்களின் நிர்வாக நடைமுறை களுக்குச் செயல் வடிவம் கொடுத்வர்களில் ஒருவராவும் விளங்கினார். மாணவர் களின் ஆளுமைகளை - குறிப்பாக இலக்கிய ஆற்றலை வளர்த்தெடுப்பதில் முக்கிய பணியாற்றினார்

இக்காலப் பகுதியிலேதான் ஏற்கனவே நண்பர்களாக விளங்கியவர் களும் பொதுவுடமைக் கொள்கையின்பால் ஈடுபாடும் கொண்டிருந்த கிளாக்கையா சி.க. இராசேந்திரன், அமரர் செ. சதானந்தன் ஆகியோருடனான

இணைப்பு பலம் பெறுகிறது. தமது மாணவர்களைக் கலை இலக்கியம், கல்வி விளையாட்டோடு, அரசியல் ரீதியான சிந்தனைப் போக்கிலும் வழிகாட்டினார். தான் ஓய்வு பெறும்வரை தேவரையாளி இந்துவில் பகுதித் தலைவர், பிரதி அதிபர் எனும் பதவி நிலைகளையும் அலங்கரித்துச் சென்றவர்.

தனது இலக்கியப் பணிக்காக இலங்கை அரச உயர் விருதான சாகித்திய ரத்தினா, சாகித்திய மண்டலப் பரிசில் உட்பட, தேசிய மட்ட, மாகாண மட்ட பரிசில்களையும் பெற்று, தேவரையாளி இந்து அன்னையின் புகழுக்குக் காரணமாக விளங்கியவர். தனக்குப் பின் தனது பிள்ளைகளையும் பேரப் பிள்ளைகளையும் எமது பாடசாலையோடு இணைத்து அழகு பார்த்தவர்.

அன்னாரது இழப்பு அவரது குடும்பத்தினரது இழப்பாக மட்டுமன்றி, ஒரு சமுகத்திற்குரிய பேரிழப்பாகவும் விளங்குகிறது. தனது வாழ்நாளின் இறுதிவரை சமுக சக வாழ்வுக்காக தனது எழுத்தாலும் பேச்சாலும் சாட்டையடி கொடுத்தவர். இன்றும் சாதியச் சாக்கடை முற்றிலுமாக மாறிவிடாத நிலையில், அவர் கொண்ட பாதையில் நாம் தொடர்ந்தும் பயணிப்பதே அன்னாருக்கு செய்யும் அஞ்சலியாகும்.

அன்னாரது இழப்பினால் துயரிற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உறவுகளுக்கும் எனது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**செல்வானந்தன் சதானந்தன்**

* * *

# தெணியான் என்னும் இலக்கிய ஆளுமை

ஈழத்து இலக்கியப் பரப்பில் அதிலும் முற்போக்கு இலக்கியம் பற்றிப் பேசப் புகுந்தால், தெணியான் எனும் பெயரைத் தவிர்க்கவே முடியாது. அத்தகைய ஒரு எழுத்தாளருடனான அறிமுகம் எவ்வாறு நிகழ்ந்ததென எண்ணிப் பார்க்கிற போது, என் நினைவில் எழுகின்ற நாவல் “பொற்சிறையில் வாழும் புனிதர்கள்”.

இந்நாவலை நான் என் சிறு வயதில் வாசித்திருக்கிறேன். கதையும், கதை மாந்தர்களும் மனதில் பதிந்தது போலவே, அதனை எழுதியவரும் மனதில் நின்று விடுகிறார். அதற்குப் பிறகான காலங்களில் “சிதைவுகள்”, “தவறிப்போனவன் கதை” போன்றவற்றைப் பத்திரிகையில் தொடர்கதையாய் வந்த போது காத்திருந்து வாசித்தது நினைவிற்கு வருகிறது.

வழமையாக முற்போக்குப் படைப்புக்கள் என்றால், எப்படியும் ஒரு பிரசார வாடை இருப்பது போல, வாசிப்பிற்கு முன்னமே தோன்றத் தொடக்கி விடும். ஆனால், தெணியானின் கதைகள் அவ்வாறானதல்ல. செழுமையான கதையம்சமிக்க அக்கதைகளோடு வாசகன் எளிதில் ஒன்ற முடியும். வாசிப்பின்

முடிவில் யோசிக்கும் போதுதான் அந்தப் பாத்திரங்களின் வாழ்க்கைச் சித்திரத்தினுள் எவ்வகையான முற்போக்குக் கருத்துக்கள் பொதிந்து கிடந்தன என உணர முடியும்.

2004 ஆம் ஆண்டளவில் வடமராட்சியிலிருந்து வெளிவந்த "ஏகலைவன்" இதழில் "விடுபடல்" என்னும் சிறுகதை ஒன்றை எழுதியிருந்தேன். இவ்விதழ் வெளிவந்த சில வாரங்களில் அந்தச் சிறுகதையைப் படித்துச் சிலாகித்து எனக்கு அனுப்பப்பட்டிருந்த கடிதம் ஒன்றைப் பார்த்து மெய் சிலிர்த்துப் போனேன். ஏனெனில் அந்தக் கடிதத்தைத் தெணியான் அவர்கள் எனக்கு எழுதியிருந்தார். எனது சிறுகதையைத் தனது மகளிடம் கொடுத்து அதனைப் படிக்கச் சொல்லியதாகவும் அதில் குறிப்பிட்டிருந்தார். எழுத்தாளர் எனும் அங்கீகாரத்தை அப்போது தான் பெறத்தொடங்கியிருந்த எனக்கு, இமயம் என நான் எண்ணியிருந்த ஒருவரிடமிருந்து கிடைத்த பாராட்டு, மிகுந்த உத்வேகத்தையும், எழுதுவதற்கான உந்துசக்தியையும் வழங்குவதாயிருந்தது. மகிழ்ச்சியோடு அக்கடிதத்திற்குப் பதில் எழுதி அனுப்பினேன். அதன் பின்னர் தொடர்ந்தும் கடிதங்கள் மூலம் இலக்கியத் தகவல்களைப் பரிமாறுவதுடன், என் படைப்புக்கள் பற்றிய கருத்துக்களையும் தெரியப்படுத்துவார்.

அதன் பின்னர் 2009இல் எனது "தூரப்போகும் நாரைகள்" சிறுகதைத் தொகுப்பிற்கான வெளியீட்டு விழா யாழ் பல்கலைக்கழக நூலக மண்டபத்தில் நடைபெற்றபோது, அவ்வெளியீட் டு விழாவில் எனது சிறுகதைத் தொகுப்பு பற்றிய காத்திரமான உரையொன்றையும் ஆற்றியிருந்தார்.

எழுத்திற்கும், வாழ்க்கைக்கும் தொடர்பற்று வாழும் பலரின் மத்தியில் சொல்லுக்கும், செயலுக்கும் வேறுபாடின்றி வாழ்ந்தவராகத் தெணியான் அவர்களை சுட்ட முடியும். எழுத்தாளர் என்பதற்கு அப்பால் அவர் ஒரு ஆசிரியராகப் பல மாணவர்களை வழிப்படுத்தியவர்.கொள்கைக்காகப் பல போராட்டங்களில் தன்னை ஈடுபடுத்தியவர். நல்லதொரு குடும்பத் தலைவராகத் தன் பிள்ளைகளை அவர்களுக்குரிய திறமைகளோடு நிலைநிறுத்தியவர். இத்தகைய பல்பரிமாண ஆளுமையைக் கொண்டிருந்த தெணியான் சக எழுத்தாளர்களிடத்திலும் அன்பும் அக்கறையும் கொண்டிருந்தவர் என்பதையும் அவருடனான உரையாடல்களில் நான் அறிந்திருக்கிறேன்.

சமூக மட்டத்தில் இருக்கின்ற ஏற்றத்தாழ்வுகள், சாதி, சமய, மத வேறுபாடுகள் போன்றவற்றுக்கெதிராக அவரது எழுத்துக்கள் தமது புனைவை அமைத்துக் கொண்டன. தனியே தாழ்த்தப்பட்ட சாதிகளுக்காக மட்டுமன்றி, சமூகத்தில் உயர் நிலையிலிருந்தாலும் ஒடுக்கப்படும் ஒரு சமூகமாகக் காணப்படுகின்ற பிராமண சமூகத்தின் ஒடுக்குதலைத்தான் "பொற் சிறையில் வாடும் புனிதர்கள்" அற்புதமாகப் பிரதிபலிக்கின்றது.

போர்க்காலம் தமிழர்களை எவ்வாறு உலுப்பியது என்பதையும், இடப்பெயர்வு மக்களை எவ்வாறு அலைக்கழித்தது என்பதையும் தனது

நாவல்களில் முன்வைக்கும் தெணியான், உளவியல் ரீதியான சில கூறுகளை முன்னிலைப்படுத்தியும் சில கதைகளைப் படைத்துள்ளார். சமுதாய ஒழுக்க நெறிகளை மீறுகின்ற சில பெண்களின் நிலைகளையும் அதற்குக் காரணமாகும் சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் கலாபூர்வமான படைப்புக்களாக வெளிப்படுத்தி யுள்ளார்.

இறுதியாக, தனது எண்பதாவது அகவைக்குள் சமூக ஏற்றத்தாழ்வு களற்ற சமுதாயத்திற்காகப் போராடி, எழுத்து மூலம் தன் எண்ணங்களை இளைய சமுதாயத்திடம் சேர்ப்பித்து, மறைந்த தெணியான் அவர்களது கனவு ஈடேற வேண்டும். அவருடைய பாதையில் எமது பயணங்களைத் தொடர்வோம். ஓம் சாந்தி!

தாட்சாயணி(சாவகச்சேரி)

* * *

# மூத்த எழுத்தாளர் தெணியான் நினைவலைகள் !

மூத்த எழுத்தாளர் “சாகித்ய ரத்னா” தெணியான் (80 வயது) இன்று (22 - 05 - 2022) காலமானார் என்ற செய்தி மிகுந்த கவலையளிக்கிறது.

க. நடேசன் என்ற இயற்பெயர் கொண்ட தெணியான் 1964-ம் ஆண்டு முதல் எழுத்துப் பணியில் ஈடுபட்டு வந்தவர்.

ஆசிரியராகக் கல்விப் பணிபுரிந்த அவர், இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் தீவிர ஆதரவாளர். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் வடபிரதேசச் செயலாளராக பணிபுரிந்தவர். சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் தீவிர செயற்பாட்டாளர்.

தீண்டாமை ஒழிப்பு நடவடிக்கைகளில் தவறாது பங்காற்றி வந்தவர். சிறுபான்மைத் தமிழர் மகாசபைச் செயற்பாட்டாளராக விளங்கிய போதிலும் “தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம்” முன்னெடுத்த போராட்டங்களையும் தீவிரமாக ஆதரித்த உணர்வாளர்.

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க அமைப்பாளர், “மக்கள் எழுத்தாளர்” கே. டானியலுடன் இறுதிவரை தோழமையுடன் நெருங்கிப் பழகி வந்தவர்.

பல சிறுகதைத் தொகுதிகள் - நாவல்கள் - கட்டுரைகள் - குறுநாவல்களை எழுதி வெளியிட்டவர். விருதுகள் பல பெற்றவர்.

சமூக அடக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுத்தவர். போராடியவர். அந்த மக்களின் எழுச்சியை - நல்வாழ்வை இலட்சியமாகக்கொண்டு பணியாற்றியவர்.

எழுத்தை ஆயுதமாகக் கொண்டவர். ஒடுக்கப்பட்ட மக்களின்

மனங்களில் நிறைந்த நல்லாசிரியர். உணர்ச்சிகரப் பேச்சாளராக விளங்கியவர்.

இலங்கை அரசின் உயர்விருதான “சாகித்ய ரத்னா“ விருது - ஆளுனர் விருது - கலாபூஸணம் விருது - கொடகே விருது - சின்னப்பபாரதி இலக்கிய அறக்கட்டளை விருது - சாகித்ய மண்டலப் பரிசுகள் எனப் பல விருதுகளைப் பெருமைப்படுத்திய எழுத்தூழியக்காரர். நீண்டகாலமாக அவரை நன்கறிவேன். அவருடன் பழகிய தருணங்கள் நினைவிலுள்ளன.

யாழ்நகரில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற எனது “மண் மறவா மனிதர்கள்“ நூல் அறிமுக நிகழ்வில் உரையாற்றிச் சிறப்பித்தவர். சிறிது காலத்திற்கு முன்பு அல்வாயில் “ஜீவநதி” ஆசிரியர் பரணீ தரன் என்னை அழைத்து இலக்கியச் சந்திப்பொன்றை நடத்தினார். அந் நிகழ்வுக்கு தோழர் தெணியான் அவர்களே தலைமை வகித்துச் சிறப்பித்தார். பின்னர் அவரைச் சந்தித்து உரையாடும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

கனடாவில் வாழும் எழுத்தாளர் க. நவம் இவரது இளைய சகோதரராவார். அடுத்தடுத்து நெருங்கிப் பழகிய தோழர்கள் - படைப்பாளிகளின் இழப்புச் செய்திகள் மனதைக் கலங்கடிக்கின்றன.

அவரது படைப்புகளாலும் சமூக விடுதலைப் பணிகளாலும் கல்விப் பணியாலும் அவர் நாமம் எம் மக்கள் மத்தியில் என்றும் நிலைத்திருக்கும்.

**வி.ரி. இளங்கோவன்**
பாரிஸ், பிரான்ஸ்

* * *

# A Great Writer and a Teacher Name: Kandiah Nadesu Pseudonym: 'Theniyan'

Kandiah Nadesu, the great Sri Lankan writer of the present time was born in 'Theniyaham', Polikandy, Valvettiturai on the 6th of January 1942 and died on the 22nd of May 2022 at his residence. He was the owner of many prestigious awards and titles given by reputed organizations and institutions and among them, the best was 'Sahithya Ratna' award honoured by the government of Sri Lanka.

To the world, Theniyan was known to be the greatest writer but to me, he was a wonderful and smart teacher of Tamil language.

Theniyan was a great listener.

Theniyan was a forceful orator.

Theniyan was an avid reader.

Theniyan was a popular writer.

As a teacher, Theniyan used the above abilities and talents in his classrooms. He held a record that was hard to beat. Generations of students who had the good fortune to be his students and who are holding positions of trust and responsibility and also as enthusiastic young writers who are following his steps now, will always remember him with gratitude and affection. In the classrooms, his sweetness of temper and winsome ways and above all his spicy humour had made learning Tamil Language a pleasure to the students. Even the most monotonous grammar lessons become lively and interesting when he explained them.

He had been a friend. He had been a guider. He will always remain in the hearts of his students as the noblest example of the noble profession, Teaching.

Also his students will never forget his 'thoughts' at the end of each lesson.

- Be pure in your thought.
  Be pure in your words.
  Be pure in your deeds.
- "It is not your knowledge, not your skills, and not your aptitude; it is your attitude that determines your altitude in your life."
  Let us pray the Almighty for his soul rest in peace.

C. Pararajasingam, J.P.
B.A. (Eng), Dip in ELT, Sp Trained in English

* * *

## படைப்பையும் வாழ்வியலையும் ஒன்றாகக் கொண்டவர்

"எல்லாம் காலவோட்டத்தில் தானாக மாறிவிடும் அல்லது அவரவர் விதிப்பயன்" என்ற சாதாரணர்களின் கருத்தியலில் இருந்து விடுபட்டு, சமூக கட்டுத்தளைகளை அறுத்தெறிவதற்காகப் பேனாவோடு பல்வேறு வழிமுறை

களையும் கையாண்டவர் எழுத்தாளர் தெணியான் என்பது தெணியானின் பிரதானமுகம். இந்த முகத்தினூடாக எத்தனையோ முகங்களை வரித்துக் கொண்டவர். இடதுசாரிக் கொள்கை சார்ந்து, கட்சி சார்ந்து, நிறுவன மயப்பட்ட செயற்பாடுகள் சார்ந்து, ஓர் இயங்கியலாளனாக விளங்கியமை அவரது எழுத்துக்கு அணிகலன்கள்.

சமூகத்தைக் கூர்ந்து கவனித்து எதிர்வினையாற்ற வேண்டிய பொறுப்பு படைப்பாளனுக்கு உண்டு. அவர் அதைத் தட்டிக்கழிக்காமல் செய்தார். உண்மைக்கும் பொய்மைக்கும் இடையில், நீதிக்கும் அநீதிக்கும் இடையில் நடுநிலை என்பது கிடையாது என்று, தான் சார்ந்த கொள்கையில் இறுதிவரை உறுதியாய் இருந்தவர்.

சாதியம் என்பதற்கப்பால் ஒடுக்குமுறை எந்த மட்டத்திலிருந்தாலும் – அது உயர்மட்டத்திலாயினும் சரி, அதிகார மட்டத்திலாயினும் சரி, ஆண்பெண்ணென்ற அடிப்படையிலாயனும் சரி – அவற்றுக்கெல்லாம் எதிராக, பொதுவாக குரல் எழுப்பியவர். எடுத்துக் காட்டாக, ஈழத்துப் பிராமணிய சமூகம் பற்றிய “பொற் சிறையில் வாடும் புனிதர்கள்“ என்ற நாவலைக் குறிப்பிடலாம்.

தன் சொந்த விடிவுற்காகப் போராடும் இனமொன்று, தமக்குள் நிலவும் அகப்புற முரண்பாடுகளை, அடக்குமுறைகளை களைந்தெறிய வேண்டும். அதைச் செய்யாமல் இனம் விடிவைப் பெறமுடியாது. உண்மையை சொல்லப் போனால், தெணியான் அதைத்தான் செய்தார். அஞ்சலிக் குறிப்பென்பதால் அவரோடு எனக்கான உறவைக் குறிப்பிடல் பொருத்தம். அவர் என் ஒன்று விட்ட அண்ணர். நான் சாதாரணதரப் பரீட்சை எழுதிய காலத்தில் அவரது பிறந்த இல்லமான தெணியகமே எனது முதல் நூலகமாக விளங்கியது. அங்குதான் காத்திரமான நூல்களை வாசிக்கும் பாக்கியம் பெற்றேன்.

பழகுவதற்கு இனியவர். மாற்றுக் கருத்துடையோரையும் மதித்து நட்புப் பாராட்டும் பண்பினர். பல்வேறு அறிஞர்களோடும், ஆய்வாளர்களோடும், படைப்பாளிகளோடும் உறவைப் பேணி, தெளிவுற விடயங்களை அறிந்து, தெளிவுறப் படைத்தவர். இதனால்தான் பேராசிரியர் கைலாசபதி, பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆகியோரின் அபிமானத்தையும் பெற்றவர்.

நான் கடைசியில் 2020 ஆவணி மாதத்தில் அவரை சந்தித்த பொழுது “தம்பி, 30 புத்தகங்கள் போட்டுவிட்டேன். இன்னும் எழுத ஆசை முடியாமல் இருக்கிறது” என்று ஆதங்கப்பட்டார். தன் வாழ்நாளின் இறுதி ஓரிரு வருடங் களைத் தவிர, ஒதுங்கிவிடாமல் இறுதிவரை படைத்துக் கொண்டிருந்தவர். தீண்டாமைக்கு எதிரான போராட்டங்களில் முன்னின்று உழைத்து குறிப்பிடத்தக்க வெற்றியையும் சமூகத்திற்குப் பெற்றுக் கொடுத்தவர். மேற்குறித்தவற்றை விட, தெணியானுக்கு வேறென்ன அடையாளம் வேண்டும்!

எஸ்.ஆர். தனபாலசிங்கம் (திருகோணமலை)

* * *

# தெணியான் இன்றி ஈழத்து நவீன தமிழ் இலக்கிய வரலாறு இல்லை

ஈழத்து எழுத்துச் சூழல் பல்வேறு தத்துவங்களாலும் சித்தாந்தங்களாலும் தனித்தனிக் குழுமங்களாக இயங்கிய மூன்று தசாப்தங்களுக்கு முந்தைய சூழலிலும் இப்பிரிவுகளைத் தாண்டி எல்லோரும் தெணியான்மீதும் அவரது எழுத்தின்மீதும் மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார்கள்.

கருத்து வேறுபாடுகளிடையேயும் யாவருடனும் மிகுந்த நட்புணர்வையும் மரியாதையையும் பேணிவந்த தெணியானின் உயர்ந்த பண்பு அதற்கான முதலாவது காரணம். தெணியானின் படைப்புக்களில் காணப்பட்ட வசியம், வீரியம் எந்தக் கொம்பனாலும் ஒதுக்கிவிடப்பட முடியாத பெரும்பங்கை இலக்கிய உலகில் ஆக்கிரமிப்பு செய்திருந்தமை இரண்டாவது காரணம்.

“டானியல், டொமினிக்ஜீவா ஆகியோரை ஏற்றுக்கொள்வதற்கு “வாணாசுரன் போர்” நடத்திய இலக்கிய உலகு, தெணியான் போன்றோரை மறுதலிக்க முடியாமல் ஏற்றுக்கொண்டது“ என்பது பேராசிரியர் கா.சிவத்தம்பியின் கருத்தாகும்.

ஈழத்து நவீன தமிழ் இலக்கிய வரலாறு, தெணியான் இன்றிப் பேசப்பட முடியாதது என்பது பல இலக்கிய ஆளுமைகளால் சொல்லப்பட்ட, ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தாகும்.

“யாழ்ப்பாணச் சமூகத்தினது பாரம்பரியத்தினதும் பண்பாட்டினதும் தவிர்க்க முடியாத சவாலாக நான் பேனா பிடித்தேன்“ என தனது “சொத்து“ சிறுகதைத் தொகுதியின் முன்னுரையில் தெணியான் குறிப்பிடுகின்றார். தனது வாக்குமூலத்திலிருந்து சற்றும் பிசிறு ஏற்படாமல் இலக்கியம் படைத்தவர், தெணியான்.

மனுக்குலத்தின்பாற் கொண்ட நேசிப்பின் காரணமாக ஒரு சமத்துவ உலகை அவாவிய உந்துதலில் பேனாவைக் கையிலெடுத்த தெணியான் ஒடுக்குமுறைகள், அடக்குமுறைகள் எந்த ரூபத்தில் வந்தாலும் அதற்கு எதிராக ஒரு சத்திய ஆவேசத்துடன் போராளியாக நின்று போரிட்டார். வெறுமனே எழுத்தோடு மட்டுமே நின்றுவிடாது அவசியமான சந்தர்ப்பங்களில் களத்தில் நின்று ஆக்கிரோசத்தோடு போராடினார்.

தனது படைப்புக்களில் பிரசாரத்தொனி மேலெழும்பிவிடாமல் கலைத்துவத்தோடு தனது நோக்கத்தை நிறைவேற்றிவிடுவதில் அவர் சமர்த்தர். அந்த மந்திரசக்தி அவருக்கேயானது. ஆனால் அவரது எழுத்து பாசாங்கற்றது. சாமானியனுக்காக எளிதான மொழியில் இலக்கியம் படைத்தாலும், எந்தச் சந்தர்ப்பத்திலும் தரத்தில் கீழிறங்கியது கிடையாது.

“என்னை, என் எழுத்துக்களை எதிர்த்தவர்களும் ஒரு வகையில் என்னை ஊக்குவித்தவர்கள்தான்“ என ஒரு கட்டத்தில் கூறியிருந்த தெணியான்,

ஈழத்து எழுத்தாளர்களில் இறுதிவரை எழுதிக்கொண்டிருந்த மிகச்சிலரில் ஒருவர். ஆயினும் தெணியானின் எழுத்தில் காலவோட்டத்தின் மாற்றங்கள், இற்றைப்படுத்தப்பட்ட எண்ணக்கருக்கள், வடிவச்செழுமை, முதிர்ச்சி என்பவற்றில் தொய்வு ஏற்பட்டதில்லை..

1964ல் "விவேகி" மாத இதழில் "பிணைப்பு" சிறுகதையினூடாக சிற்றிதழ்களினூடான தெணியானின் தொடர்பு நீட்சி பெற்று, "ஜீவநதி"யில் முழுமை பெறுகின்றது. உள்நாட்டிலும் தமிழகம் உட்பட வெளிநாடுகளிலும் தெணியானின் படைப்புக்களைத் தாங்கி தம்மை அலங்கரித்துக் கொள்ளாத சஞ்சிகைகள் பெரும்பாலும் இல்லையென்றே கூறலாம். வடமராட்சியில் மட்டுமல்ல வெளியேயும் தெணியானின் காத்திரமான தலைமையில் வெளியிடப்பட்ட நூல்கள் கருத்தரங்குகள், விவாத அரங்குகள் கணக்கற்றவை.

எந்தவித அகவயச் சிக்கலுக்கும் உள்ளாகாமல் இயலுமானவரை எல்லோருடைய நன்மை தீமைகளிலும் கலந்து உறவைப் பேணுவதிலும் தெணியான் தனித்துவமானவர். எழுத்தோடு தன்னை மட்டுப்படுத்திவிடாமல், தெணியான் நல்லதொரு சமூக செயற்பாட்டாளராக வாழ்ந்து சென்றமையும் ஒரு வரலாற்றுப் பதிவுதான்

தெணியானின் மறைவு, ஈழத்து நவீன தமிழ் இலக்கியத்துக்கு ஏற்பட்ட ஒரு பேரிழப்பு!

கொற்றை பி. கிருஷ்ணானந்தன்

* * *

# மூத்த தலைமுறை எழுத்தாளர்

இலங்கையின் மூத்த தலைமுறை எழுத்தாளர்களில் ஒருவரான "தெணியான்" (க. நடேசன்) மறைந்தார்.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் முக்கிய தூண்களுள் ஒருவராகச் செயற்பட்ட தெணியான், நூற்றுக்கணக்கான புனைகதைகளை எழுதியுள்ளார். அச்சேறிய நூல்கள் பல. இவர் எழுத்தாளர் க. நவம் (கனடா) அவர்களின் மூத்த சகோதரராவார்.

தெணியானின் குடும்பத்தினர், உறவினர், நண்பர் அனைவரினதும் ஆழ்ந்த துயரில் நானும் பங்கேற்கின்றேன்.

ஜவார்த் மரைக்கார்
புத்தளம்

* * *

# ஆழ்ந்த இரங்கல்கள்!

மிகுந்த துன்பமளிக்கும் செய்தி!
நண்பர் தெணியான் காலமாகிவிட்டார்.
மிகுந்த வேதனையாக இருக்கிறது.
குறைந்தது நாற்பது வருட நட்பு.
எவ்வளவு நிகழ்வுகள் கூட்டங்கள் .....
அறிவோர் கூடல் உட்பட ...
சில தினங்களுக்கு முன்னர்கூட சந்தித்திருந்தேன்.
மூப்பும் உடல் நலிவும் அவரை மிகவும் பாதித்திருந்தன.
ஆயினும் ஜீரணிக்க முடியவில்லை, இந்த இழப்பை..
மீண்டும் சந்திக்காமலா இருக்கப் போகிறோம்?
ஆழ்ந்த இரங்கல்கள்!

டாக்டர் எம்.கே. முருகானந்தன்

* * *

# தமிழ் எழுத்தும் பேச்சும் சொல்லித்தந்து முதல் பரிசு பெறவைத்து அழகு பார்த்த ஆசான்

கருங்கல் ஒன்று நல்லதொரு சிற்பியால் செதுக்கப்பட்டு, பிரகாசிக்கும் சிலையாகிறது. உடையும் கற்கள் படிக்கட்டுகளாகின்றன. துகள்கள் கழிவாகின்றன. இது போன்று எனது வாழ்க்கையை, 1969ம் ஆண்டு நெல்லில் அ... ஆ... இ... என எழுதப் பழக்கி, ஏடு தொடக்கிவிட்ட நாள் முதல், எனது கல்விச் செயற்பாடுகளில் மிகுந்த அக்கறைகொண்டு செதுக்கியெடுத்தவர், அமரர் தெணியான் அவர்கள். தனது உடன்பிறவா சகோதரியின் மகன் என்பதும், தமிழில் தனக்கென ஒரு வாரிசு தனது பாதையில் பயணிக்க வேண்டும் என்பதும் அதன் காரணமாக இருந்திருக்கலாம்.

1980ல் தேவரையாளி இந்துக் கல்லூரி மாணவர் மன்றப் பட்டிமன்ற நிகழ்வில் என்னை ஒரு அணியின் தலைவனாக்கி, நான் தயங்கி நின்றபோது தைரியமூட்டி, கன்னிப் பேச்சைப் பேசவைத்தவர். பின்னர் பல மேடைகளேறிப் பேச ஊக்குவித்தவர். மேடைப் பேச்சின் உத்திகளைக் கற்றுத்தந்தவர். 2010ம் ஆண்டில் அகில இலங்கை ரீதியாக நடைபெற்ற அஞ்சல் திணைக்கள பேச்சுப் போட்டியில் நான் 1ஆம் பரிசு பெற அத்திவாரமிட்டவர்.

1982ம் ஆண்டு பாடசாலை மாணவர்களுக்கிடையே நடைபெற்ற சிறுகதைப் போட்டி யாழ் உடுப்பிட்டி பெண்கள் கல்லூரியில் நடைபெற்றபோது,

என்னையும் அதில் பங்குபற்ற அழைத்துச் சென்று, மனதில் தைரியமூட்டும் பொருட்டு ஆசான் சொன்ன வார்த்தைகள் இப்போதும் எனது காதில் ஒலித்து கொண்டிருக்கிறன. "நீ தெணியானின் மாணவன், உன்னை வெல்ல யாருமில்லை, என்னை நினைத்துக்கொண்டு பயப்படாமல் எழுது" என்றவர். பயத்தை விட்டேன், தெணியானை நினைத்தேன். சிறுகதையை எப்படி எழுதினேன், எப்படிப் "பரிசு" என்ற பொருத்தமான தலைப்பிட்டேன் என்று நினைத்து பார்க்கிறேன். போட்டி முடிவுகள் வரும்வரை நான் காத்திருக்க வில்லை. வீடுவந்து சேர்ந்து விட்டேன்.

மாலை நேரம் எமது ஊரில் ஒரு கொண்டாட்டம். என்னைத்தேடி எனது ஆசான் தெணியான் வந்திருந்தார். அந்தச் சபையில் என்னைக் கட்டித்தழுவி, எனது சிறுகதைக்கு முதல் "பரிசு" கிடைத்த மகிழ்வான செய்தியைச் சொன்னார். இனியார் உண்டு இதைச் செய்ய ..... ?

உலகறிந்த சமூக விடுதலைப் போராளியான எனது ஆசானே மார்க்சிய சிந்தனைகளை எனது மனதில் விதைத்தவர். "நீ ஒரு சபைக்கு அழைக்கப்படுகிறாய் என்றால், அச்சபை பற்றிய சிறுகுறிப்பு ஒன்றை எழுதி, உனது பையில் போட்டுக்கொள். அது உன்னைச் சபையில் பாதுகாக்கும்" எனச் சொல்லித் தந்தவர்.

ஆசான் எமது ஊரில் நடைபெற்ற சில கூட்டங்களில் பேசும்போதும், மற்றவர்களிடம் என்னைச் சுட்டிக்காட்டிக் கதைக்கின்றபோதும் "இவன் தம்பி, பேனா பிடிப்பான் என்று பார்த்தால், விசிலைப் பிடித்துக்கொண்டு களமாடுகிறான்" என்று ஆதங்கப்பட்டதையும் நானறிவேன்.

எனது ஆசான் அமரர் தெணியானுடைய ஆதங்கத்தை நிறை வேற்றுவேன் அவருடைய பாதையில் சிறுதூரமாவது நடக்க முயற்சிப்பேன் என்பதை இந்தப் பதிவின் மூலம் பிரகடனப் படுத்துகின்றேன்.

அமரர் தெணியானுடைய பூதவுடல் அழிந்துவிட்டதே ஒளிய, அவர் என்றும் எம்முடன் வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார், இருப்பார் என நாம் தேறுதல் அடைவோமாக! சாந்தி! சாந்தி! சாந்தி!

அ. அருளானந்தசோதி
தபால் அதிபர், பருத்தித்துறை

* * *

# விக்னேஸ்வரா விக்னேயன்

எமது கல்லூரியின் பழைய மாணவரும் ஈழத்தின் மூத்த எழுத்தாளரு மான உயர்திரு. கந்தையா நடேசு (தெணியான்) அவர்கள் நேற்று

(2022.05.22) மாலை தனது 80ஆவது அகவையில் இறைபதம் எய்தினார்.

1942.01.06 இல் யாழ் மாவட்டத்தின் வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள பொலிகண்டி கிராமத்தில் பிறந்தவர். தமிழ் ஆசிரியராக நீண்ட காலம் பணியாற்றி, பகுதித் தலைவர், கனிஸ்ட அதிபர், உபதிபர், தொலைக் கல்விப் போதனாசிரியர் போன்ற பதவிகளை வகித்து 2002 ம் ஆண்டு ஓய்வு பெற்றவர்.

இவரது இலக்கியப் பணிக்காக இலங்கை அரசு "சாகித்யரத்னா"(2013), வடக்கு மாகாண "ஆளுனர் விருது"(2008), இலங்கை இந்து கலாசார அமைச்சு "கலாபூஷணம்"(2003) என்பவற்றை வழங்கி இவரைக் கௌரவித்துள்ளன.

இவரது "கழுகுகள்" நாவல் "தகவம்" பரிசையும், "மரக்கொக்கு" நாவல் இலங்கை அரசினதும், வடகிழக்கு மாகாண சபையினதும் சாகித்திய விருதுகளையும், "காத்திருப்பு" நாவல் வடகிழக்கு மாகாண சபையின் பரிசையும், "கானலின் மான்" நாவல் இலங்கை அரசின் சாகித்திய விருதையும், "குடிமைகள்" நாவல் இலங்கை அரசின் சாகித்திய விருது கொடகே விருதையும், "சிதைவுகள்"குறுநாவல் தேசிய கலை இலக்கியப் பேரவை பரிசையும், சுபமங்களா பரிசையும், சின்னப்ப பாரதி அறக்கட்டளை விருதையும், "ஒடுக்கப் பட்டவர்கள்" சிறுகதைத் தொகுதி "கொடகே" விருதையும் பெற்றுள்ளன.

சிறந்த மேடைப் பேச்சாளரான இவர் இள வயதிலிருந்தே மார்க்சியக் கோட்பாட்டில் ஈடுபாடு கொண்டிருந்தவர். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தளகர்த்தர்களுள் ஒருவர். சங்கத்தின் யாழ் கிளைச் செயலாளர். சிறுபான்மைத் தமிழர் மகாசபை யில் இணைந்து சாதியத்துக்கு எதிரான போராட்டங்களில் பங்குகொண்ட ஒரு சமூக விடுதலைப் போராளி.

ஒடுக்கப்பட்ட அடிநிலை மக்கள் மீது பரிவு கொண்டு அவர்களது விடுதலைக்காகத் தனது படைப்பாளுமையை அர்ப்பணித்தவர்.

ஏற்றத்தாழ்வற்ற ஒரு சமுதாயமே அவரது இலட்சியமாக இருந்தது. அவரது இழப்பு பேரிழப்பாகும். அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**விக்னேஸ்வராக் கல்லூரிச் சமூகம்**

* * *

## தெய்வத் திருமுகம்

அமுதசுரபி என்று கேள்விப்பட்டிருக்கிறேன். மணிமேகலா தெய்வம், மாதவி மகள் மணிமேகலைக்கு வழங்கிய, அள்ள அள்ளக் குறையாது வழங்கும் அட்சய பாத்திரம் - அது ஒரு ஜடப் பொருள்.

ஆனால் உயிருள்ள அமுதசுரபி ஒன்றை நான் வாழும் காலத்தில்

சந்திக்கக் கிடைத்தது உள்ளத்திற்கு உவகையூட்டுவதாகும்.

தனது தமிழால் எம்மை வழிப்படுத்தி, நெறிப்படுத்திய தெய்வம் தெணியான்.

கதையால் கட்டுரையால் நாவலால் மனித இதயத்தில் தேன்வந்து பாயுமாறு எழுதிய எழுத்தாளன்.

அடக்கமும், அமைதியும் நிரம்பிய ஆழ்ந்தகன்ற தமிழ்ப் புலமை யாளன்.

நடைமுறையில் மிக எளிமையானவர்.

கடின உழைப்புக்கு "தெணியான்" என்று கூறத்தக்க அளவுக்கு சகல விடயங்களிலும் உழைப்பால் உயர்ந்தவர்.

எப்போதும் உழைத்துகொண்டிருப்பதையே விரும்புபவர். இத்தகைய ஊக்கம் உடைய அவரைத் தேடி ஆக்கம் சென்று சேருவதில் வியப்பில்லை.

ஆழ்ந்த அறிவும், அடக்கமும், பொறுமையும் அவரது அணிகலன்கள்.

அநீதியைக்கண்டு கொதிப்படையும் குணம் அவருக்கு இயல்பாகவே அமைந்தது. தமக்காக மட்டுமன்றி, பிறர் எவருக்காகவும் நியாயம் என்று தோன்றுமிடத்துத் தர்மாவேசக் குரல் எழுப்புகின்ற தார்மீகம் அவரிடம் உண்டு.

சென்று வா தமிழே, உன்னைத் திரும்பவும் சந்திக்கின்றேன்.

பாசத்தால் வந்த மகன்
நயினை கி. கிருபானந்தா
செயலாளர், யாழ். இலக்கிய வட்டம்

* * *

# Theniyan, an Indomitable, Intrepid campaigner for Social Justice, Passed away on 22.05.2022

Theniyan, an eminent writer was born as the second child to late Mr. Kanthaiah and Mrs. Sinnamah Kanthaiah on 06.01.1942. He wrote under the pen-name (Theniyan), since Theni was his birth place. Theni is situated at Polikandy, 3 kilo metres away from Valvettiththurai.

He had his early education at J/Thevarayali Hindu College and the secondary school education at J/Vigneswara College, Karaveddy. He underwent a Teacher training course at the teacher training college Colombothurai.

His first teacher appointment was at Ampitya Sinhala Maha

vidiyalaya, Bandarawala. From there he started his writing career.

After serving to other schools in the North, he finaly came to Thevarayali Hindu College. For him Thevarayali was a rich and fertile ground to write.

He wrote mostly about problems, confronted by the marginalised sections of the Tamil society. Theniyan had a deep and abiding interest in the problems faced by these people. According to him, “It is very unfortunate that most of the Hindu temples still deny entry into the temples for this particular section of the people in the North of Sri Lanka.They cannot become principals to some of the so called leading government schools. He castigates and tells, ”We still as Tamils in the North call ourselves a civilized community in this world.”

Theniyan associated well with Prof. Dr. K. Sivaththampi, K. Daniel and Dominic Jeeva. Most of his short stories and other writings appeared in Mallikai. He also wrote regularly to JEEVANATHY, published by Mr. K. Bharaneetharan. He was a Marxist by conviction. He was a member of the Communist Party of Sri Lanka (Moscow wing). He was also a member of the Minority Tamils' Maha Sabha and finaly became the president of the Sabha. He functioned as the Secretary of the Progressive Writers Association in the northern region of the country. He tirelessly worked hard for three days to make Maha Kavi Subramaniya Bharathiyar Centenary celebration a success.

Altogether he wrote 150 short stories and 14 novels. He was the recipient of 'Sahitiya Ratna' for his contribution in Tamil Literature. It is the highest prestigious Award the Sri Lankan government gives to any person who excels in the field of Literature. As a writer he has served a riche for himself in the field of Tamil literature.

He wrote his first novel 'Vidivai Noki' in 1973. By writing this he became the first Novelist of Vadamarachy. 'Marakoku' (1994) another one of his popular novels won the Sahitiya Award of the North East Provincial Ministry and the Award of Srilanka Literary association. Besides these he has written short novels too. He also wrote many poems and a few dramas for Sri Lanka Broadcasting Corporation. Some of his works were translated in English and Sinhala Languages as well.

He was awarded with Kalabooshanam in 2003. He was a recipient of the award conferred by the Governor of Northern Province. He was feted several times by authors of different magazines and by the

people of Vadamarachy and Colombo.

Before, I conclude, I am writing a personal note. I was cordinator and senior tutor for Distance Education for Vadamarachy nearly 7 years. Then programme was initiated by the national Insitutute of Education, Maharagma. Theniyan was the Tutor for the primary section teacher. He assisted me well and to the satisfaction of all. I take this opportunity to thank him for his services he rendered.

May his Soul rest in peace at the feet of the Almighty!

K. Thamasirirajah

* * *

## கண்ணீர் அஞ்சலி!

தெணியான் எனும் பெயரில் அறியப்பட்ட கந்தையா நடேசன் அவர்கள் இலங்கையில் இலக்கியத்துக்கான அதி உயர்விருதான சாகித்ய ரத்னா விருது பெற்றவர். இன்று காலமான செய்தி கிட்டிக் கலங்கி நிற்கிறோம்.

தனது எழுத்துக்களால் விளிம்பு நிலை மக்களின் வாழ்வினை வரலாறாக்கிய தெணியான்

1942ல் யாழ் மாவட்டத்தின் வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள பொலி கண்டி, கொற்றாவத்தை கிராமத்தில் பிறந்தவர். தொழில் ரீதியில் தமிழ் ஆசிரிய ராக நீண்டகாலம் பணியாற்றி, யா/கரவெட்டி ஸ்ரீ நாரதவித்தியாலயம் அரச பாடசாலையாக அங்கீகாரம் பெற்றபோது தலைமை ஆசிரியர் உயர்வுப் பொறுப்புப் பெற்றவர். தொடர்ச்சியில் பகுதித் தலைவர், கனிஸ்ட அதிபர், உபஅதிபர், தொலைக்கல்விப் போதனாசிரியர் போன்ற பதவிகளை வகித்து 2002ம் ஆண்டு ஓய்வு பெற்றவர்.

முற்போக்கு எழுத்து அணியைள சேர்ந்த தெணியான் கலகக்கார எழுத்தாளர்கள் அணியில் முதல் வரிசையினை சேர்ந்த படைப்பாளி...

...சிறந்த மேடைப்பேச்சாளரான இவர் இளவயதிலிருந்தே மார்க்சியக் கோட்பாட்டில் ஈடுபாடு கொண்டிருந்தவர். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் ஆயுள் கால உறுப்பினர். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தளகர்த்தராக அங்கம் வகித்த நாளில், சங்கத்தின் யாழ் கிளைச்செயலாளர் பொறுப்பினை வகித்தவர். சிறுபான்மைத் தமிழர் மகாசபையில் இணைந்து சாதிய ஏற்றத்தாழ்வுக்கு எதிரான போராட்டங்களில் பங்குகொண்ட ஒரு சமூக விடுதலைப் போராளி.

ஏற்றத்தாழ்வற்ற சமத்துவமான சமுதாயமே அவரது இலட்சியமாக

இருந்தது.

எனக்குத் தமிழ் கல்வியைப் புகட்டிய ஆசான். எனது தந்தையாரை அண்ணர் என அழைத்தாலும், அவரது நெருக்கமான தோழர். எனக்குச் சிறந்த வழிகாட்டியாகவும் ஆதர்சனமாகவும் விளங்கிய அவரது இழப்பு, ஒரு பேரிழப்பாகும்.

சத்தியதாஸ் தவராசா
பாரிஸ், பிரான்ஸ்

* * *

# ஒரு பொதுவுடமைவாதியை இழந்தோம்

தெணியான் தமது இளம் வயதிலேயே இலங்கைப் பொதுவுடமைக் கட்சியில் இணைந்துகொண்டவர். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் முக்கிய பங்கு வகித்தவர். சிறுபான்மைத் தமிழர் மகாசபையிலும் அங்கம் வகித்ததுடன், சாதி ஒழிப்பு, தேநீர்கடை - ஆலயப்பிரவேசம் என்பவற்றிற்காகவும் போராடியவர். குறிப்பாக பொலிகண்டி கந்தசாமி, வதிரி உல்லியனொல்லை அம்மன், மாலிசந்திப் பிள்ளையார் போன்ற ஆலயங்களின் பிரவேசங்களில் முக்கிய பங்கு வகித்தவர். அவருக்கு உறுதுணையாக வதிரியைச் சேர்ந்த அவரது நண்பர்களான சி.க. இராஜேந்திரன், அல்வாயைச் சேர்ந்த செ. சதானந்தன் ஆசிரியர் ஆகியோர் பொதுவுடமைக் கட்சியிலும், சாதி ஒழிப்புப் போராட்டத்திலும் இணைந்து செயலாற்றியவர்களாவர்.

பேச்சாற்றல், வாதாடும் திறமை என்பன காரணமாக யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுவந்த பட்டிமன்றங்களில் எல்லாம், ஒரு காலத்தில் தெணியானின் குரல் ஓங்கி ஒலித்தது. அவரின் பேச்சில் நயம், நளினம் என்பவற்றுடன் நகைச்சுவை உணர்வும் கலந்திருக்கும். இலக்கியக் கூட்டங்களில் எல்லாம் கடைசிப் பேச்சாளராகப் பேசும் அளவிற்கு அவரின் மொழியாற்றலும், நாவன்மையும் சிறப்பாக அமைந்திருந்தது.

தெணியானின் இல்லத்திற்கு அவரைச் சந்திப்பதற்கென அண்மையில் எனது தந்தையாருடன் சென்றிருந்தேன். எழுதக்கூடிய நிலையில் இல்லாத போதிலும் ஓரளவு ஆரோக்கியமாக இருந்தார். அண்மைக்காலச் சம்பவங்கள் பற்றிக் கலந்துரையாடினார். எவ்வளவுதான் எழுதியும், சிந்தனைகளைக் கொட்டியும், இடையறாது போராடியும் மனிதர்கள் ஏற்றத்தாழ்வுடன் தான் இருக்கின்றார்கள் என்றும் - சமூக வேறுபாடுகள் வேறு உருவங்களில் இன்னமும் நடமாடி வருவதாகவும் சொல்லி மனம் வருந்தினார்.

ஏற்றத் தாழ்வற்ற ஒரு சமதர்ம சமுதாயத்தை அமைக்கத் தமது

எழுத்துக்களைப் பயன்படுத்தி அயராது உழைத்த ஒரு பொதுவுடமைவாதியின் இழப்பு ஆழ்ந்த கவலையைத் தருகின்றது. அன்னாரின் பிரிவால் வாடும் அனைத்து உள்ளங்களுக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

செகா சிவா

ஸ்காபரோ, ஒன்ராறியோ, கனடா

* * *

# முற்போக்குப் பேரிலக்கியவாதி

முற்போக்கு இலக்கிய ஆளுமை "தெணியான்" அவர்களுக்கு என் ஆத்மார்த்த அஞ்சலி!

எம்முணர்வுள் முற்போக்கு இலக்கியம் வளர்த்த எழுத்துலக ஆளுமை தெணியானின் இழப்புச் செய்தி மிகுந்த துயர் தருகின்றது. சிறுகதைகள், நாவல்கள், கட்டுரைகள் வாயிலாக எம் சமூகத்து விடியலிற்காக தன் மூச்சுள்ள வரையில் தொடர்ச்சியாக இயங்கிய புரட்சியாளன்.

தெணியான் என்ற புனைபெயரால் எல்லோர் மனதிலும் நீக்கமற நிறைந்த கந்தையா நடேசன் அவர்கள் ஈழத்தின் முற்போக்கு எழுத்தாளர் களில் மிக முக்கியமானவர். ஆசிரியராகப் பணியாற்றிய தெணியான் அவர்களின் இலக்கியப் பயணம் செம்பியன் செல்வனை ஆசிரியராக கொண்ட விவேகியில் "பிணைப்பு" என்ற சிறுகதையுடன் ஆரம்பித்தது என்கிறது அவரது வாழ்வியற் குறிப்பு.

"விடிவை நோக்கி" என்கின்ற அவரது வீரகேசரிப் பிரசுரமாக வந்த நாவல் எழுத்துலகின் புதுமைப் புரட்சி. "கழுகுகள்", "பொற்சிறையில் வாடும் புனிதர்கள்", கனடாவின் நான்காவது பரிமாண வெளியீடாக வந்து தமிழர் தலைமுறையை உலுப்பிப் போட்ட "மரக்கொக்கு" மற்றும் "காத்திருப்பு" என்று அவரின் இலக்கிய வேள்வி காலத்தால் அழியாதவை.

ஈழத் தமிழிலக்கிய வரலாற்றிலே அடிநிலை மாந்தரைப் பேசிய இலக்கியவாதிகளுள், டானியல் அவர்களைப் போல் தெணியான் முதன்மை யானவர். இலக்கியத்திற்கான முக்கிய சமுதாயப் பணியென தன்னைச் சூழவுள்ள சமூக முரண் பாடுகளை, சிறுமைகளை, அறியாமையின் அவலங் களை, சாதியக் கொடூரங்களை தன் எழுத்திலே வெளிச்சம் போட்டு நின்ற துணிச்சல் மிகு முற்போக்குப் பேரிலக்கியவாதி.

ஈழத்தின் மற்றுமொரு அதிசயிக்கத்தக்க முற்போக்குப் படைப்பாளியும், நான்காவது பரிமாணம் வெளியீட்டாளரும், பழக இனிய முற்போக்குத்

தோழமையுமான க. நவம் அண்ணாவின் அன்புத் தமையனார், எழுத்தாளர் தெணியான் அவர்கள்.

எழுத்தால் பூவுலகை விடிய வைக்கத் துடித்த, எழுத்துலகப் பிரமாவிற்கு என் ஆத்மார்த்த அஞ்சலி!

மா. சித்திவினாயகம்
ப்ராம்ரன், ஒன்ராறியோ, கனடா

* * *

# முற்போக்கு எழுத்தியக்கத்தின் அடையாளம்

எழுத்தின் சமூகப் பெறுமானம் பற்றிய தீவிர கரிசனையோடு இயங்கிய, மூத்த எழுத்தாளர் தெணியானின் மறைவில் துயர் பகிர்கிறோம்.

சில மாதங்களுக்கு முன்னர் வடமராட்சிக்கு சென்றிருந்த வேளை, அவரைச் சந்திக்க எண்ணியிருந்தேன். சந்தர்ப்பவசத்தால் அது கைகூடாமல் போனது துயரம்தான்.

டானியல், டொமினிக் ஜீவா, தெணியான் என்ற முப்பெரும் ஆளுமைகளால் நமது எழுத்துப் பரப்பு இன்னும் விரிவு பெற்றது.

முற்போக்கு எழுத்தியக்கத்தின் அடையாளம் அவர். சாதிய ஆதிக்கத்தை எதிர்த்து ஓயாது இயங்கிய சமூகப் போராளி.

ஒடுக்கப்பட்டோரின் குரலாக ஒலித்த தெணியானுக்கு அஞ்சலிகள்.

சிராஜ் மஷ்ஹூர்

* * *

# தெணியான் எனும் பெரு விருட்சம்

எங்களின் அடையாளம், எங்களின் பாதுகாப்புக் கவசம் தெணியான். தெணியானின் சொந்தக்காரன் என்றால் மேற்கொண்டு எவரும் எதுவும் பேச மாட்டார்கள்.

தெணியான் சேருடனான உறவு, தலை முறை தாண்டி இன்றும் தொடர்கிறது. சூரன், வைத்தியர் சிலம்பு (அம்மாவின் தகப்பன்) ஆகிய இருவரும் அந்த ஊரவர்களுடன் மிக நெருக்மாகப் பழகியவர்கள். அப்பா ஏகாம்பரம், மாமி சூரன் சிவா ஆகிய இருவரும் தெணியான் சேரின் ஆசிரியர்கள். நானும் எனது சகோதரர்களும் அவரின் மாணவர்கள். தெணியான் சேரின் மகளும் எனது சகோதரியும் ஒன்றாகப் படித்தவர்கள். விடுமுறை காலங்களில் எனது சகோதரி

அங்கு போவார். அவர் எங்கள் வீட்டுக்கு வருவார்.

மாமி சிவபாக்கியம் சேரைச் சந்திக்கப்போகும் போது என்னையும் கூட்டிச் செல்வார். சில வேளை அங்கு சாபிட்டுவிட்டுத்தான் வருவோம். எனது இல்லற வாழ்க்கையை நிச்சயித்த பெரியவர்களில் தெணியான் சேரும் ஒருவர். வீட்டுக்குச் சென்றாலும், பொது நிகழ்ச்சிகளில் காணும்போதும் அப்பன், தம்பி, ராசா என்ற பரிவான வார்த்தைகளில் அழைப்பார். சூரனின் சமயப்பணி, சமூகப்பணி, சினிமா ரசனை என்பனவற்றை உலகுக்கு எடுத்தியம்பியவர்களில் முதன்மையானாவர், தெணியான் சேர்.

அலுவலகத்தில் ஒரு நாள் ஓய்வு நேரத்தில் பலதையும் கதைத்துக் கொண்டிருந்த போது, “பத்திரிகையில் வேலை செய்வது பெருமைதான், வருமானத்தை வெளியில் பெருமையாகச் சொல்ல முடியாது“ என்று கதை தொடர்ந்த வேளையில், “நாங்கள் பொற்சிறையில் வாடும் புனிதர்களப்பா” என்றேன், நான். “நல்லதொரு பஞ்ச் டயலக்” என ஒருவர் சொன்னார். “தெணியான் சேர் எழுதிய நாவல்.....” என மேலோட்டமாகக் கதையைச் சொன்னேன். எங்களுடன் வேலை செய்த பிராமணப் பெண்பிள்ளை, அந்த நாவலைத் தரும்படி கேட்டார். முழுவதும் படித்துவிட்டுப் பாராட்டினார்.

நீங்கள் மறையவில்லை உங்களுடைய பெயர் எங்களுடன் வாழ்கிறது.

ஏகாம்பரம் ரவிவர்மா

* * *

## நாவலாசிரியரும் முற்போக்கு இடதுசாரி எழுத்தாளருமாகிய தெணியான் மறைவையொட்டி...

எனது பதின்ம வயதுகளில் முதன் முதலாக வாசிப்புப் பழக்கம் என்னை வந்து தொற்றிக் கொண்டபொழுது, எனது வகுப்பறைத் தோழன் ரஹ்மத் துல்லாஹ் சின்னலெப்பையினால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டவர்தான் தெணியான். நாவல் ஆசிரியராக நான் முதலில் அறிந்துகொண்டது அவரைத் தான்.

அதன் பின்னர்தான் டானியல், நந்தி போன்ற ஏனைய யாழ்ப்பாண எழுத்தாளர்களும் அதைத் தொடர்ந்து தமிழக எழுத்தாளர்களாகிய கல்கி, சாண்டில்யன், ஜானகிராமன், டாக்டர் மு. வரதராஜன், ஜாவர் சீதாராமன், லட்சுமி, வாஸந்தி, லாசரா, ஜெயகாந்தன், சுஜாதா என்று எண்ணற்ற

எழுத்தாளர்கள் அறிமுகமாகின்றனர்.

வாசிப்பு மட்டுமே உலகமாகிப் போயிருந்த அன்றைய நாட்களில் மனம் புகுந்த தெணியான் இறுதி வரை வெளியேறவே இல்லை. எனது பெருமதிப்புக்கும் பேரன்புக்கும் உரிய உயிரியல் ஆசிரியரும் எழுத்தாளருமாகிய க. நவரட்ணம் அவர்களின் சொந்த சகோதரர்தான் தெணியான் என்பது மிக நீண்ட நாட்களின் பின்னரே தெரிய வருகின்றது.

குடிபெயர்வின் பின்னர் நவம் Sir அவர்களின் தொடர்பு மீண்டும் கிடைத்ததனால் தெணியான் பற்றிய நினைவுகளும் அவ்வப்போது வந்து போவதுண்டு.

மனிதன் இறவா வரம் பெறுவதற்கு இருக்கின்ற ஒரு மிக முக்கியமான வழி எழுத்து என்று நம்புகின்றவன் நான். அந்த வகையில் இன்றும் அழியாத பெயர் பெற்ற எண்ணற்ற எழுத்துலக ஜாம்பவான்களை நாம் அறிவோம்.

தெணியான் உலகில் தாம் தடம்பதித்த சரித்திரத்தைப் பொற்சித்திரமாக வரைந்து விட்டே சென்றிருக்கின்றார்.

அவர் ஆத்மா சாந்தியடையவும் அவர் குடும்பத்தார் ஆறுதல் பெறவும் பிரார்த்திக்கின்றேன்.

**டாக்டர் எஸ். நஜிமுதீன்**
வன்கூவர், கனடா

* * *

# ஆழ்மன அஞ்சலி மரியாதை!

சமத்துவ நீதியின்
குரலாக... எழுத்தாக... செயலாக...
நிமிர்ந்து நின்ற
முற்போக்குப் பன்மைத்துவ
ஆளுமையின் இழப்பு...
அசையாதென
நினைத்ததையெல்லாம்
எழுதுகோல் கொண்டு
அசைத்து நிமிர்ந்தவர்...
ஆசான் தெணியானுக்கு
ஆழ்மன அஞ்சலி மரியாதை!

**சிவச்செல்வன் எஸ். விந்தன்**
ஸூரிச், சுவிற்ஸலாந்து

# தெணியான் Sir!

வெள்ளை வேட்டி, மெல்லிய நிறத்தில் பெரும்பாலும் அரைக் கை சேட், தடித்துக் கறுத்த பிறேம் போட்ட மெல்லிய நீல வர்ணக் கண்ணாடி, மேலதிக புரதமோ - கொழுப்போ திரளாத திடமான உடல், சராசரியை விடச் சற்று உயர்ந்த மிக மிடுக்கான தோற்றம், பிசிறற்ற கணீரென்ற இயற்கையான குரல், இவற்றின் உடமையாளர்தான் எங்கள் Sir, ஊருலகம் போற்றும் "தெணியான்". ஆனால் என்னாவோ தெரியவில்லை.... அவரை "தெணியான்" என்று என்னால் விழிக்க முடியவில்லை. அவர் எப்போதும் எனக்கு ஆசானே. இப்பவும் அதே பயம் என்னுள்!

கல்வி, தொழில் நிமித்தம் ஊரைவிட்டு வெளியூர்களுக்குச் சென்றதன் காரணமாக - நான் வளர்ந்து பெரியவனாகி வாசிப்பிலும் எழுத்திலும் இலக்கி யத்திலும் சற்று பிடிப்பு வந்த காலங்களில் - Sir உடன் பழக வாய்ப்புக்கள் இல்லாமல் போயின. ஊரிலேயே நான் இருந்திருந்தால் Sir இன் தீவிர விசிறியாக மட்டும் அல்லாமல், அவரின் சிந்தனைகளாலும் எழுத்துக்களாலும் ஆகர்ஷிக்கப்பட்டு எழுத ஆரம்பித்திருப்பேனோ என்னவோ! ஏன், தூரதேச வாசியாக இருந்தும் அவரின் சில சிந்தனைகள், கருத்துக்கள் என்னை வெகு வாகப் பாதித்திருப்பதை உணர்கிறேன். குறிப்பாக, ஆறுமுக நாவலரை நான் வணங்குவதுமில்லை, வழிபடுவதுமில்லை் இது Sirன் சிவப்புச் சிந்தனைகளின் பக்க விளைவு என்பதில் எனக்கு வெட்கமில்லை, பெருமையுண்டு!

தேவரையாளி இந்துக் கல்லூரியில் அவர் ஆரம்பித்து வைத்த கணிதம்தான் என்னைக் கனடாவரை கொண்டுவந்திருக்கிறது. இன்றுவரை நான் பாவிக்கும் தமிழ் மொழியின் செழிப்புக்கும் செந்தளிர்ப்புக்கும் இவர்தான் சொந்தகாரன். தமிழை அழகாகவும் உறுதியாகவும் வற்புறுத்தி என் மண்டைக்குள் புகுத்திய புண்ணியம் அவருக்கே உரியது. என் நல்லகாலம் இவர் என் ஆசானாக கிடைத்தமை. என் மனம் கவர்ந்த ஆசான் பற்றிச் சொல்வதற்கு ஏராளம் சொந்த அனுபவங்களும் சம்பவங்களும் என் மனக்கிடங்கில் ஆழப் புதைந்து கிடக்கின்றன. இது அதற்கான தருணமல்ல.

ஒப்பற்ற ஆற்றல்கள் வாய்ந்த எனது ஆசான், ஒடுக்கப்பட்ட மக்களுக்காக குரல் கொடுப்பதில் தனது ஆவேசத்தில் சற்றேனும் வலிமை தளராத சமூக விடுதலைப் போராளி. ஒடுக்கப்பட்டவர்கள் பலர் தம் இருப்புக்களையும் அடையாளங்களையும் பூடகமாகப் பூட்டி மறைத்து வைத்துப் போலியாக நடித்துக் கொண்டு திரிந்தபோது, இவர் துணிவாகத் தன் சிந்தனைகளைச் சமூகத்தில் பீறிட்டுப் பட்டுத் தெறிக்கவிட்டவர்.

இவரது மறைவு அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஏற்பட்ட ஒரு பேரிழப்பு. இவரது சிந்தனைகளும் சமூக செயற்பாடுகளும் எழுத்துக்களும்

இளைய தலைமுறையினரது மனதில் புதுவித உத்வேகத்தை எற்படுத்தும் என்ற நம்பிக்கையுடன், எமது Sirஇற்கு விடை கொடுத்து வழியனுப்புகின்றோம்.

உங்கள் சேவைகள் அனைத்திற்கும் நன்றி, போய் வாருங்கள், Sir!

திரவியம் சர்வேசன்

ஸ்காபரோ, ஒன்ராறியோ, கனடா

* * *

## இதயத்திலிருந்து உதிர்ந்தவை...

தொலைவில் இருந்தாலும் உங்கள் குரல் என்னில்
தொனித்த நாட்களை மறவேன்
எனக்கொரு ஆசான் என் ஆசை ஐயா

தெணியிலே பிறந்து தெணியானாக உருவெடுத்து
தேனிலும் இனிமையான செந்தமிழை தன்
தொனியிலே பரப்பிய எங்கள் ஆசை ஐயாவே

உலகிலே சிறந்த ஆயுதம் பேனாதான்
என்று முழங்குவோர் மத்தியில் பேனா யுத்தம்
செய்து எங்கள் மண்ணுக்கு பெருமை சேர்த்த
எங்கள் ஆசை ஐயாவே

படைத்த படைப்பின் நியதி
உங்கள் உடல் மண்ணுக்குள் அடக்கம்
படைத்த படைப்பின் எழுத்துக்கள்
திரும்பத் திரும்ப உருவெடுக்கும்
பாராளும் வேந்தர் முன்பும்
பதறாமல் நிற்கும் தைரியம் பேனாவுக்கு
பார்த்திருக்கிறேன் அந்த தைரியம்
உங்களில் ஆசை ஐயாவே

நீங்கள் ஒரு விதையாக விழுந்து இருக்கிறீர்கள்
நீங்கள் விழுந்த இடத்தில்
தெணியான் செல்வி முளைப்பாள்
நீங்காத நினைவுகளுடன் காத்திருக்கிறேன்

நீங்கள் கேட்கலாம்
நான் என்ன பேசுகிறேன் என்று
நீங்களும் அறியும்படி
ஒருநாள் வெளிவரும் புதுப்பேனா முனை

எனக்கு இந்த சிறு தொற்று
உங்களுடன் பழகியதால்
எழுத அநேகம் உண்டு
வாசிக்க பொறுமையில்லை
உடனே எழுந்து உங்களிடம்
வரமுடியவில்லை என்று சிறு
எழுத்தில் அனுப்பி
ஏங்குகிறேன் ஆசை ஐயா!

உங்கள் மகள்
**மாலதி யோகநாதன்,**
பிரான்ஸ்

* * *

## ஒரு சமூக விடுதலைப் போராளி

ஈழத்தின் மூத்த எழுத்தாளருக்கு இதய அஞ்சலிகள்!

எழுத்தாளாராகவும் பெருமனிதராகவும் வாழ்ந்த ஈழத்தின் இலக்கிய ஆளுமை தெணியான். யாழ்ப்பாணச் சமூகத்தில் புரையோடியிருக்கும் சாதிய ஒடுக்குமுறைகளின் கோரமுகத்தைப் பிரபலித்து நின்றவை இவரது எழுத்துகள்.

எழுத்தாளர் தெணியான இலங்கையின் பல விருதுகளைத் தனது இலக்கியங்களுக்காக பெற்றமை குறிப்பிடத்தக்கது. 1. சாகித்யரத்னா 2. கலா பூசணம் விருது 3. சாகித்திய மண்டல விருது 4. கொடகே விருது 5. ஆளுனர் விருது என்பன இவரது எழுத்துக்களுக்கு கொடுக்கப்பட்ட அங்கீகாரமாக நாம் அறிகிறோம்.

ஒடுக்குமுறைகளுக்குள்ளான மக்களுக்கு ஆதரவாகக் கிளர்ந்தெழுந்த தெணியான் இலக்கியங்களோடு மட்டும் நின்றுவிடாமல், யாழ்ப்பாணமெங்கும் இடம்பெற்ற போராட்டங்களிலும் நேரடியாகக் கலந்துகொண்டமையும் நாம் கண்ணுற்ற விடயங்களில் ஒன்றாகும்.

ஆம், தேனீர்க்கடைப் பிரவேசம், மேட்டுக்குடிகளினால் தடுத்து வைக்கப்பட்ட ஆலயப் பிரவேசம், சலூன்களில் உயர் சாதியினருக்கு மட்டுமே

முடிதிருத்தும் நிலமையினை எதிர்க்கும் போராட்டம் என, விளிம்புநிலை மக்களது விடுதலைக்காகப் போராடிய சமூக விடுதலைப் போராளியான தெணியானுக்கு எமது ஆழ்ந்த இரங்கலும் அஞ்சலியும்!

**மல்லாகம் மக்கள்**

* * *

## ஒரு சகாப்தம் மறைந்துவிட்டது!

“உங்கள் சகோதரர் தெணியானின் மறைவையிட்டு, உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினர்க்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்கள், ஆசானே!”

இந்த அனுதாபச் செய்தியை ஒரு குற்ற உணர்வோடுதான் தெணியானது பின்னவருக்கு அனுப்பியிருந்தேன். அதை ஐரோப்பாவில் வசிக்கும் என் நண்பரொருவருடனும் பகிர்ந்து கொண்டேன். அக்குற்ற உணர்வு இதுதான் –

“தெணியான் என்ற பெயர் எனக்கு 80களில் இருந்தே அறிமுகம் எங்கடை பக்கத்து எழுத்தாளர் என்ற அளவோடு அந்த அறிமுகம் இதுவரை யிலும் இருந்து விட்டது.

இப்பொழுது நிறையப் பேர் அவரது மறைவைக் கேள்விப்பட்டு, அவருடனான தங்கள் அறிமுகத்தை, சந்திப்பை, பழக்கத்தை விதம் விதமாக எழுதுகிறார்கள். அவற்றைப் பார்க்கும் போது “எவ்வளவு அசண்டையாக நான் இருந்திருக்கிறேன்” என்பது வேதனை அளிக்கிறது.

பல தடவை தாயகத்துக்கு போய் வந்தபோதும் இவரைப் போன்றவர் களை எல்லாம் சந்திக்க முடியாதபடி, அவசியமற்ற லௌகீக விடயங்கள்தான் என்னை ஆட்கொண்டிருந்திருக்கின்றன.”

எனது ஐரோப்பிய நண்பரும் அதையே சொன்னார் – “அண்மையில் மறைந்த நந்தினி சேவியர் போன்றவர்களுடன் தான் பேசியிருக்கிறேன் தெணியான் அவர்களைப் பிடிக்கும், ஆனால் பேசியிருக்கவில்லை” என்று சொல்லி மனவருத்தப்பட்டார்.

அறுபது வருடங்களாகத் தனது படைப்புகளால் சகமனிதர்களுக் காகவும் சமுதாயத்திற்காகவும் இடைவிடாது குரல் எழுப்பி வந்த ஒரு படைப்பாளி யின் அறிமுகத்தைத் தவறவிட்டதென்பது ஒரு நூலகத்தையே தரிசிக்காமல் விட்ட தவறுக்கு ஈடானதென்றே நான் எண்ணுகிறேன்.

இருக்கும்போதே அறிந்து கொண்டிருக்கப்பட வேண்டிய, போற்றிக் கொண்டாடப்பட்டிருக்க வேண்டிய ஆளுமைகளை என் போன்றவர்கள் தொடர்ந்தும் தவறவிட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதே உண்மை அதற்காக

நான் ஆசானாக ஏற்றுக் கொண்ட அவரது பின்னவர் திரு. க. நவம் அவர்களிடம் மானசீகமாக மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன்.

தாயகத்தில் இன்னொரு சகாப்தமாக வாழ்ந்துகொண்டிருக்கும் என் சித்தப்பா “மெய்யரசன்“ பரஞ்சோதி கந்தையா, திரு. தெணியானின் மறைவு பற்றித் தன் பதிவில், “தன்னை ஒரு சகோதரன் போலப் பாவித்த “தெணியான்” காலமானார்” என்றே வருத்தத்தோடு குறிப்பிட்டிருந்தார்.

ஆமாம், சகமனிதர்களுக்காகவும், தமிழ்ச் சமுதாயத்திற்காகவும் தன் படைப்புக்களின் வழியாகக் குரல் கொடுத்த ஒரு சகாப்தம் மறைந்துவிட்டது!

தனது கொள்கைகளில் சமரசம் செய்துகொள்ளாத ஒரு படைப்பாளியின் அயலவன், நான் அவர் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தவன் என்பதெல்லாம் எனக்குப் பெருமையே!

அவதானி

ஸ்காபரோ, ஒன்ராறியோ, கனடா

* * *

# “சாஹித்தியரத்னா” தெணியான்: சில நினைவுப் பகிர்வுகள்

வடமராட்சி, பொலிகண்டியிலுள்ள “தெணி” என்று அழைக்கப்பெறும் சிற்றூர்ப்பகுதியில் பிறந்தவரே நடேசன் ஆவார். தனது சிற்றூரை உள்ளடக்கி “தெணியான்” என்ற புனைபெயரில் எழுதத் தொடங்கினார். சிறந்த வாசிப்புத் திறன் கவர்ச்சியான சொற்பொழிவாளராகவும் தேவரையாளி இந்துக்கல்லூரி யில் மிளிர்ந்தார். ரஷ்ய எழுத்தாளர்கள், தமிழக எழுத்தாளர்கள் என அவர் வாசித்த பட்டியல் நீளும். மார்க்ஸியக் கோட்பாட்டில் ஈடுபட்டு பேராசிரியர் கா. சிவத்தம்பி, டானியல், டொமினிக் ஜீவா ஆகியோருடன் தனது நட்பினை வளர்த்துக் கொண்டார்.

ஆசிரியப்பணியை 1963ல் ஆரம்பித்த அவர் “விவேகி“ என்ற இதழுக்கு “பிணைப்பு” என்ற கதையை எழுதினார். இவ்வாறு பல இதழ்கள், பத்திரிகைகளுக்கு எழுதலானார்.

70களில் சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம் நெல்லியடியில் நடைபெற்ற வேளையில் அவரை ஒரு பேச்சாளராக அழைத்த பின்பே அவருட னான எனது தொடர்பு ஆரம்பமானது. அவரது புன்னகையும், பழகும் விதமும், பேச்சாற்றலும், சமூகப்பற்றும் என்னை வெகுவாகக் கவர்ந்தன. பின்பு 1981ல் அவரது “கழுகுகள்” என்ற நாவல் வெளியீட்டின்போது யாழ் மலாயன் கஃபே

மேல் மாடியில் சந்தித்தேன். அவரது எல்லா நாவல்களையும் சிறுகதைகளையும் வாசிக்க ஆரம்பித்தேன். "பொற்சிறையில் வாடும் புனிதர்கள்" முரசொலி வெளியீடாக 1989ல் வெளிவந்தபோது அவர்மீது பிரமிப்பே ஏற்பட்டது. இப்படியும் நாவல் ஒன்றை எழுத முடியுமா என்ற கேள்வி எனக்குள் கிளம்பியது.

அவர் தொடர்ந்து வளர்ந்து கொண்டிருந்தார். யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் பலதடவைகள் சந்தித்து உரையாடினேன். 1994ல் நான்காவது பரிமாணம் வெளியீடாக வெளிவந்த "மரக்கொக்கு" நான்காவது நாவலின் இறுதி வரிகளில் "விஜயலட்சுமி, அவளும் மரக்கொக்காகத் தவமியற்றுகிறாள்" என்று சொல்லி முடித்தார். இன்றுவரை அவரது வைர வரிகள் என்னுடன் கூடவே வருகின்றன. இப்படியே அவரது சகல நாவல்களையும் சேகரித்து வாசித்து வந்துள்ளேன்.

சிறுகதைகள், கவிதைகள், நாவல்கள், குறுநாவல்கள், வானொலி நாடகங்கள், விமர்சனங்கள், கட்டுரைகள் என எழுதிக் குவித்தார். இலங்கை சாஹித்திய விருதுகள், கொடகே விருதுகள், சுபமங்களா விருது, இலக்கியப் பேரவை விருது என ஏராளம் விருதுகளின் சொந்தக்காரன் அவர்.

தெணியானின் படைப்புக்களைப் பற்றி இளக்கலைமாணி, முதுகலை மாணி பட்டங்களுக்கென பலர் ஆய்வு செய்துள்ளனர். மல்லிகை, ஜீவநதி, காலம் போன்ற பல சஞ்சிகைகளில் அவரது அட்டைப் படங்கள் வெளிவந்துள்ளன. இவ்வாறாக அவரது இலக்கிய சாதனைகளை அடுக்கிக்கொண்டே போகலாம்.

சமூகத்தை அழகுபடுத்தும் அவரது எழுத்துக்கள் காலத்தால் மறக்கப்பட முடியாதவை. தெணியானின்றி நவீன தமிழ் இலக்கியம்பற்றிப் பேச முடியாது. சத்திய தரிசனமே அவரது வாழ்வு. அவரது இழப்பினை எவராலும் ஈடுசெய்ய முடியாது.

சிந்தனைப்பூக்கள் எஸ். பத்மநாதன்
மார்க்கம், ஒன்ராறியோ, கனடா

* * *

## தெணியான் சேர்!

என்றும் என்மனதில் நிறைந்திருக்கும் மரியாதைக்கும் அன்புக்கும் உரிய ஆசான். யா/தேவரையாளி இந்துவில் தரம் 3ல் கல்விகற்கும்போது அவர் எமது வகுப்பாசிரியர், கணித பாட ஆசிரியர். பொ.ம.சியும் பொ.கா.பெயும் எப்படிக் காண்பது என்பதை அன்றே பசுமரத்தாணிபோன்று எம் மனதில் பதிய வைத்தவர். இன்றும் அது மாணவர்களுக்கு நான் பாடத்தைக் கற்பிக்கும்போது கைகொடுக்கின்றது.

வயலுக்கும் கிளானைக்கும் உள்ள தொடர்பைச் சொல்லி அன்றே உறவுமுறை பாராட்டிய ஆசான் நீங்கள். எமது தந்தை செல்வராசா ஆசிரியரிடம் கல்விகற்ற மாணவன் நீங்கள் என்பதை என்னைத் தண்டிக்கும்போதெல்லாம் கூறுவீர்கள். உங்களிடம் தொடர்ந்து கல்விகற்கும் பாக்கியம் கிடைக்காது போனாலும் ஆரம்பப்பிரிவில் உங்களுடன் ஊசலாடிய நினைவுகள் என்றும் அழியா.

அதிலொன்று கண்ணகை அம்மன் கோவில் வெள்ளக் கடலில் பனைமரக்குற்றியை கட்டுமரமாகப் பாவித்து, பயணம் செய்து தங்களிடம் வாங்கிய பிரம்படி இன்றும் மறப்பதற்கில்லை. “நல்ல குருநாதன் நம்மை யெல்லாம் வருத்துவது கொல்லவல்ல கொல்லவல்ல.” இன்றைய சந்ததிக்கு இது புரியுமா?

ஒய்வெடுக்கும் வயது நெருங்கும் நிலையிலும் உங்களைக் கண்டவுடன் குருபக்தி மேலோங்கி நிற்பது குருசீட பரம்பரையின் நன்றிக்கடனா? இதன் விளைவுதானோ தெரியவில்லை என் புத்தக இறாக்கையை நீங்கள் எழுதிய பல நூல்கள் இன்றும் அலங்கரித்துக்கொண்டிருக்கின்றன.

இது மட்டுமா? எங்கள்குடும்பத்து தெய்வங்களுக்கு நீங்கள் வழங்கிய மகுட வாசகங்கள் என்றும் காலத்தால் அழியாதவை. எங்களின் தந்தையின் நினைவுமலரில் தந்த –

“விழுதுவிட்ட ஆலமரம் அடிசாய்ந்து விடுவதுண்டோ!
பழுதுபட்டுப்போனாலும் விழுதோங்கும் பழுதாங்கும்.”

உங்கள் வாக்குப் பொய்க்கவில்லை ஆசானே. எங்கள் கடைக்குட்டித் தம்பி அமரர் சுவேந்திரலிங்கம் இவ்வுலகை குழந்தைப்பருவத்தில் நீத்தபோது தந்தீர்கள் “குருவின் குருத்து” என்ற செய்தியும் “கொய்தமலரானாலும் தெய்வ மலரானான்” காயப்பட்ட இதயங்களை உங்கள் வாசகமே ஆறுதல் அடையச் செய்தது என்றால் அது மிகையாகாது.

இத்தோடு எமது சிறிய தந்தையார் அமரர் தம்பிப்பிள்ளை இராசலிங்கம் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்) அவர்களின் இறுதி அஞ்சலி நிகழ்வின் போது உங்கள் வாயால் உதித்த அழியா மகுடவாசகம் “இராசலிங்கம் என்பவர் தனிமனிதர் அல்ல. அவர் ஒரு சமூகம்” இவற்றைவிட வேறு என்ன வேண்டும் ஆசானே. ஒவ்வொரு வரி தந்து எம்மனதில் பெரிய நாவல்களையே எழுதிவிட்டீர்கள்!

ஆசானே. உங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சும் உங்கள் அன்பு மாணவன்

**செ. அட்ஜெயலிங்கம் (ஆசிரியர்)**

* * *

# என்னை ஆளாக்கிய ஆசான்

I am saddened by the loss of my principal, Theniyan Sir. Your family has my deepest sympathy and unwavering support. Wishing you peace, comfort, courage, and lots of love at this time of sorrow.

இலங்கையின் மூத்த படைப்பாளியும், முற்போக்கு இலக்கியத்தின் முன்னோடிகளில் ஒருவருமான, எனக்கு இளமைக் கல்வியைப் புகட்டிய அதிபருமான தெணியான் அவர்கள் தனது 80ஆவது வயதில் இன்று கால மானார் என்ற துயரச் செய்தியை அதிகாலையில் அறிந்ததும் நான் ஐந்து வயதில் சிட்டாகப் பறந்து அவரிடம் கல்வி கற்றதை ஒவ்வொன்றாக மீட்டுப் பார்த்தேன்! என் மீளாத் துயரை உங்கள் அனைவருடனும் பகிர்ந்து கொள்கின்றேன்.

என் இளமையிற் கல்வியை சிலையாய் வடித்த ஆசான்! என் எழுத்து வடிவத்தைச் அழகுறச்செய்த ஆசான்! என் மேடைப் பேச்சை உரம்பெறச்செய்த ஆசான்! என்னைச் சிறுகதை எழுத வைத்த ஆசான்! என்னைக் கவியெழுதக் கரம்தூக்கி விட்ட ஆசான்!

முப்பத்தைந்து வருடத்தின் பின் தாயகம் சென்றிருந்த நேரம், நன்றி மறவாமல் அவர் முன் வாசலில் நின்றேன்!

அன்பாக அழகுறப் பேசி, ஆற்றல் மிகு சரித்திரங்கள் பல கூறி, “தெரியவரும் பெருமையும் திண்மையும் பொறையும் பருவ முயற்சி யளவிற் பயத்தலும் மருவிய நன்னில மாண்பா கும்மே“ என்ற நன்னூல் சூத்திரத்தை நினைவுறச் செய்தஆசான்!

ஆதிக்க சக்திகளின் அடக்கு முறைகளிலிருந்து விடுபடுவதற்கு இயலாது அல்லற்பட்டு அவலப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கும் அடி நிலை மக்களுக்கு விளிப்புணர்வாக “குடிமைகள்,“ “மூவுலகு“ என்ற மூவுலகிலுள்ள மூன்று வர்க்கங்களின் கதைப் புத்தகத்தகங்களை எனக்குப் பரிசாக உவந்தளித்த ஆசான்!

வாசித்துக் கொள்ளெனச் செப்பியெனக்குக் கதை பல எழுதும் ஆற்றலைத் தூண்டும் வகையில் கையளித்தார்!

“ஈதல் இயல்பே இயம்பும் காலை காலமும் இடமும் வாலிதின் நோக்கி
சிறந்துழி இருந்து தன் தெய்வம் வாழ்த்தி. . .“ (நன்னூல்) நின்றார்.

கமலவதனா சுந்தா
இற்ரோபிக்கோக், ஒன்ராறியோ,
கனடா

* * *

## எழுத்துகளால் உயிர் வாழ்கின்றார்

1987

யாழ்ப்பாணத்தில் முரசொலி பத்திரிகை வெளிவந்த காலம். அதன் வாரமலரில் பொற்சிறையில் வாடும் புனிதர்கள் எனும் தொடர்கதை வெளிவந்தது. நான் அப்போது O/L மாணவன். அக் கதையை வாராந்தம் வாசிப்பேன். யாழ்ப்பாணச் சமூகத்தின் இரும்புச் சிறையை அறிந்த எனக்குப் பொற்சிறை புதினமாக இருந்தது.

தெணியான் ஐயா கதை சொன்ன பாங்கு பிடித்துக் கொண்டது.

சிங்களப் பேரினவாதம், தமிழ் தேசியம் எனக் கூவும் பலர், எமக்குள் இருக்கும் இரும்புச் சிறையையும், பொற்சிறையையும் ஒப்புக் கொள்ளத் தயாரில்லை.

மக்கள் எழுத்தாளர் கே. டானியல் போலச் சமூகத்தின் அவலங்களைப் புனைகதை ஊடாகவும், மேடைகளில் உரையாற்றியும் தெணியான் ஐயா வெளிப்படுத்தியுள்ளார்.

எப்படியெல்லாம் வன்மமான பாதைகளைக் கடந்து ஒரு சமூகம் முன்னேறியது என்பதையும், பிற புனைவுப் படைப்புகளையும் தந்து எழுத்து களால் உயிர் வாழ்கின்றார்.

நேற்றைய தினம் காலம் ஆகி விட்ட மூத்த எழுத்தாளர் தெணியான் ஐயாவுக்கு ஆழ்ந்த அஞ்சலி.

வேதநாயகம் தபேந்திரன்

* * *

## இறுமாப்புக் கொண்ட இலக்கியச் சவுக்கு

மிகுந்த அதிர்ச்சியோடும், ஆறாத் துக்கத்தோடும் எமது துணிச்சல்கார இலக்கியப்போராளி தோழர் தெணியான் அவர்களுக்கு கண்ணீர் அஞ்சலி!

உழுத்துப்போன யாழ்ச்சாதியத்தின் முதுகுத்தோலை, எழுத்துக் கசையால் தொடர்ந்து விளாசிக் கொண்டிருந்த, இறுமாப்புக் கொண்ட இலக்கியச் சவுக்கு இன்று அமைதி கொண்டது.

கனம் பொருந்திய இறுதி வணக்கம் தோழர்!

தமயந்தி சைமன்
நோர்வே

* * *

# தெணியான் மாமா!

எடுப்பான தோற்றமும், கேட்போரை உருக வைக்கும் உற்சாகப் பேச்சும், நிமிர்ந்த நன்னடையும், தெளிந்த நற்சிந்தனையும் கொண்ட ஆளுமை மிக்க இலக்கியவாதி எமது தெணியான் மாமா! என் பல்கலைக்கழக இரண்டாம் ஆண்டின் தேர்வின் போது சில தமிழ் வரலாற்றுப் புத்தகங்கள் இல்லையே என வருத்தப்பட்டேன். பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள், "தெணியானிடம் சென்றால் தேவையான புத்தகங்களைப் பெறலாம்" என ஆலோசனை கூறினார். நானும் அவரைச் சந்திப்பதற்காக அவர் இல்லத்திற்குச் சென்றிருந்தேன். அந்நாட்களில் ஈழத்து எழுத்துலகின் உச்சத்திலிருந்து வந்த அவரது வீட்டுக்குச் சென்று சந்தித்தேன். அவரது அன்பான பேச்சும், சிறந்த உபசரிப்பும், இளையோருக்கு அறிவுரை கூறும் பண்பும், சகசமாக உரையாடிய பாங்கும் என்னை மிகவும் கவர்ந்தன. எனக்குத் தேவையான புத்தகங்களை அவர் தந்துதவினார். மகிழ்வுடனும், மனநிறைவுடனும் நான் வீடு திரும்பினேன்.

கற்பித்தலில் திறமை மிக்க தமிழ் ஆசானாக இருந்த அவரிடம் தமிழ் கற்கும் பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லை. ஆனாலும் என் குடும்பத்தாரும் அவர் குடும்பத்தாரும் மிகுந்த பழக்கமுடையவர்கள். அவர் அண்ணணின் மகன் என் கணவரான போது, எமது திருமணப் பதிவில் சாட்சியாகக் கையெழுத்திட்டு, எம்மை வாழ்த்திய அவரின் அன்பும், ஆசீர்வாதமும் இன்றும் எம்முடன் கூட இருக்கின்றன. நீண்ட இடைவெளிக்குப் பின்னர் கனடாவி லிருந்து சென்று அவரைச் சந்தித்த போது, முதுமையின் பிடியினால் நடை தளர்ந்தாலும் கம்பீரமான அவர் குரலும், அன்பு நிறைந்த வார்த்தைகளும் தள்ளாட்டம் காணவில்லை. அவர் சமூகத்தின் எழுச்சிக்காகக் கிளர்ந்தெழுந்து போராடிக் குர லெழுப்பிய மூத்த எழுத்தாளர். தன் பேனா முனையால் புரட்சிசெய்த முற் போக்காளர். உயர் விருதுகள் பல பெற்று, தமிழ் இலக்கியப் பரப்பில் அழியாத இடத்தைத் தமதாக்கிக் கொண்டவர். மாமாவின் இழப்பு எமக்கும், இலக்கிய உலகிற்கும் ஏற்பட்ட பேரிழப்பு!

வாழ்ந்ததன் பயனும், சாதனையும் இறப்பிலேயே கண்டுணரப்படு கிறது. மாமாவின் இறுதி ஊர்வலத்தில் பெரும் தொகையான மக்கள் திரண்டி ருந்தமையும், உலகின் நாலாதிக்கிலிருந்தும் அஞ்சலி செலுத்தியமையும், மனம் வெம்பி வெதும்பி வருந்தியமையும் இதற்கான சான்றுகளாகும். இந்த இறப்பு என்பது ஈடுசெய்யவோ, தவிர்க்கவோ முடியாதது. இருப்பினும் இதனை ஏற்றுக்கொண்டே ஆகவேண்டிய கட்டாயம், எமக்கெல்லாம்.

மீண்டிடாத வழியில் நீள் துயில் கொண்ட தெணியான் மாமாவின் ஆத்மா அமைதியுடன் சாந்தி கொள்ள இறையடி வேண்டுகிறோம்!

நிம்மதியாய் உறங்குங்கள் மாமா! ஓம் சாந்தி !

**மாதினி நிமலன்** (ஸ்காபறோ, ஒன்ராறியோ, கனடா)

## இலக்கியப் பேராளுமை

ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வியலை எழுத்திலே வெளிப்படுத்தியவர்.

படைப்பாளிகளின் பாசறை என்று வர்ணிக்கப்படும் விக்னேஸ்வராக் கல்லூரியில் பயின்ற இலக்கியப் பேராளுமை. ஆதிக்க மனோநிலை அதிர்வுகளின் சேதார வரைபடங்களாக இவரது புனைகதைகள் திகழ்கின்றன.

சமூக ஒடுக்குமுறை வன்ம அதிர்வுகளைப் படைப்பாக்கிய எங்கள் கல்லூரியின் பழைய மாணவரான தெணியான் அவர்களின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்தனை செய்வோம்.

இ.சு. முரளிதரன்

* * *

## ஓயாமல் இயங்கிவந்த எங்கள் முன்னோடிக்கு அஞ்சலி!

ஈழத்தின் சாதியொழிப்புப் போராட்ட வரலாற்றிலும், முற்போக்கு இலக்கியப் போக்கிலும் ஆழப் பதிந்திருக்கும் பெயர் தெணியான் (கந்தையா நடேசன், 1942-2022). கே. டானியல் தன்னுடைய இறுதிக் காலத்தில் எழுதிக்கொண்டிருந்த நாவல் ஒன்றை, நெருங்கிவரும் மரணத்திற்கு முன்னால் தன்னால் நிறைவு செய்ய முடியுமா என்று ஐயமுற்றபோது, தான் மரணித்தால் அந்நாவலை தெணியானே எழுதி முடிக்க வேண்டும் என்று நாவலின் கையெழுத்துப் பிரதியிலேயே குறித்து வைத்திருந்தார்.

தன்னுடைய அனைத்து எழுத்துகளிலும், செயற்பாடுகளிலும் சாதிய விடுதலையையும் வர்க்க விடுதலையையும் முன்னிறுத்தி ஓயாமல் இயங்கிவந்த எங்கள் முன்னோடிக்கு அஞ்சலி!

ஷோபா சக்தி
பிரான்ஸ்

* * *

## என் நினைவலையில் அமரர் தெணி(யண்ணா)யான் அவர்கள்

மறைந்த மாமனிதர் தெணியான் அவர்களது அன்புத்தம்பி, நண்பர் நவ(ம்)த்தை 1976 ஏப்ரலில் பேராதனைப் பல்கழகத்தில் சந்தித்தேன். ஒரே பீடம்,

மெய்யியல் பாட வகுப்பில் பழக்கம் ஏற்பட்டு நண்பர்களானோம். பின் பல நாடகங்கள் மூலம் பல்கலைகழகத்தில் இரட்டையர்களாக நன்கு அறியப்பட்டிருந்தோம்.

நண்பர் நவம் ஆரம்பம் முதலாகத் தமது அடையாளங்களை என்னோடு பகிர்ந்துகொண்டவர். அவரது வெளிப்படைத் தன்மை என்னை வெகுவாகக் கவர்ந்திருந்தது. தமது குடும்பம் பற்றியும், குறிப்பாகத் தமையன் பற்றியும், அவர் படைப்புகள் பற்றியும் அறிமுகப் படுத்தியுமிருந்தார்.

79ல் ஒருமுறை அவர் என்னைத் தமது வீட்டுக்கழைத்திருந்தார். அவரது வீடு சென்றபோது மாலைநேரம் கடந்திருந்தது. சற்று நேரத்தில் வெள்ளைச் சட்டை, வேட்டியுடன் கம்பீரமாக வந்தார், அவரது சகோதரர். அறிமுகத்தின் பின்பு முற்றத்தில் அமர்ந்திருந்து சுமார் ஒன்றரை மணிநேரம் உரையாடினோம் - நானும் அவருந்தான் - நண்பர் விலகியிருந்தார். பெரும்பாலும் இலக்கியம் பற்றியும் சிறிது அரசியல் பற்றியும் பேசிக்கொண்டிருந்தோம். எந்த நிலையிலும் இன, மத, ஜாதிய, சமய வேறுபாடுகளோ பாகுபாடுகளோ பற்றிய பேச்செதுவும் வராமல் பார்த்துக்கொண்டார். என்னவொரு கண்ணியம், இங்கிதம்!

இடையிடையே நான் அண்ணா என அழைத்ததில் அன்பு அவர் கண்ணில் ஒளிர்ந்ததைக் கவனிக்கத் தவறவில்லை. பேச்சினிடையே கணையாழி இலக்கிய இதழ் பற்றிய அறிமுகமும் வந்து போனது. அதுவரை கணையாழி பற்றி நான் அறிந்திருக்கவில்லை.

அவரிடம் கண்டது மிடுக்கு, இயல்பான அன்பு, கருத்துக்களில் ஆணித்தரம் மற்றும் உயர் உள்ளம். இலக்கியவாதியாக, எழுத்தாளராக, முற்போக்குச் சிந்தனையாளராக அவரைப் பார்த்த வெளியுலகத்திற்கு தெரியாதது, குடும்பத்திற்காக அவர் செய்த தியாகங்கள். பல்கலைக்கழகம் சென்று படித்திருக்கலாம் வாய்ப்பிருந்தது. ஆனால் உடன் பிறந்தோருக்காக ஆசிரியர் தொழிலில் தன்னை ஐக்கியமாக்கிகொண்டவர். நவமும் நானும் குடும்ப நிலைகள் பற்றியும் பேசியதிலிருந்து அறிந்தது அது. ஒரு நல்ல மனிதரை, இலக்கிய உலகம், முற்போக்குலகம், மனிதம் இழந்துநிற்கிறது!

நான் நல்லண்ணனை இழந்து நிற்கிறேன்! இதயம் கனக்கிறது!

**லிங்கசாமி சர்மா**

மார்க்கம், ஒன்ராறியோ, கனடா

* * *

# எழுத்துகளால் தெணியான் எப்பொழுதும் வாழ்வார்

ஈழத்தின் மூத்த எழுத்தாளர் தெணியான் அவர்கள் காலமாகிவிட்டார். “புதிய தரிசனம்” என்ற இதழை நடாத்திய காலத்தில் அவருடைய வீட்டில் உரையாடிய மாலைப் பொழுதுகள் மனக்கண்ணில் நிழலாடுகின்றன.

“தம்பி என்னடா” என்ற அவரின் அரவணைப்பான, கம்பீரமான குரல் காதில் ஒலிக்கிறது. எத்தனையோ நூல் வெளியீடுகளில் அவரின் தலைமையில் உரையாற்றிய கலையக நினைவுகள் வரிசைகொள்கின்றன.

தனது எழுத்துகளால் தெணியான் எப்பொழுதும் வாழ்வார்.

அவரது ஆத்ம சாந்திக்காய்ப் பிரார்த்திக்கின்றேன்.

த. அஜந்தகுமார்

* * *

## நித்திய அமைதியில் கலந்துவிட்டார், தெணியான்!

ஈழத்து முற்போக்கு எழுத்தியக்க முன்னோடிகளில் ஒருவரான “தெணியான்” நித்திய அமைதியில் கலந்துவிட்டார். அவருக்கு அஞ்சலி.

எழுபதுகளின் ஆரம்பத்தில், வீரகேசரி வெளியீடாக “விடிவை நோக்கி“ என்ற நாவல் வெளிவந்தது. அதனூடாகவே தனது இலககியப் பயணத்தை ஆரம்பித்தவர் தெணியான். இந்த நாவல், பிற்படுத்தப்பட்டோர் பிரச்சினைகளின் எழுச்சிக்காலத்தில் வெளிவந்தது. இவருடைய நாவல் வெளிவருவதற்கு முன்பு, இவர்களது பிரச்சினையை முன்வைத்து டானியலின் பஞ்சமர் (பாகம் 1) மாத்திரமே வெளிவந்திருந்தது.

முற்போக்கு முகாமோடு இணைந்து செயற்பட்ட தெணியானுக்கும் டானியலுக்கும் நெருக்கமான உறவு இருந்தது. இவரின் “மரக்கொக்கு“ என்ற நாவலையே பலரும் கவனத்திற்கொண்டனர். எனினும், எனது தேர்வில் இவருடைய குறு நாவலான “பரம்பரை அகதிகள்” என்பதே எப்போதும் முக்கியமானது என்ற கணிப்புள்ளது. அதுபோல் “கழுகு” என்ற நாவலும் முக்கியமானவை. இதற்கு அப்புறமே ஏனைய நாவல்கள் என்பது எனது நிலைப்பாடாக இருக்கிறது.

இன விடுதலைக்கான போராட்டச் சூழலில் உடைமைகளை இழந்து புலம் பெயர்ந்தோடியவர்களே பொதுவாக அகதிகள் என அழைக்கப்பட்டனர். அந்த நிலையை கேள்விக்குள்ளாக்கும் வகையில், இங்கே பாருங்கள் இவர்களும் அகதிகள் தான் ஆனால், இவர்கள் போராட்டச் சூழலின் அகதிகளல்ல! உங்கள் மத்தியில் பரம்பரையாகவே அகதிகளாக உள்ளவர்கள். அகதிகளாகவே பிறந்து வளர்ந்தவர்கள் என்று அதிரடிக்கும்படி “பரம்பரை அகதிகள்” என்ற நாவலை முன்வைத்து, ஈழத் தமிழ் சமூகத்தில் மண்டிப் போய்க்கிடந்த புதியதோர் “அகதிக் குழுமத்தை” வெளியில் கொண்டுவந்து ஈழத் தமிழ் வெளியை அதிரச் செய்தவர். அகதி என்ற தமிழ் மனதின் கூட்டுணர்வை (பொது உணர்வு) கலைத்துப் போட்டவர். அந்த வகையில் எப்போதும் ஈழத்தின் முக்கியமான எழுத்தாளர் என்பதே எனது கருத்து சார்ந்த நிலைப்பாடு.

கா. சிவத்தம்பி போன்றவர்களும் தெணியானின் "பரம்பரை அகதிகள்" என்ற நாவலை விட்டுவிட்டு, "கழுகு" என்ற நாலைத்தான் முதன்மைப் படுத்தினர். அதற்கான காரணமாக "அகதி" என விளிக்கப்படும் மக்கள் கூட்டம் பற்றிய ஈழத்துக் கதையைத் தவிர்த்து, புலம்பெயர் தேசத்தின் "றோயல்" அகதிகளைச் சுட்டுவதற்கே பாவிக்க விரும்பினர் என்றே கருத முடியும்.

தமிழ் சமூகத்திற்குள்ளேயே, தமிழ் தாயகத்தினுள்ளே பரம்பரை பரம்பரையாக அலைந்து திரியும் "அகதிக் குழுவொன்றை" அச்சமூகமே உருவாக்கி வைத்திருப்பதை மறைக்க முயற்சிக்கும் மேலாதிக்க குணத்தின் வெளிப்பாடுதான் இது என்றே இலக்கியக் கருத்தியல் அர்த்தத்தில் புரிந்துகொள்ள முடியும்.

ஆழ்ந்த அமைதியில் கலந்துவிட்ட தெணியானுக்கு துயர்நிறைந்த அஞ்சலி.

றியாஸ் குரானா

* * *

## ஏதோ ஒரு குற்ற உணர்வாக...

ஆளுமை மிகு படைப்பாளிகளைத் "தமிழன்" பத்திரிகையின் "தமிழ்முரசு" ஊடாக கௌரவித்து வரும் நிலையில், சாஹித்யரத்னா தெணியான் அவர்களையும் இவ்வாரம் கௌரவிக்க வேண்டும் என்று எண்ணி, அவுஸ்திரேலியாவில் வசிக்கும் மூத்த எழுத்தாளர் முருகபூபதி ஐயாவிடமிருந்து கட்டுரையொன்றையும் பெற்றுக்கொண்டேன். தெணியான் அவர்களது புகைப் படத்தைத் தேடுவதில் ஏற்பட்ட தாமதத்தின் விளைவால் இவ்வாரம் அதனைப் பிரசுரிக்க முடியாத நிலையேற்பட்டது. இந்நிலையில் தெணியான் ஐயா இன்று மாலை மறைந்துவிட்டார் என்ற செய்தி எனக்கு பெரும் அதிர்ச்சியைத் தந்துள்ளது... சமூகம்சார் படைப்புக்களைத் தந்த தனித்துவமான படைப்பாளி... ஐயாவின் ஆத்மா சாந்தியடையட்டும்...

பெயார்வே (Fairway) விருது வழங்கும் விழாவில், 2018ஆம் ஆண்டு தமிழ் மொழியில் வெளிவந்த சிறந்த நாவலுக்கான விருதை, ஈழத்தின் மூத்த எழுத்தாளர் தெணியான் எழுதிய "ஏதனம்" எனும் நாவல், விருதுடன் ஐந்து இலட்சம் ரூபா பணப்பரிசையும் பெற்றுக்கொண்டது.

தெணியான் உடல் நலக் குறைவால் இந்நிகழ்வுக்கு சமூகமளிக்காத நிலையில் அவருக்கான விருதை அவரது உறவினரான எழுத்தாளர் வதிரி சி. ரவீந்திரன் பெற்றுக்கொண்டார்.

ஜீவா சதாசிவம்

## இதயபூர்வமான அஞ்சலியும் மரியாதையும்

எழுத்தாளரென்று அபூர்வமாக நான் மதிக்கும் வெகுசிலரில் ஒருவரான தோழர் தெணியான் மே 22, 2022 பிற்பகல் மறைந்தார்.

2002இல் “பிரவாகம்“ நிகழ்ச்சியின் “ஆளுமைகள்“ எனும் குறும் விவரண ஒளிப்பதிவுக்காக அவரை ரூபவாஹினிக்கு நான் அழைத்திருந்த போது, முதன்முறையாக அவருடன் உரையாட வாய்த்தது.

என்னிடம் அவர் விடைபெற்றுச் சென்ற திசையில் அவரது உருவம் மறைந்த பிறகும் சிறிது நேரம் லயித்துப் போய் நின்றிருந்தேன். அவரது “உண்மை“ என்னை அந்தளவு பாதித்திருந்தது. அத்தகைய “மக்கள் எழுத்தாளர்“ எத்தனை பேரை நான் ஆயுளில் சந்தித்திருக்கக்கூடுமென இப்போது எண்ணிப் பார்க்கிறேன்.

**என். ஆத்மா**

* * *

## அஞ்சலி!

மூத்த எழுத்தாளர் தெணியான் அவர்கள் இன்று (22.05.2022) காலமானார்.

எங்கள் முன்னோடி, தன் எழுத்துக்களால் மக்களின் பாடுகளைப் பதிவு செய்தவர். ஈழத்து இலக்கியப் புலத்தில் அவரின் எழுத்து ஒடுக்குமுறைக் குள்ளான சமூகத்தின் குரலாக ஒலித்தது.

அன்னாரின் இழப்பு வேதனை தருகிறது. ஆழ்ந்த இரங்கல்.

**குணேஸ்வரன் சுப்பிரமணியம்**

* * *

## எழுத்தாளர் தெணியான் காலமானார்!

“தெணியான்” என்ற புனைபெயரால் அறியப்பட்ட ஈழத்துப் பிரபல முற்போக்கு எழுத்தாளர் கந்தையா நடேசன் அவர்கள் இலங்கையில் காலமானார் என்ற செய்தி எழுத்து உலகுக்குப் பேரிழப்பான தகவல்.

சாகித்திய விருது உட்பட, பல உயரிய விருதுகளை எழுத்தாளர் தெணியான் அவர்கள் பெற்றவர்.

கனடா நாட்டில் வாழும் எழுத்தாளர், கவிஞர், விமர்சகர் க. நவம் அவர்கள், தெணியான் அவர்களின் உடன்பிறந்த தம்பியார் என்பதையும் இங்கு பதிவிடவேண்டும்.

2019 ஆம் ஆண்டு இலங்கைப் பயணத்தில் அடியேன், தெணியான் அவர்களின் சொந்த ஊர் வாழ்விடம் சென்று நலம் விசாரித்துக் கதைத்துப்பேசி வந்தமையை எண்ணி இன்று மனம் உருகி நிற்கின்றது. ஆழ்ந்த இரங்கல்! Rest in peace!

கந்தசாமி முத்துராசா
ஒஷாவா, ஒன்ராறியோ, கனடா

* * *

## உங்கள் பிரிவு ஈடற்ற இழப்பு

தெணியான்,
என்
தமிழின் தந்தையே
ஆசிரியத்துவத்தின்
அர்த்தமுள்ள தோற்றம்
உங்களுடையது.
“பிணைப்பு”டன் தொடங்கி
இலக்கிய உலகின்
இமயம் தொட்டவர் நீங்கள்
“மரக்கொக்கு” வழியாக
வான் கொண்ட புகழ் கண்டீர்.
“பொற்சிறையில் வாடும்
மனிதர்களை
புனிதர்களா”க்கியது
உங்கள் கதை
அடக்கு முறையின்
“விடிவை நோக்கி“
விரைந்து சென்றது
உங்கள் பணி
அடக்குமுறை கண்டு
அஞ்சாது போரிட்டு
துதிப்பதற்கு மட்டுமல்ல
எம்மை மதிப்பதற்கும்
வழி செய்த பிரதேசம்
அல்வாய் வடக்கு மண் – அது
உங்கள் தாயின் மண்
உங்கள் உணர்வுகளோடும்

ஒட்டி உறவாடியது
ஒடுக்கு முறைகளை
இலக்கிய வழி கொண்டு
இடித்துரைக்குமாற்றல்
உங்களுக்குரியது.
உங்கள் பிரிவு
ஈடற்ற இழப்பு.
இலக்கியத்துக்கு மட்டுமல்ல
நம் தேசத்திற்கும் தான்.
நன்றி குரு தேவனே!
சென்று வாருங்கள்.
என்றும் மறவேன்…

இராசையா குகதாசன்

* * *

## பிரபல எழுத்தாளரும் ஆசிரியருமான தெணியான் அவர்கள் காலமானார்!

சமூக ஒடுக்குமுறைகளைத் தனது பேனாமுனை மூலமாக சிறு கதைகளாகவும் தொடர் நாவல்களாகவும் எழுதிப் புரட்சி செய்து, மறுமலர்ச்சியை ஏற்படுத்திய எமது தமிழ் ஆசானின் இழப்பு எமக்கெல்லாம் ஒரு பேரிழப்பாகும்.

இவர் எழுதிய “பொற்சிறையில் வாடும் புனிதர்கள்“ என்ற நாவல், யாழ் முரசொலி பத்திரிகையில் தொடராக வந்த காலத்தில் அனைவராலும் வாரம் தோறும் காத்திருந்து விரும்பிப் படிக்கப்பட்டது. அது மட்டுமின்றி இதற்கு சாகித்திய மண்டல விருதையும் வழங்கி இலங்கை அரசு கௌரவித்தது.

சமூக விடுதலையிலும் இடதுசாரியச் சித்தாந்தக் கொள்கையிலும் மிகுந்த ஈடுபாடும், பற்றுதலும் கொண்ட இவர், சிறுபான்மைத் தமிழர் மகா சபை, தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம், மற்றும் அநீதி ஒழிப்பு ஒன்றியம் போன்ற சமூக விடுதலை இயக்கங்களில் இணைந்து போராடிய ஒரு சமூக விடுதலைப் போராளி.

இவரிடம் ஒரு மாணவனாகத் தமிழ் இலக்கண இலக்கியம் கற்ற நான், இப்போது நன்றி கலந்த வணக்கத்தோடு, என் கண்ணீரை அவருக்குக் காணிக்கையாக்கி அஞ்சலிக்கின்றேன்.

**வே. கேசவன்**

* * *

## ஈழத்து இலக்கியப் பரப்புக்கு பேரிழப்பு

மூத்த படைப்பாளி தெணியான் அவர்கள் மறைந்த செய்தியை முகநூலில் பார்த்து வருந்தினேன்.

1964இல் “விவேகி” சிற்றிதழில் வெளிவந்த“பிணைப்பு“எனும் சிறுகதையுடன் இவரது எழுத்துலகப் பிரவேசம் ஆரம்பமானது.

அன்று பிற்படுத்தப்பட்ட , சாதிய ஒடுக்குமுறைக்குள்ளான சமூகத்தின் குரலாக இருந்தவர் முற்போக்கு எழுத்தாளர் தெணியான் அவர்கள். மல்லிகை ஜீவா அவர்களுடன் இவரை எழுபதுகளின் ஆரம்பத்தில் கொழும்பில் சந்தித்து பேசியிருக்கிறேன். நடேசன் என்ற இயற்பெயரை கொண்ட இவர், தெணியான் என்ற பெயரில் எழுதியவர்.

இந்த பெயர் எப்படி வந்தது என்று வினவியபோது, பொலிகண்டி கிராமத்தின் “தெணி“ என்னும் பகுதியில் சந்ததி சந்ததியாகப் பல காலம் வாழ்ந்துவந்த இவரது குடும்பத்தவர்களை ஊரவர்கள் “தெணியார்“ என அழைக்கும் வழக்கம் இருந்ததாம், அதனால் தானும் “தெணியான்“ என்ற புனைபெயரையே தமதாக்கிக்கொண்டதாக சொன்னார்.

இவர் ஒரு நல்லாசிரியாருமாவார். அன்னாரின் மறைவு ஈழத்து இலக்கியப் பரப்புக்கு பேரிழப்பாக்கும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றேன்.

கோவிலூர் செல்வராஜன்

* * *

## தெணியான் சேர்....

ஈழத்து
இலக்கிய
உலகின்
தன்னிகரில்லா
தனையன்.
எழுத்துக்களால்
வேள்விகள்
பல
செய்த
வேந்தன்.

பொற்சிறையில்
வாடும்

புனிதர்கள்
தந்த
பெருமகன்.

பேனாவை
பெரு
ஆயுதமாக
கொண்ட
போராளி.

தமிழை
எளிமையாக
எம்முள்
விதைத்த
ஆசான்.

மௌனமாக
இருந்தே
பல
புரட்சிகள்
செய்த
மாவீரன்.

நீங்கள்
உறங்கினாலும்
உங்கள்
எழுத்தும்
அதைத்தாங்கும்
புத்தகங்களும்
ஒரு போதும்
உறங்கப்போவதில்லை
ஆசானே......

உங்கள்
ஆத்மா
சாந்தியடைவதாக

சிவரதன் சீவரத்தினம்

* * *

## ஆழ்ந்த இரங்கல்கள் ஐயா!

ஈழத்தின் மூத்த எழுத்தாளர் தெணியான் அவர்களுக்கு அஞ்சலிகள்! O/L படித்து கொண்டிருந்த காலப்பகுதியில் வாசிப்பு பழக்கம் அதிகமான நாட்களில் “தெணியான்” என்ற பெயர் அறிமுகமாகி இருந்தாலும் கல்வியில் என்னை பல்கலைகழகம் வரை வளர்த்து விட்ட எனது இன்னொரு தாய்வீடான கலாமணி சேரின் “கலை அகம்” வீட்டில் 2008ஆம் ஆண்டில்தான் இவரை நேரடியாகச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. கம்பீரமான பேச்சு, நிமிர்ந்த நடை, நகைச்சுவை என நான் கண்டு வியந்த ஈழத்தின் மூத்த இலக்கிய ஆளுமை தெணியான் சேர்.

எங்கள் கலை அகத்தில் நடைபெறும் “அவை“ நிகழ்வுகளிலும் பரணி அண்ணாவின் ஜீவநதி வெளியீடுகளிலும் இவரின் பிரசன்னமும் தலைமை உரையில் கம்பீரமான குரலும் எப்போதும் ஒலித்துக்கொண்டு இருக்கும்.

ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாக இவரின் நாவல்கள், சிறுகதைக ள் ஈழத்தின் இலக்கிய பரப்பில் தனித்துவமாய் என்றும் பேசப்படும்.

ஆழ்ந்த இரங்கல்கள் ஐயா!

தெய்வேந்திரம் இந்திரகுமார்

* * *

## “சாகித்யரத்தினா” தெணியான்

ஈழத்து இலக்கியவானில் சுமார் 58 வருடங்களாக வலம் வந்த “சாகித்யரத்தினா” தெணியான் அவர்கள் மறைந்துவிட்டார் என்ற சோகம் கலந்துவந்த செய்தியை அறிந்தபோது நான் மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

ஈழத்து நவீன இலக்கிய வரலாற்றிலே புனைகதைகள் ஊடாகச் சிறப்பித்துப் பேசப்படுகின்ற ஓர் ஆளுமை தெணியான் ஆவார். அவர் தனது இளவயதிலிருந்து மார்க்சிய சிந்தனையாளராகவும் முற்போக்கு எழுத்தாளராக வும் இருந்து சுமார் இருபத்தைந்துக்கு மேற்பட்ட நூல்களைத் தந்த ஒரு படைப்பாளி. 1964ம் ஆண்டு தனது 22வது வயதில் எழுத்துலகிற்குள் பிரவேசித்த அவர், அன்று தொடக்கம் தனது இறுதிக் காலம்வரை நாவல், சிறுகதை, கவிதை, நாடகம், விமர்சனம், கட்டுரைகளாகப் பல தளங்களில் பயணித்து எழுதிக்குவித்த ஒருவர்.

அவரது படைப்புகள் அனேகமாக, பாட்டாளிவர்க்க மக்களைப் பற்றியதாகவும் சமூகத்தில் தீண்டாமை காரணமாக ஒடுக்கப்படும் விளிம்பு

நிலைமைகளைப் பற்றியதாகவும் அமைந்தவை. எழுத்தாளர்களான டானியல், டொமினிக் ஜீவாவுக்குப் பின்னர் ஒடுக்கப்பட்ட மக்களுக்காகத் தனது படைப்பிலக்கியங்கள் மூலமாகப் போராடிய ஒருவராக நாம் தெணியானைப் பார்க்க முடியும். கூடவே பல சாதிய ஆலயப்பிரவேசப் போராட்டங்களிலும் பங்கு கொண்டு போராடிய ஒரு சமூகப்போராளியாகவும் அவரை இனம் காணமுடியும்.

தமிழ், எண்கணிதம் போன்ற பாடங்களில் சிறந்த ஆசானாக விளங்கிய தெணியான் மிகச் சிறந்த மேடைப் பேச்சாளரும் ஆவார். அவர் 2010ஆம் ஆண்டு தொடக்கம் சுமார் ஐந்து ஆண்டுகள்வரை அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் தலைவராக இருந்து, தாழ்த்தப்பட்ட மக்களின் விடியலுக்காக அரும்பணி ஆற்றியுள்ளமை நினைவுகூரத் தக்கது.

சுமார் அரைநூற்றாண்டுகளுக்கு மேலாக எழுத்தூழியம் செய்த தெணியானின் இலக்கியப் பணியைக் கௌரவித்து இலங்கை அரசு அவருக்கு “சாகித்திய ரத்தினா“ என்னும் உயர் விருதினை வழங்கியுள்ளமை அவரது பெருமைக்கும் புகழுக்கும் வலுச்சேர்க்கின்றது.

வடமராட்சியின் நவீன இலக்கிய வரலாற்றின் பொற்காலம் தெணியானின் காலம் எனச் சிறப்பித்துக் கூறமுடியும்.

அன்னாரின் பிரிவுத்துயரில் மூழ்கிப்போயுள்ள அன்பு மனைவி, பாசமுள்ள பிள்ளைகள் மற்றும் உறவினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள். அவரின் ஆன்மா சாந்தியடைவதாக…

வாழ்க தெணியான் நாமம்.

**க. சின்னராஜன்**
“சித்திராலயம்,“ வட அல்வை, அல்வாய்

* * *

# கண்ணீர் அஞ்சலி

எமது நிலையத்தின் முன்னைநாள் தலைவரும் ஆரம்பகால உறுப்பினருமான அமரர் கந்தையா நடேசு (தெணியான்) அவர்களின் மரணச் செய்தியானது எமது ஊரையே பெரும் சோகத்திலாழ்த்தி நிற்கிறது.

அன்னார் தமிழ்கூறும் நல்லிலக்கிய உலகில் தனக்கென ஒரு முத்திரையைப் பதித்துச் சென்றவர் என்பதோடு, எழுத்துத் துறைக்கான பல விருதுகளையும் பெற்று எமக்கெல்லாம் பெருமை தந்தவர். கலாபூஷணம், சாஹித்தியரத்னா, வடக்கு மாகாண அமைச்சின் விருதுகள் எனப் பல உச்ச விருதுகளைப் பெற்றுத் தனக்கும், எமது ஊருக்கும், இலக்கிய உலகுக்கும் பெருமை தேடித்தந்த பேராசான்.

ஆசிரியராகவும் கனிஷ்ட அதிபராகவும் இருந்து சிறந்த கல்விச் சேவையை ஆற்றி, தேவரையாளி இந்துக் கல்லூரிக்கும் பெருமை சேர்த்தவர். அன்னாரின் பெருமை உலகறிய நாம் விழாவும் நூல் வெளியீடும் செய்து அவரைப் பெருமைப்படுத்தியது காலக் கண்ணாடியாக விளங்கியது எனலாம். கல்வித் திணைக்களத்தால் ஆண்டு 11க்கான தமிழ்மொழியும் இலக்கியமும் பாடப்புத்தகத்தில் அன்னாரின் படைப்பான “பாதுகாப்பு“ எனும் சிறுகதை அச்சிடப்பட்டுள்ளமை பெருமைக்குரியது.

இவரின் இழப்புப்பற்றி பத்திரிகைகளிலும், தொலைக்காட்சிகளிலும், முகநூல்களிலும் வானொலியிலும் என இந்நாட்களில் வரும் அறிவிப்புகளில் சிலாகித்துக் கூறிவரும் பெருமைகளை அறியும்போது நாமும் மனதில் பெருமைப்பட்டு, துக்கித்து நிற்கின்றோம்.

அவர் தந்த சிறுகதைகளும் நாவல்களும் பல தலைமுறைகளைக் கடந்தும் வாழக்கூடிய ஆற்றல் கொண்டவையாக எம்மால் உணர முடிகிறது.

அவர் எழுத்துக்கள் மூலமாக நம் எல்லோர் மனதிலும் வாழ்வார் என உணர்வதோடு, அன்னாரின் இழப்பால் வாடும் உறவுகளின் துயரில் நாமும் பங்குகொள்வதோடு, அவரின் ஆத்ம ஈடேற்றத்திற்காய் அயிட்டியப்புலம் முருகமூர்த்தியை இறைஞ்சுகின்றோம். ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**கொற்றாவத்தை பூமகள் சனசமூக நிலையம்**
**கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம்**
**கொற்றாவத்தை பூமகள் முன்பள்ளி**
**கொற்றாவத்தை அயிட்டியப்புலம் முருகமூர்த்தி ஆலயம்**
அல்வாய் மேற்கு

* * *

# Ambethkar of Sri Lankan Tamils

It shook my soul for a moment when I heard the shocking message of the demise of our dearest sir Mr. Theniyan from Kumar Aththan over the phone.

It was a time when I was having my primary schooling at Thevaraiyali in grade 4 in 1974. One day our teacher of religion Miss. Sooran Sivapaickiyam was absent to school. So, Principal Mr. M.S. Seenithamby had sent Mr. Theniyan to our class as a relief of replacement to cover up the period.

When Mr.Theniyan stepped into the classroom and turned over the pages of the book he found that the next topic to be taught was 'Srilasri

Arumuganavalar'. Suddenly his face changed colours. He mockingly laughed and humbly told us "I am sorry. I will not teach you about this fellow".

When we asked for the reason, he again humbly and openly told us "He is a wrong leader of a right religion". Such an open minded social warrior was our dearest sir Mr. Theniyan who has always raised his voice against the caste conscious social system of Jaffna Tamils not only in his writings but also in his actions.

Very recently I read his latest novels 'Kudimaigal' and 'Moovulagu'. Both were very fantastic parallel and equal to the Indian Talit novels. Mr.Theniyan's 'Vidivai Noakki' and Mr.Daniel's 'Thanneer' have always reminded me of the famous Indian short story 'The Thakur's Well'. This famous short story has been included in our G.C.E .O/L English literature.

I have read almost all the novels of Mr.Theniyan from my childhood from "Vidivai Noakki" upto 'Moovulaku'. I daresay that he is fully worthy to be called as the 'Ambethkar of Sri Lankan Tamils'.

I am so sorry. My high caste Hindu Tamil friends should not misunderstand my remark about Arumuga Navalar. Actually when I write about my experience with Mr. Theniyan the above incident is unavoidable. It is a part of his life history. It is not my intention to underestimate the contribution of Navalar to Tamil and Saiva religion.

May the genuine pure dedicated soul of our dearest Sir Mr. Theniyan rest in everlasting peace and bliss.

Rednasabapathy Uthayashankar

* * *

## இறுதிச் செவ்வஞ்சலி

ஈழத்தின் முற்போக்கு எழுத்தாளர் தெணியான் நேற்றுக் காலமானார். இலங்கையின் மூத்த முற்போக்கு எழுத்தாளர் தோழர் தெணியான் தனது எண்பதாவது வயதில் அவரது சொந்தக் கிராமமான வடமராட்சி, பொலிகண்டியில் இன்று பிற்பகலில் இயற்கை எய்தினார்.

தனது இளமைக் காலம் முதல் மாக்சிச நிலைப்பாட்டினைப் பற்றிக் கொண்ட அவர், தான் வாழ்ந்துவந்த தமிழர் சமூகத்தில் நிலவிவந்த சமூக ஒடுக்கு முறையினை எதிர்ப்பதில் முன்நின்றவர்.

தனது இலக்கிய எழுத்தாற்றலை சிறுகதைகள், நாவல்கள் மூலம் சாதிய

ஒடுக்கு எதிரான கூர்மை மிக்க ஆயுதமாகப் பயன்படுத்தி வந்தவர்.

ஈழத்து முற்போக்கு இலக்கியப் பரப்பில் தெணியானின் எழுத்துகள் வலிமை மிக்கவையாக இருந்து வந்தன. ஈழத் தமிழர் சமூக வாழ்வில் இன்றுவரை நீடித்துவரும் சாதிய தீண்டாமையை அம்பலப்படுத்துவதில் இறுதிக் காலம்வரை தனது எழுத்துப் பணியை உறுதியாக முன்னெடுத்து வந்தவர்.

தோழர் தெணியானின் சமூக ஒடுக்குமுறைக்கு எதிரான அவரது எழுத்துக்கள் என்றும் அவரை மக்கள் மத்தியில் நினைவுறுத்திக் கொண்டே இருக்கும். அவருடனான நினைவுகள் என்றும் எம்மத்தியில் பசுமையானவை யாக இருந்து வரும். அவருக்கு எமது இறுதி செவ்வஞ்சலி.

உடுப்பிட்டி நியூஸ்

* * *

## காலம் பரிசளித்த பேராசான்!

சாதிய விடுதலைக்கான போராட்டம் எனப்படுவது சாதியின் பெயரால் பிரயோகிக்கப்படுகின்ற அதிகாரத்துக்கு எதிரானது. அது, கீழ் சாதியெனப்பட்டவர களுக்கு எதிரானது மாத்திரமல்ல, மேல் சாதி என்று வகுக்கப்பட்டவர்களுக்குள் காணப்படுகின்ற படிநிலைகளுக்கும்கூட எதிரானது.

சாதிக்கு எதிரான தங்கள் நேர்மையான நிலைப்பாட்டினை முன்வைத்தவர்கள், இந்த தெளிவினை எப்போதும் முன்நிறுத்தியிருக்கிறார்கள். அந்தவகையில், ஆச்சரியமானதொரு போராளியாக - நிதானமான இலக்கியவாதியாக - தெணியானை எனக்கு அறிமுகம் செய்த நாவல் "பொற் சிறையில் வாடும் புனிதர்கள்"

சாதிப்படிநிலையில் உன்னதமானவர்களாக உருவகிக்கப்படுகின்ற பிராமணர்கள், ஈழத்தில் கோயில் மணியகாரர்களினால் எவ்வாறெல்லாம் சுரண்டப்படுகிறார்கள் என்பதையும், சாதியில் பிராமணர்களாக வாழ்வதால் அவர்கள் சமூகத்தில் எவ்வாறான சவால்களையெல்லாம் முகங்கொடுக் கிறார்கள் என்பதையும் துல்லியமாக வெளிச்சமிட்ட நாவல் "பொற் சிறையில் வாடும் புனிதர்கள்".

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியான "முரசோலி" பத்திரிகையில் 87 ஆம் ஆண்டு தெணியான் எழுதிய தொடர்கதைதான் இந்த நாவல். ஆலயங்களுக்குள் நடைபெறுகின்ற சமாச்சாரங்கள் - அநேகமாக - கொடி மரம் தாண்டி எமக்கு எதுவும் தெரிவதில்லை. எட்டிப்பார்த்தாலும், நாங்கள் பஞ்சா மிருதச் சட்டிக்குள்தான் அதிக கவனத்தைச் செலுத்துவதே தவிர, அதற்கு அப்பால் எமக்கு எப்போதும் எதுவும் தேவைப்பட்டதில்லை.

இந்த நாவல், ஐயர் சமூகத்திற்குள் - அவர்களுக்கென்றே தனித்துவமாகக் காணப்படுகின்ற சிக்கல்களை, சில்லு சில்லாகக் கழற்றிவைத்து விவாதிக்கிறது. ஐயர் பெண்களை மடப்பள்ளிகளுக்கு உரியவர்களாக மாத்திரம் வளர்த்து, அப்படியே பூநூல் இராச்சியத்திற்குள் நுழைத்துவிடுவது, சிறு பிள்ளைகளை - பிராமண முறை என்ற பெயரில் - இரண்டாம் தாரமாக திருமணம் செய்துகொடுப்பது, மணியகாரர்களினால் சுரண்டப்படுகின்ற ஐயர்கள், அந்தியட்டிப் பொருட்களுக்காக இரந்து நிற்பது இப்படி எத்தனையோ பிராமணச் சிக்கல்களை நாற்பது வருடங்களுக்கு முன்னர், நுட்பமாக பிரதியெடுத்துக்காட்டியிருக்கிறது, இந்த நாவல். ஆர்வமுள்ளவர்கள் நூலகம் இணையத்தில் இலவசமாகப் பதிவிறக்கம் செய்து படிக்கலாம்.

காலம் பரிசளித்த பேராசான் தெணியானுக்கு அஞ்சலிகள்!

ப. தெய்வீகன்

* * *

## இரங்கலும் ஈர வணக்கங்களும்

ஈழத்து நிலப்பரப்பிற்கு தேவையான ஜாதி எதிர்ப்பு இலக்கியங்களை நேர்மையோடும் எழுத்துத் தீரத்தோடும் முன்வைத்து வந்த அய்யா தெணியானின் மறைவிற்கு ஆழ்ந்த இரங்கலையும் ஈர வணக்கங்களையும் கருப்புப்பிரதிகள் செலுத்துகிறது.

கருப்புப்பிரதிகள் நீலகண்டன்
சென்னை, தமிழ்நாடு

* * *

## மதிப்பார்ந்த மாமனிதன்

முதுகலைமாணி ஆய்வுக்காக நான் தெரிவு செய்த மிகப்பெரும் இலக்கிய ஆளுமை....

என் ஆய்வுக்காக, தன் முழுமையான வழிகாட்டலை வழங்கிய மதிப்பார்ந்த மாமனிதன். என் நண்பி ஜானகியின் பாசமிகு தந்தை சாகித்ய ரத்னா தெணியான் அவர்களது இழப்பு இலக்கிய உலகிற்கே பேரிழப்பாகும்.....

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்....

வளர்மதி அம்பிகைபாகன்
புலோலி, பருத்தித்துறை

* * *

## இலக்கியமாக வாழ்கின்றனர்

... தங்களின் சகோதரர் தெணியான் அவர்கள் சிவபதமடைந்தமை கேள்வியுற்று கவலையடைந்தேன். "விடிவை நோக்கி" மூலம் அவர் எனக்குள் அறிமுகமானார்.

நீங்கள் எனக்கு உயிரியல் பாடம் கற்பிக்கும் போது ஒரு நாள் வகுப்பில் மாணவர்களிடம் கேட்டீர்கள் ""விடிவை நோக்கி" நாவல் வாசித்தீர்களா?" என்று. அவ்வேளை நான் ஏற்கனவே நான் வாசித்து முடித்திருந்தேன். எனினும் நான் சொல்லவில்லை வாசித்து விட்டேன் என்று, காரணம் வெட்கம்.

சாஹிராக் கல்லூரியில் ஜீவாவும் தெணியானும் இலக்கிய விழாவுக்கு அழைக்கப்பட்டு அவர்கள் வந்துகலந்து உரையாற்றிய வரலாறு இன்னும் நெஞ்சில் பசுமையாக உள்ளது. இன்று இருவருமே எம்மிடையே இல்லை. எனினும் அவர்கள் எழுத்தின் மூலம் இலக்கியமாக உலகில் வாழ்கின்றனர்.

எனது அஞ்சலிகளைச் செலுத்துகின்றேன். கவலையுறும் உங்கள் மனதிற்கும் ஆறுதல் கூறுகின்றேன்.

எல்லாம் வல்ல இறைவன் எம்மை நன்றாக வாழ வைப்பானாக.

சின்னலெப்பை றஹ்மத்துல்லா
கல்முனை

* * *

## வரலாறு ஆகிவிட்ட தெணியான்

தெணியான் என்று அழைக்கப்படும் நாடறிந்த எழுத்தாளர் கந்தையா நடேசு அவர்கள் காலமான செய்தி எல்லோருக்கும் வருத்தத்தை தருவது.

அவர் விக்னேஸ்வரக் கல்லூரியின் பழையமாணவர். விக்னேஸ்வரக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவின்போது விக்நேயன் தெணியான் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றியதை நெகிழ்வுடன் நினைவு கூர்கின்றோம். அவரைப்போல் நீளநடந்து இலக்கியப் பணிசெய்தவர்கள் ஈழத்தில் குறைவு.

வரலாறு ஆகிவிட்ட தெணியான் அவர்களை நீளநினைந்து கொள்வோம்...

கனகலிங்கம் முருகேசு

* * *

## தெணியான்

தெணியான்
இலக்கியம் ஊடறுத்த
புதியகோஷம்.
பனையின் நிழலில்
குடிமைகளின் பிணைப்பில்
பார்க்கப்படாத பக்கங்களில்
வெந்து தணிந்தவன்.
பொற்சிறையில் வாடும் புனிதர்களின்
விடிவை நோக்கிய
இன்னொரு புதிய கோணம்
நெஞ்சில் பதிகின்ற நினைவுகளில்
நான்காவது பரிமாணமாய்க் காத்திருக்கிறது.
சிதைவுகளில்
தவறிப்போனவன் கதை
கானலில் மானாக
கழுகுகளின் பார்வையில்
இன்னும் சொல்லாதவை.
ஒதுக்கப்பட்டவர்களின் மாத்துவேட்டி
ஏதனமாய் எழுதியுள்ள
மரக்கொக்கின் புனைவுகளில்
பூச்சியம் பூச்சியமல்ல.
தெணியான்
இலக்கியம் ஊடறுத்த
பனையின் நிழல்.

கனகசபாபதி செல்வநேசன்

* * *

## காலத்தால் மறக்க முடியாத மனிதர்

“நடேசு” மாஸ்ரர் என்றே பலரும் அவரது பெயரை உச்சரித்தனர். பேச்சாளர், எழுத்தாளன், நடிகன் என்று அவரைப் பற்றிப் பேசிக் கொள்வார்கள். எனது பாடசாலைப் பருவத்தில் அவரை அறிந்து வைத்திருந்தேன். நடேசு என்ற பெயர் குறுகிய காலத்துள் தெணியான் என்ற நாமத்தால் விரிவாக்கப்பட்டமை தெணியானின் எழுத்திற்குக் கிடைத்த முதல் கௌரவம். தெணியான் என

உறவுகள், நட்புகள் வட்டத்தில் பேசப்பட்டது. நிமிர்ந்த நடையும் புன்சிரிப்பும் கவர்ச்சிகரமாக இருக்கும். வெள்ளை வேட்டியும் சேட்டும் தெணியான் ஆசிரியரின் முகத்தை இன்னும் அழகாகக் காட்டும்.

தெணியான் ஆசிரியரிடம் நான் பாடம் கற்கவில்லை ஆனாலும் அவரது மேடைப்பேச்சு, சிறுகதைகள், நாவல்கள், கட்டுரைகள் வாசித்ததினால் தெணியான் என்ற எழுத்தாளர் என் மனதில் இடம் பிடித்தார். இலக்கிய ஆர்வமும் பாடசாலைக் காலத்தில் ஆரம்பித்ததால் இலக்கியவாதிகளைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது.

தெணியானின் தம்பி க. நவம் எனது ஆசானும் நண்பரும் என்ற வகையில், ஒருமுறை தெணியானைச் சந்தித்துக் கவிதை ஒன்றைத் திருத்தத்திற்காகக் கொடுத்திருந்தேன். பார்த்துவிட்டு வாங்கி வைத்து விட்டார்.

சிறிது காலம் செல்ல, எனது கவிதை மல்லிகையில் பிரசுரமாகி யிருந்தது. அதனைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தேன். என்னை மல்லிகையில் தொடர்ந்து எழுத வைத்தார். ஜீவாவிற்கு என்னை அறிமுகப்படுத்தி வைத்தார். எழுதும்படி உற்சாகப்படுத்துவார். கடைசியாகச் சந்தித்த போதும் ஏன் எழுத வில்லை என கேட்டிருந்தார். தெணியானுடன் ஐம்பது வருடமாகப் பழகி வந்திருக்கிறேன். நான் கொழும்பில் எனது குடும்ப வாழ்க்கையை ஆரம்பித்த போது, யுத்த காலத்திலும் அதற்குப் பின்பும் ஏதும் காரியங்கள் செய்ய வேண்டுமென்றால் எனக்குத் தகவல் தந்துகொள்வார். கொழும்பு வந்தால் எனது வீட்டிலும் தங்கிச் செல்வார். நூல்களை அச்சுப் பதித்தல், சரவை பார்த்தல் (proof reading) ஆகியவற்றை என்னூடாகச் செய்துகொள்வார். நானும் அவர் கூறுபவற்றை மறுக்காமல் செய்து கொடுப்பேன்.

தெணியானுக்குக் கொழும்பில் கிடைத்த அனைத்து கௌரவிப்பு களி லும் கலந்து அவரது மகிழ்ச்சியில் பகேற்றுள்ளேன். இவரது நாவல் ஒன்றுக்கு காலி இலக்கிய விழாவில் பரிசும் பாராட்டும் கிடைத்த போது, அவருக்கு வர முடியாத நிலையில் பூபாலசிங்கம் சிறீதர்சிங்குடன் சென்று அப்பரிசைப் பெற்றுக் கொடுத்தேன். தெணியானின் எல்லாச் சிறப்புக்களிலும் பங்குபற்றியவன் என்ற வகையில் தெணியான் என்ற எழுத்தாளுமையை மறக்க முடியாது.

ஊருக்குச் சென்றால் அவரைக் கட்டாயம் சந்தித்து வருவேன். அதுபோல் இந்த ஆண்டு சித்திரை வருடப்பிறப்புக்குச் சென்றபோது, நண்பர் மல்லியப்பூசந்தி திலகர் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்) அவர்களுடன் சென்று பார்த்தேன். அன்றும் "எழுதடா தம்பி" என்று கூறினார்.

அதற்கிடையில் தெணியான் "காலமானார்" என்ற செய்தி மனதை வாட்டியது. எங்கள் மூத்த படைப்பாளியின் இழப்பு பேரிழப்பாகும். தெணியான் நாமம் என்றும் நிலைத்து நிற்கும். எனது ஆழ்ந்த அஞ்சலிகள்.

**வதிரி சி. ரவீந்திரன்**

* * *

# என்றும் என் நெஞ்சில் நிலைத்திருக்கும் ஆசான் தெணியான்

சிறுகதை, நாவல், திறனாய்வுக் கட்டுரைகள், வானொலி நாடகங்கள் எனப் பன்முகப்பட்ட இலக்கியப் படைப்பாளுமை கொண்ட, என் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய ஆசான் அமரர் தெணியான் அவர்களைப் பற்றிய என் ஆழ்மனக் கருத்துக்கள் ஒருசிலவற்றைப் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன்.

நான் தேவரையாளி இந்துக் கல்லூரியில் நான்காம் வகுப்பிலிருந்து க. பொ.த. (சா/த) படித்தகாலம் வரை அமரர் தெணியான் தமிழ் ஆசிரியராக எமக்குக் கற்பித்தமையைப் பெரும் பாக்கியமாக நான் கருதுகின்றேன். அதுமட்டு மல்லாது, உடுப்பிட்டி வட்டாரப் பாடசாலைகளுக்கு இடையிலான கட்டுரைப் போட்டி, பேச்சுப்போட்டி போன்றவற்றில் என்னைப் பங்குபெறத் தூண்டி அவற்றில் வெற்றி பெறவைத்த பெருமை அமரர் தெணியான் அவர்களையே சாரும்.

நான் உயர்தரக் கல்விக்காக யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் 1980களில் கலைத்துறையில் கல்வியைத் தொடர்ந்தேன். அப்பொழுதெல்லாம் மாலை வேளைகளில் அவரது வீட்டிற்குச் சென்ற போதெல்லாம், எனது படிப்புடன் சம்பந்தமான ஆலோசனைகளைப் பிரத்தியேக மாகத் தனது நேரத்தினை ஒதுக்கி வழங்கியது மட்டுமல்லாமல், சமூக விழிப்புணர்வு பற்றிய சிந்தனைகளையும் எனது மனதில் விதைத்து வைத்தார். தெணியான் அவர்கள் எனக்கு ஒரு சிறந்த ஆசானாக மட்டுமன்றி, நல்ல ஆலோசகராகவும், சில நேரங்களில் ஒரு நண்பர் போலவும் என்னை ஊக்குவிக்கும் எண்ணத்தோடு பல உதாரணங்களைக் கூறி நல்வழிப்படுத்திய ஆசான். என்னை ஒரு மேடைப்பேச்சாளனான ஆக்கியதில் அமரர் தெணியான் அவர்களின் பங்களிப்பே முக்கியமானது என்பேன்.

"உறங்குவது போலும் இறப்பு
உறங்கி விழிப்பது போல் பிறப்பு"

என்ற கூற்றிக்கமைய, இயற்கையின் விதிப்படியே வாழ்க்கை அமைவது தவிர்க்க முடியாததே. அன்னாரின் ஆத்மா சாந்தியடையவேண்டி, எமது குடும்பம் சார்பில் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

R. சண்முகநாதன் (சண்)
Swiss

* * *

# மனம் துயருகிறது

ஈழத்தில் சமூக அடக்குமுறைக்கு எதிராகப் பல படைப்புகளை எழுதிய எழுத்தாளர் தெணியான் காலமானார்.

எனது சிறுவயது முதல் அவரைப் பார்த்து, அவரின் உரைகளை - குறிப்பாக எனது அப்பாவுக்கும் அவருக்கும் இடையிலான உரையாடல்களை - கேட்டு வளர்ந்திருக்கிறேன்.

கடைசியாக 2016 ஊருக்குப் போனபோதும் அவரைச் சந்திதேன்.

மனம் துயருகிறது.

பிறிதொருதடவை விரிவாக எழுதுகிறேன்.

தம்பையா தயாபரன்

* * *

## “சின்னண்ணா” என்னும் அன்புத் தந்தை!

மரணம் என்பது தவிர்க்க முடியாத, மாற்ற முடியாத, தள்ளிப்போட முடியாத ஒரு பிரம்ம ரகசியம். இதனைத் தத்துவார்த்த ரீதியாக நாம் அறிந் திருந்தாலும் அது எம்மவரைத் தாக்கும்போது தடுமாறித்தான் போகின்றோம்.

ஆனாலும் ஐந்தாண்டுகளுக்கு முன்னர் இரு விடுமுறைப் பயணங் களில் ஆறாறு மாதங்கள் குடும்பத்தவருடன் ஊரில் ஆறுதலாகப் பொழுதினைச் செலவிட்ட இனிய நாட்களை நினைவுகூர்ந்து ஆறுதலடைய முயற்சிக் கின்றோம். உயிரோடு இருக்கும்போதே எவ்வளவோ உதவி ஒத்தாசைகளுடன் வாழ்ந்திருக்கின்றோம் என்ற நினைவும் மனப்புண்ணுக்கு மருந்தாகின்றது.

எனது கணவருக்கு (க. நவம்) “தெணியான்“ சின்னண்ணாவாக இருந்தபோதிலும் தனது முழுக்குடும்பத்தினருக்கும் தந்தை ஸ்தானத்தின் இடைவெளியை நிரப்பி வாழ்ந்தவர் ஏன் எனக்கும் தான்!

எண்பது அகவைகள் தனது சொந்தக் குடும்ப உலகம், மாணவ - ஆசிரிய உலகம், மக்கள் உலகம், எண் - எழுத்துலகம், தமிழ் இலக்கிய உலகம், அடக்குமுறை உலகம், சாதிய உலகம் என ஏழுலகங்களிலும் சஞ்சரித்தவர். தனது பிறப்பின் நோக்கமாக, தாக்கமாக அவற்றை வெறுமனே அவர் விட்டுவைக்கவில்லை. கத்தியின்றி ரத்தமின்றிய ஒரு சமூகப்போரட்டகளத்தில் அவர் கவசம் அணியாத ஒரு அபிமன்யு.

இறப்பைவிட மக்கள் பயப்படும் “மேடைப்பேச்சுத்“ தளத்தில் தன்னுயி ரைப் பணயம் வைத்துத் துணிச்சலுடன் மக்களின் நலனுக்காகக் கர்ச்சித்தவர். மனுக்குலத்தின் அவலங்களைத் தனது தூரதிருஷ்டம் என்னும் தொலை நுணுக்குக் காட்டியினூடாகப் பார்த்து அவதானித்தவர். ஒரு சமதர்மமான, சமாதானமான மனித சமூகத்தை உருவாக்கத் தேவையான பல அம்சங்களை யும் தனது அனுபவ அவதான பகிர்வுகளால் எம்மனங்களில் பதியவைத்தவர்.

பேச்சில் ஒன்று, நடைமுறையில் இன்னொன்றாக இருக்கக்கூடாது என்னும் முயற்சியில், குடும்ப நெருக்கடிகள் கழுத்தை நெரித்த சந்தர்ப்பத்திலும்

என்னைத் தனது மகளாகப் பாவித்து எமது திருமணத்திற்கான அங்கீகாரத்தை, அனுமதியை எண்பதுகளின் ஆரம்பத்திலேயே வழங்கி என்னையும் தனது குடும்பத்தில் இணைத்துக்கொண்டவர். அவர் தந்த அந்த வாழ்வினை வாழும் ஒருத்தி என்ற முறையில் நான் என்றும் அவருக்கு நன்றிக் கடனுள்ளவளாவேன்.

தனது 50 தசாப்தத்திற்கும் மேலான எழுத்துத் தவத்தினால் அவர் சமூகத்தின் பல பக்கங்களையும் அந்தந்த சமூகங்களுக்கும் அனைவருக்கும் அறியத்தந்துள்ளார். இதன் மூலம் அதனை நாம் தனிப்பட்டமுறையில் தவிர்க்கவும் அதன் பாதிப்புகளிலிருந்து தப்பிக்கொள்ள முன்யோசனையுடன் நடக்கவும் வழிகாட்டியுள்ளார்.

இந்த ஒளிப்பாய்ச்சலின் துணையுடன் நாம் முன்னேறிச் சென்று வீட்டிலும் சமூகத்திலும் நாட்டிலும் முழு உலகத்திலும் புதியதொரு அமைதியான, சமாதானமான, பாதுகாப்பான, அன்பான சூழலை உருவாக்குவதற்கு அத்திவாரம் இடுவோமாயின் அதுவே நாம் அவருக்குச் செய்யும் ஆத்ம சாந்திப் பூசையாகும் என நான் உறுதியாக நம்புகின்றேன். நன்றி, வணக்கம்!

**சியாமளா நவம்**

ஸ்காபரோ, ஒன்ராறியோ, கனடா

* * *

## எங்கள் தாத்தா

அன்பான தாத்தா, கண்டிப்பான தாத்தா, கோபக்காரத் தாத்தா, குறும்புக்காரத் தாத்தா எனப் பல வடிவங்களில் பேரப்பிள்ளைகளாகிய எங்களை அரவணைத்த தாத்தா, இன்று எங்களோடு இல்லையே என்பதை நினைக்கும் போது மிகவும் வேதனையாக உள்ளது.

வீட்டுவாசலில் ஏறும்போது “ஆச்சி“ எனச் சிரித்த முகத்துடன் வரவேற்கும் தாத்தா - ஒரு நாளில் எத்தனை தடவைகள் வந்து போனாலும் அந்த அழைப்பை ஒருபோதும் விடுக்கத் தவறியதில்லை.

தனக்கேயான வழமையான இடத்தில் தனது கதிரையில் அமர்ந்திருக்கும் தாத்தா, அன்ரி வீட்டுக் கேற் (gate) திறக்கும் ஒலி கேட்டால், உடனே உசாராகிவிடுவார். யாரோ வருகிறார்கள் என்பதை உணர்ந்து, வாசலையே பார்த்தபடி இருப்பார். யாராக இருந்தாலும் சந்தோசமாக வர வேற்பார். அதுவும் வந்தது பேரப்பிள்ளைகளில் ஒருவராக இருந்தால், அவரது சந்தோசத்திற்கு அளவே இல்லை. அவர் உதட்டின் ஓரத்தில் வரும் புன்னகை, கண்களில் தோன்றும் பிரகாசம், அவர் வரவேற்கும் விதம் அனைத்துமே காட்டிக் கொடுத்துவிடும் அவரது சந்தோசத்தின் அளவை.

ஒரு எழுத்தாளராக வெளி உலகையும், இந்த சமூகத்தையும், மனிதர்களையும் தரிசித்த, இரசித்த தாத்தா, தனது இறுதிக் காலத்தில் வெளியே

செல்ல முடியாமல் நான்கு சுவர்களுக்குள் முடங்கிக் கிடந்தபோதும், பேரப் பிள்ளைகளாகிய எங்கள் மூலமாக அனைத்தையும் அனுபவித்துக்கொண்டார் என்றே தோன்றுகிறது.

பண்டிகைக் காலங்களில் புத்தாடை அணிந்து சென்றால், உடனே எங்களிடம் "புது உடுப்போ, ஆச்சி, வடிவாய் இருக்கிறாய்" என்று சொல்லி எம்மையே பார்த்தவண்ணம் இருப்பார். சில வேளைகளில் நாம் அருகில் இருக்கும்போதும் காரணம் இல்லாமல் எம்மைப் பார்த்துச் சிரிப்பார். அந்தச் சிரிப்பு பார்ப்பதற்கு அழகாகவும், பேரப்பிள்ளைகள்மீது அவர் காட்டும் அளவற்ற அன்பினை உணர்த்துவதாகவும் இருக்கும்.

நாங்கள் தலைமுடியைக் கொஞ்சம் வித்தியாசமாக வாரி அலங்காரம் செய்திருந்தாலும், தாத்தா உடனே அதனைக் கண்டுபிடித்து ஒரு புன்சிரிப்புடன் அதுபற்றிக் கேட்பார். "வயதான காலத்தில்கூட இப்படியெல்லாம் கவனிக்கிறார். இப்பவும் தாத்தாவினது கண்களும் கவனமும் very clear" என நாங்கள் அம்மா விடம் சொல்வதுண்டு. இருந்தாலும் வெகு தாமதமாகத்தான் ஒரு விடயம் எங்களுக்குப் புரிந்தது. அவர் இவ்வாறு நுணுக்கமாக இந்த சமூகத்தையும் மனிதர்களையும் அவதானித்ததால்தானோ என்னாவோ, அவரால் மக்களின் மனதுக்கு நெருக்கமாகும் வகையில் யதார்த்தமான சிறந்த படைப்புக்களைக் கொண்டுவர முடிந்தது என்பதை உணர முடிகிறது.

எப்போதும் எங்களைத் தனது பக்கத்திலேயே இருக்கச் சொல்லும் தாத்தா, இன்று தனியாக எங்கு இருக்கிறாரோ என்று மனம் ஏங்குகிறது. இருந்தாலும், இறுதியாக அவர் உயிர் எங்கள் கைகளில்தான் பிரிந்தது என்று மனது எண்ணி ஆறுதலடைகிறது.

இறப்பதற்கு இருநாட்கள் முதல், மூடப்பட்டிருந்த அவரது ஒரு கண்ணை நினைக்குந்தோறும், "எந்தக் கண்களால் இந்த சமுதாயத்தைப் படம் பிடித்து அவற்றை எழுத்துலகில் தடம் பதித்தாரோ, அந்தக் கண்களின் பணி இனிப் போதும்" என இறைவனே முடிவெடுத்து, மூடிவிட்டாரோ என அதே மனம் எண்ணித் துணுக்குறுகிறது.

உங்கள் உயிர் பிரிந்தபோது என்றுமே இல்லாதவாறு வானத்திலிருந்து மழையாகக் கொட்டோ கொட்டென்று கொட்டி வீழ்ந்த கண்ணீர்த் துளிகள், நீங்கள் ஒரு சிறந்த மனிதராக வாழ்ந்து முடித்து, இப்போது ஒரு நல்ல இடத்தில் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கிறீர்கள் என்ற செய்தியை சொல்லிச் சென்றன.

இருந்தபோதிலும், இயற்கையின் நியதியை மாற்றமுடியாது எனும் உண்மையை மனதிருத்தி, உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து ஆறுதலடைகிறேன், தாத்தா!

என்றும் உங்கள் நினைவுகளுடன் இருக்கும், அன்புப் பேர்த்தி

**ஆரணி ஞானசீலன்**

* * *

# அப்பா....!

“அப்பா“ என்னும் சொல் உயிர், மெய், உயிர் மெய் எழுத்துக்களின் சங்கமம். “அப்பா“ என்பவர் உயிராகி, மெய்யாகி, உணர்வாகி, உளதாகி, இனிதாகி அன்பில் திளைத்தவர். மண்ணில் பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தையும் இரண்டாவதாக உச்சரிக்கும் உன்னத வார்த்தை “அப்பா“. “அப்பா“ என்று அழைக்கும் போது அதில் கிடைக்கும் ஆனந்தம் தந்தையான ஒவ்வொரு ஆண்மகனுக்கும் தான் தெரியும்.

எங்கள் அப்பாவை நாங்கள் “அப்போய்“ என்று தான் அன்புடன் அழைத்தோம். நாங்கள் “அப்போய்“ என்னும் போது எங்களை “ஆச்சி, அப்பு, பட்டு, பெரியவள், பெரியவன், சின்னவன்“ என்று நீங்கள் அழைப்பது இன்றும் காதுகளில் ஒலிக்கிறது, அப்பா! உங்களின் பிரிவை இன்று வரை எங்களால் நம்பவும் முடியவில்லை. ஏற்றுக்கொள்ள முடியவும் இல்லை, அப்பா! உங்களின் இழப்பு ஒரு கெட்ட கனவு போலவேதான் எமக்குத் தெரிகின்றது, அப்பா! என்றும் எம்மிடம் உங்கள் நினைவே, அப்பா!

ஒரு எழுத்தாளராக சமூகக் கொடுமைகளைக் கண்டு வீறாப்புக் கொண்டவர் என்றும், பட்டிமன்றங்களில் மாத்திரமல்ல பிழையான கருத்தாடல்களை முகம் பாராமல் இடித்துரைத்தவர் என்றும், எதற்கும் பணியாதவர் என்றும் இலக்கியவாதிகள், விமர்சகர்கள் குறிப்பிடலாம், அப்பா! உங்கள் மீது பன்முகப்பார்வை அவர்களால் முன்வைக்கப்படலாம், அப்பா! ஆனால் எங்களுக்கு எப்போதுமே தெரிவது உங்களின் ஒரே முகம் எங்கள் மீதான அந்த பாசமுகம் தான், அப்பா! அதனை வெறுமனே சொற்களால் எடுத்துரைக்க முடியாது. உணரத்தான் முடியும், அப்பா!

நல்ல கலைஞர்களுக்கு எல்லாம் இருப்பது இந்த இளகிய உள்ளமே தான், அப்பா! உங்கள் முதற் சிறுகதையே தங்கை மீது பாசம் கொண்ட அண்ணனின் வெளிப்பாடான “பிணைப்பு“ தானே, அப்பா! அப்பப்பா, அப்பாச்சிமீது தொடங்கிய உங்கள் பாசவலை சகோதரர்கள், சகோதரிகள், பிள்ளைகள், மருமக்கள், பெறாமக்கள், பேரப்பிள்ளைகள் எனப் பரந்ததனால், அவர்கள் யாவரும் உங்களை நினைத்து உருகிய வண்ணமே உள்ளனர், அப்பா! ஏன் அப்பா இப்படியான பாசமிக்க அப்பாவாக இருந்தீர்கள், அப்பா! எங்களால் உங்களை மறக்க முடியவில்லையே, அப்பா!

எதையப்பா மறப்பது ? முதுமையிலும் உங்கள் தாய், தந்தையை நினைத்து உருகியதை மறப்பதா? மறைந்து போன உங்கள் அண்ணாவையும் தங்கையையும் நினைத்து கலங்கியதை மறப்பதா? தங்கைகளுக்கு நல்ல அண்ணனான நீங்கள் “பாசமலர்“ படப்பாடலை கேட்டுக் குழந்தை போல வெம்பியதை மறப்பதா, அப்பா? உங்கள் தம்பியை கல்வி கற்பதற்காக சென்.

பற்றிக்ஸ் கல்லூரியில் விடுதி மாணவனாகச் சேர்த்த நாளை எண்ணிக் கலங்கியதை மறப்பதா?

எங்கள் அம்மா உங்களை எவ்வித குறையுமில்லாமல் குழந்தை போலவே பார்ப்பதாக நீங்கள் அடிக்கடி கூறியதை மறப்பதா? வளர்ந்த பிள்ளைகளாகிய எங்களை இன்றும் முத்தமிடும் உங்களை மறப்பதா? "பட்டம்மா.... பட்டம்மா..." என அடிக்கடி கூப்பிடும் உங்கள் குரலை மறப்பதா? எங்கள் மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்டதும் சாய்மனைக் கதிரையிலிருந்து நிமிர்ந்து "வா அப்பு" என அழைத்திட்ட உங்களை மறப்பதா? உங்கள் பெரியவளைக் கண்டதும் வாஞ்சையுடன் அன்புருகப் பார்க்கும் உங்கள் பாசப் பார்வையைத்தான் மறப்பதா? பேரப்பிள்ளைகளைக் கண்டிக்கவோ தண்டிக்கவோ ஏற்காத உங்களின் அந்த மனதினைத்தான் மறப்பதா? ஓய்வூதியச் சம்பளத்திலிருந்து பேரப்பிள்ளைகளுக்கும் பிள்ளைகளுக்கும் காசு வழங்குவதனை மறப்பதா? "நான் இருக்கின்றேன் உனக்கென்ன குறை?" என அம்மாவிடம் அடிக்கடி கூறியதை மறப்பதா?

பேரப்பிள்ளைகளைக் கண்டு ஆர்ப்பரிக்கும் நிலையை மறப்பதா? எங்களைக் காணாவிட்டால் எனக்கும் தம்பிக்கும் தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி "அப்பு" என தொடங்கி அன்புடன் விசாரிப்பதை மறப்பதா? என்னவாயினும் எங்களின் சுகம், பாதுகாப்பு என்பவற்றில் அதிக சிரத்தை எடுத்து விழிப்பூட்டும் உங்கள் அக்கறையை மறப்பதா? விருதுகள் பெறவும் விழாக்களுக்கும் உங்களுடனே அழைத்துச் சென்ற அந்த நினைவுகளை மறக்க முடியுமா? நீங்கள் எழுதிய புத்தகங்களை மறப்பதா? வாங்கிக் குவித்த விருதுகளை மறப்பதா? எதையப்பா மறப்பது? எதையும் மறக்க முடியாது, அப்பா!

உங்களுக்கு சாகித்யரத்னா வரையான பல்வேறு உயரிய விருதுகள் கிடைத்திருக்கின்றன. அந்த விருதுகள் யாவற்றிலும் மேலான விருது எங்களுக்கு கிடைத்திருக்கின்றது. அந்த விருதின் மதிப்பு பெறுமதியிடமுடியாது. எங்களுக்கு கிடைத்த அந்த விருது வேறு எதுவுமல்ல, "அப்பா" என்னும் அந்த பெருவிருது நீங்கள் தான், அப்பா! நீங்கள் சேர்த்து வைத்த அந்த அறிவுசார் புத்தகங்கள் எங்கள் ஏழு தலைமுறைகளின் அறிவுப் பசியினைப் போக்கப் போதும், அப்பா!

தாய், தந்தையர் முதல் சகோதரர்கள், பிள்ளைகள்,பேரப்பிள்ளைகள், மருமக்கள், பெறாமக்கள் வரை நீங்கள் செய்த தியாகங்கள் சொல்லில் அடங்காதவை, அப்பா! அதனால் தான் எங்கள் குடும்பமே சோகத்தில் மூழ்கி யுள்ளது, அப்பா! போதும் அப்பா, நீங்கள் செய்த தியாகங்கள் போதும், அப்பா! இன்று வரை நீங்கள் எங்களை விட்டுச் செல்வீர்கள் எனக் கனவிலும் நினைக்க வில்லை, அப்பா! உங்களின் இலட்சியங்கள் யாவற்றிற்கும் உறுதுணையாக நின்று வேளாவேளைக்கு உங்களின் தேவையறிந்து உணவு தந்து குழந்தைபோல் பார்த்த எங்கள் அம்மாவையும் உங்கள் பட்டம்மாவையும்

பெரியவள், பெரியவன், சின்னவன் ஆகிய எங்களையும் ஏமாற்றிவிட்டு எதுவும் சொல்லாமல் மௌனமாகி தொலைதூரம் சென்றதனை இம்மியளவிலும் ஏற்றுக் கொள்ள முடியவில்லை, அப்பா!

சென்று வாருங்கள், அப்பா! மீண்டும் இன்னொரு ஜென்மத்தில் அப்பாவாக மீண்டும் வாருங்கள், அப்பா!

என்றும் உங்களின் நீங்கா நினைவுகளுடன்,
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் சார்பாக -
அன்பு மகன்
**ஆதவன்**

* * *











# தெணியானின் படைப்புலகம்

நாவல்கள் / குறுநாவல்கள்

1. விடிவை நோக்கி - வீரகேசரி வெளியீடு, கொழும்பு, 1973

2. கழுகுகள் - நர்மதா வெளியீடு, சென்னை, 1981

3. பொற்சிறையில் வாடும் புனிதர்கள் - முரசொலி வெளியீடு, யாழ்ப்பாணம், 1989

4. மரக்கொக்கு - நான்காவது பரிமாணம் வெளியீடு, கனடா, 1994 (இலங்கை அரசு, வடக்கு கிழக்கு மாகாண அமைச்சு, சாகித்தியப் பரிசில்களுடன், இலங்கை இலக்கியப் பேரவைப் பரிசினைப் பெற்றது)

5. காத்திருப்பு - பூபாலசிங்கம் புத்தகசாலை வெளியீடு, கொழும்பு, 1999 (வடக்குக் கிழக்கு மாகாண அமைச்சுப் பரிசினைப் பெற்றது)

6. கானலில் மான் - பூபாலசிங்கம் புத்தகசாலை வெளியீடு, கொழும்பு, 2002 (இலங்கை அரசு சாகித்தியப் பரிசினையும், இலங்கை இலக்கியப் பேரவைப்பரிசினையும் பெற்றது)

7. சிதைவுகள் - மீரா பதிப்பகம், கொழும்பு, 2003 (சிதைவுகள், பரம்பரை அகதிகள் நாவல்கள் அடக்கிய தொகுதி - தேசிய கலை இலக்கியப் பேரவை, சுபமங்களா பரிசுகளைப் பெற்றது)

9. பனையின் நிழல் - மயூரன் நினைவு வெளியீடு, அல்வாய், 2006

10. வெந்து தணிந்தது - குறுநாவல், ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய், 2018

11. தவறிப் போனவன் கதை  கொடகே சகோதரர்கள் வெளியீடு, கொழும்பு, 2010

12. குடிமைகள் - ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய், 2013 இரண்டாவது பதிப்பு, கறுப்புப் பிரதிகள், சென்னை, 2016 (சிறந்த நாவலுக்கான இலங்கை அரசின் சாஹித்திய விருதையும், கொடகே சாஹித்திய விருதையும் 2013 ஆண்டு பெற்றது.)

13. ஏதனம் - பூபாலசிங்கம் புத்தகசாலை வெளியீடு, கொழும்பு, 2016

14. மூவுலகு - கொடகே சகோதரர்கள் வெளியீடு, கொழும்பு, 2018

சிறுகதை தொகுப்புகள்

1. சொத்து - என்.சி.பி.எச் வெளியீடு, சென்னை, 1984
2. மாத்துவேட்டி - மல்லிகைப்பந்தல் வெளியீடு, யாழ்ப்பாணம், 1996
3. இன்னொரு புதிய கோணம் - பூமகள் வெளியீடு, கொற்றாவத்தை, 2007
4. ஒடுக்கப்பட்டவர்கள் - பூபாலசிங்கம் புத்தகசாலை வெளியீடு, கொழும்பு, 2010
5. தெணியானின் ஜீவநதிச்சிறுகதைகள் - ஜீவநதி கலை அகம், அல்வாய், 2012

கட்டுரைத் தொகுதிகள்

1. இன்னும் சொல்லாதவை வாழ்வனுபவங்கள், எழுத்து வெளியீடு, மதுரை, 2011
2. பூச்சியம் பூச்சியமல்ல - இலக்கிய அனுபவங்கள், என்.சி.பி.எச். வெளியீடு, சென்னை, 2013
3. நெஞ்சில் பதிந்துள்ள நினைவுகளில் பேராசிரியர் கா. சிவத்தம்பி - குமரன் புத்தக நிலையம், கொழும்பு, 2012 இரண்டாவது பதிப்பு, என்.சி.பி.எச். வெளியீடு, சென்னை, 2014
4. மனசோடு பழகும் மல்லிகை ஜீவா - ஹப்பி டிகிடல் சென்ரர் வெளியீடு, கொழும்பு, 2014
5. பார்க்கப்படாத பக்கங்கள் ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய், 2015

தொகுத்த நூல்கள்

1. டொமினிக் ஜீவாவின் "ஈழத்தில் இருந்து ஓர் இலக்கியக் குரல்"
2. "தேவரையாளி" இந்துக்கல்லூரி மலர் - இரண்டு வெளியீடுகள்,
3. "மல்லிகை ஜீவா" - (இணையாசிரியர்),
4. "அரும்புகளின் கீதங்கள்"
5. "மூடிமறைக்காதீர்"

இதுவரை வெளிவந்த ஆக்கங்கள்.

1. சிறுகதைகள் - 150 (சாதியம் பற்றிய சிறுகதைகள் 32. ஈழத்தில் சாதியம் பற்றிய அதிக சிறுகதைகளை எழுதியவர்)
2. கட்டுரைகள் 50க்கு மேல் (மல்லிகையில் இரண்டு விவாதங்களை ஆரம்பித்து முடித்துவைத்தவர் "முரசொலி"யில் வெளிவந்த சிறுகதை களை மாதந்தோறும் மதிப்பீடு செய்து, ஒருவருடகாலம் அம்பலத்தரசன் என்ற பெயரில் எழுதியுளார் வட அல்வை முருகேசனார் பவளவிழாவில் "சமூகப்போராட்டம்" பற்றி காத்திரமான நீண்ட கட்டுரையை எழுதி யுள்ளார்.)
3. நாடகங்கள் - "வாழ்வளித்தவன்" (யா/தேவரையாளி இந்துக் கல்லூரி கலைவிழாவில் அரங்கேற்றப் பெற்றது.) "தரகர் குடும்பம்" (ஆசிரிய

கலாசாலை - நடித்துமுள்ளார்) கல்லூரியில் நடித்த முக்கியமான நாடகம் "ஜூலிய சீசர்" - மார்க் அன்ரனி பாத்திரம்: வானொலி நாடகங்கள் 05

4. கவிதைகள் - நிருத்தன் என்ற புனைபெயரில் - 30 வரை

தெணியான் படைப்புக்கள் மீதான ஆய்வுகள்

1. "தெணியானின் சிறுகதைகள் - ஓர்ஆய்வு"
மீனலோஜினி, என். கலைமாணி, சிறப்பு, யாழ். பல்கலைக் கழகம்
2. "தெணியானின் நாவல்கள் - ஓர் நுண்ணாய்வு"
தேவகி ரமேஸ்வரன், கலைமாணி சிறப்பு, யாழ். பல்கலைக்கழகம்
5. "அறுபதுகளின் பின் ஈழத்துத் தமிழ் நாவல்களில் சாதிப் பிரச்சினைகள் - தெணியானின் நாவல்கள் பற்றிய நோக்கு"
யோகேஸ்வரி, தி. கலைமாணி சிறப்பு, பேராதனைப் பல்கலைக் கழகம்
6. "தெணியான் சிறுகதைகளில் சாதியம்"
வலென்ரீனா, ஜே. கலைமாணி சிறப்பு, யாழ். பல்கலைக் கழகம்
7. "தெணியானின் சிறுகதைகளில் மனிதம்"
அகிலன், வே. முதுகலைமாணி, யாழ். பல்கலைக் கழகம்
8. "நந்நி, சட்டநாதன், கேகிலா மகேந்திரன், தெணியான் சிறுகதைகளின் ஒப்பாய்வு"விமலா வேலுதாசன், முதுகலைமாணி, யாழ். பல்கலைக் கழகம்

பரிசுகள், விருதுகள், கௌரவங்கள்

1. யாழ் இலக்கிய நண்பர்கள் கழகம் நடத்திய சிறுகதைப் போட்டியில் 1966 முதற் பரிசு. (1971 முதல் போட்டிகளுக்கு எழுதுவதைக் கைவிட்டிருந்தார். (பின்னர் சுபமங்களா குறுநாவல் போட்டிக்கு எழுதியிருந்தார்) பரிசுகள் பற்றிய விபரங்கள் நூல்களுடன் தரப்பட்டுள்ளன

2. இந்து கலாச்சார அமைச்சு, இலக்கியப் பணியை கௌரவித்து 2003இல் "கலாபூசணம்" விருது வழங்கியது.

3. கட்டைவேலி நெல்லியடி பலநோக்கு கூட்டுறவு சங்கம் - கலாச்சாரப் பெருமன்றம் "மக்கள் படைப்பாளி" விருது வழங்கியது

4. ஊர் மக்கள் இரு தினங்கள் மணிவிழா எடுத்தனர். "நந்தி" தலைமையில் தேவரையாளி இந்துக் கல்லூரியில். 18.04.2003 டொக்ரர் க.வேலும்மயிலும் தலைமையில் 19.04.2003 பூமகள் சனசமூக நிலையத்தில்

5. சொந்த இல்லத்தில் செங்கையாழியான் அழைப்பில் 06.08.2002 படைப்பளிகள் சார்பில்

6. வெள்ளவத்தை, தமிழ்ச்சங்க வளாகத்தில், குமாரசாமி வினோதன் ஞபகார்த்த மண்டபத்தில் டொக்ரர் ஆ.மு. முருகானந்தன் தலமையில் 22.08.2002 மல்லிகைப் பந்தல் நடத்திய மணிவிழா

7. அல்வாய், கலை அகத்தில் அவை (FORUM) 30.01.2005 கலாநிதி த. கலாமணி நடத்திய விழா

8.. வடமராட்சி இலக்கிய நண்பர்கள் மதிய உணவளித்து கௌரவித்தார்கள்

9. மரக் கொக்கு பரிசு பெற்ற போது வட அல்வாயை சேர்ந்தவர்கள் அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலையில் விழா எடுத்தார்கள்.

10. வடமராட்சி அறிவோர் கூடலில் கௌரவித்தார்கள்.

11. "தெணியான் மணிவிழா" கொற்றை பி. கிருஷ்ணானந்தனை தெகுப்பாசிரியராகக் கொண்டு வெளியிடப் பெற்றது

12. வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேச செயலகம் பொன்னாடை போர்த்தி கௌரவித்தது

13. சாவகச்சேரி, கச்சாய் நூலகம் பொன்னாடை போர்த்தி கொளரவித்தது

14. தேவரையாளி இந்துக் கல்லூரி .பரிசளிப்பு விழாவில் பொன்னாடை போர்த்தி கௌரவித்தது.

15. மல்லிகை அட்டைப்படம் - மார்ச் 1989- பேராசிரியர் கா.சிவத்தம்பியின் அறிமுகம்.

16. ஞானம் – அட்டைப்பட அதிதி ஜூன் 2005

17. ஆளுநர் விருது 2008 (கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு மாகாண சபை) "தம் வாழ்நாளில் கலை இலக்கிய பண்பாட்டுத் துறைக்கு பெரும் பங்காற்றிய ஆளுமைகளுக்கு வழங்கப்படும் கௌரவ ஆளுநர் விருதுக்குரியவராக இவ்வாண்டு தாங்களும் ஒருவராக தெரிவு செய்யப் பட்டுள்ளீர்கள் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்" – செயலாளர்.

18. தினக்குரல் வீரகேசரி, உயிர்நிழல் பேட்டிகள் வெளிவந்தன.

19. மல்லிகை, ஞானம், பத்திரிகைகள் குறிப்பும் வாழ்த்தும் வெளியிட்டன.

(குறிப்பு – வடமராட்சி பிரதேசத்திலிருந்து முதல் ஆளுநர் விருது பெற்றவர்)

20. அவை - 23(2009.12.31) இல் நாவேந்தன் விருது, ஆளுநர் விருது பெற்றமைக்காக அல்வாய் கலைஅகத்தில் கௌரவிப்பு

21. அவை - 44 தெணியானின் 50 வருட எழுத்துலக வாழ்வைப் பாராட்டி கௌரவிப்பும் தெணியானின் இரு நூல்கள் வெளியீடும் இடம்பெற்றது.

22. அவை 46 இல் சாகித்தியரத்னா விருதுபெற்றமைக்கான பாரட்டுவிழா

23. ஜீவநதி சஞ்சிகையின் 106 ஆவது இதழ் தெணியானின் சிறப்பிதழாக வெளியானது.

24. தெணியானின் பவளவிழா கொற்றாவத்தை பூமகள் சனசமூக நிலையத்தில் ஜீவநதி ஏற்பாட்டில் க. பரணீதரன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தெணியானின் ஜீவநதி பவள விழா சிறப்பிதழும், தெணியானின் வெந்து தணிந்தது நாலும் வெளியிடப்பட்டது.

25. அவை இலக்கிய விருது.

* * *

# தெணியானின் குடும்ப விருட்ஷம்

தெணியான் + மரகதம்

தெணியானின் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

உமா + ஞானசீலன்

கார்த்திகேயன், ஆரணி, ஆதர்சன்

ஜானகி + அகிலன்

சகாப்தன், கானவர்ஷினி, ஆத்மீகன், சாருகேசினி

ஆதவன் + துஷ்யந்தி

ஆதித்யா, ஹம்ஸத்வனி, லலீசன்

துஷ்யந்தன் + அனோஜா

திலக்ஷயன், காவியன், அர்வின்

தெணியானின் உடன்பிறப்புகள், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்

கணேசன்* + பரமேஸ்வரி (*காலமானவர்)

நிமலன் + மாதினி

அபிரன், ப்ரமீனா

உமாகாந்தன் + காயத்திரி

அர்ச்சனா, அபிநயன், ஆர்த்திகா

நவரத்தினம் (க. நவம்) + ஷியாமளா

நரேன் + காயத்ரி

லீலா, ரூபன், ப்ரியா, லோகன்

கமலா* + சரவணமுத்து (*காலமானவர்)

அரவிந்தன் + சுமித்திரா

சாதனா, சாகித்யா, கீர்திகா

தேவகி + ரமேஸ்வரன்

மேனஜா, சாத்விகன், சாதுர்ஷன், தரணிகா

சுகந்தன் + மபித்ரா

தாமிரா, மேதகி

தமயந்தி + செல்வரத்தினம்

அபிஷயன், வர்ணிகா, சுஜானுகா

பிரஷாந்தன் + அபிரா

சாகித்தியன், அஹானா

மலர் + சிவராஜா

நவநீதன் + மைவிழி

தன்ஷிகா, அவந்திகா

வினோதன் + கீர்த்தனா

அஸ்மிதன், ரித்விஹா


சந்திரா + கந்தசாமி

கோசலா + சுகுமார்

ஆருஜன்





















இலங்கை முற்போக்கு
எழுத்தாளர்
காலம்:- 17-10-86.




Baranee Printers
Nelliady 0775991949